வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P . 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu வார மலர்




Email : news@eelanadu.lk மலர் : 03 29.05.2022 ஞாயிற்றுக்கிழமை இதழ் : 174 பக்கங்கள் : 20


07
கோட்டாபய பதவியில் தொடர்வதைத்தான் தமிழர்கள் விரும்புகிறார்களா?


08
21 ஆக மறு அவதாரம் எடுக்கும் 19



10
ஆட்சிக் கவிழ்ப்பு அச்சத்தில் கோட்டாவின் அதிரடிக் களையெடுப்பு!


11
உச்ச விலையில் தங்கம் தளம்பும் நகை வியாபாரம்

## ரணிலுடன் இணைந்து நாட்டை மீட்டெடுப்பேன்

### ஜனாதிபதி கோட்டாபய அறிவிப்பு



கொழும்பு, மே. 29

“புதிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைந்து பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்டெடுப் பேன்” - என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உறுதிபடத் தெரிவித்தார்.

அமைச்சர்களுடன் நடத்திய விசேட கலந்துரையாடலின்

19

## மாகாண சபையையும், தேர்தல் முறையையும் 21 ஆவது திருத்தம் ஊடாக மாற்றுவதற்கு சதி!

### எச்சரிக்கின்றார் மனோ கணேசன் எம்.பி.

கொழும்பு, மே. 29

குறைந்தபட்சமாகத் தமிழ், முஸ்லிம் பிரதிநிதிகளை பாராளுமன்றம், மாகாண சபைகள் ஆகியவற்றுக்குச் செல்ல வழி காட்டும் விகிதாசாரத் தேர்தல் முறை யையும் மாற்றவேண்டும் என்ற குரல்கள் தெற்கில் எழுகின்றன. இது தொடர்பில் தமிழ் பேசும் மக்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் கட்சிகள் விழிப்பாக இருக்க வேண்டும் என தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர்மனோ கணேசன் அனைத்து தமிழ், முஸ்லிம் கட்சிகளுக் கும் அறைகூவல் விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

21ஆம் திருத்தம் என்று

19

## மின்சார கட்டணமும் 3,4 மடங்கு உயரலாம்?

கொழும்பு, மே. 29

எதிர்வரும் காலங்களில் மின் கட்டணம் மூன்று அல்லது நான்கு மடங்கு அதிகரிக்கப்படலாம் என்று மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ் சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

நேற்று பிற்பகல் இடம்பெற்ற ஊடகவிய லாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து ரைத்தபோதே அவர் இதனைக்

19

# ரணில் பிரதமராகியமை ஜனநாயகத்துக்கு முரண்

## புதிய அரசு ஒன்றையே நாட்டு மக்கள் எதிர்பார்க்கின்றனர் என்கிறார் சுமந்திரன்



யாழ்ப்பாணம், மே. 29

**“ரணில் விக்கிரமசிங்க பிரதமராக பதவியேற்றமை ஜனநாயகத்துக்கு முரணான-விரோதமான செயற்பாடு. இதனைக் கூட்டமைப்பு ஒருபோதும் ஏற்றுக்கொள்ளாது. பிரதமர் ரணிலும் ஜனாதிபதி கோட்டாபயவும் பதவி விலகவேண்டும் என்பதே எமது நிலைப்பாடு.”**

**-இவ்வாறு தெரிவித்துள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன்.**

டான் தொலைக்காட்சியில் இன்று இரவு 7 மணிக்கு ஒளிபரப் பாகும் ‘ஸ்பொட்லைட்’ நிகழ்ச்சியில் பங்கேற்று கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அதில் அவர் மேலும் தெரிவிக் கையில்-

ஜனாதிபதி கோட்டாபய ராஜ பக்ஷ பதவி விலகவேண்டும் என் பதே நாட்டு மக்கள் அனைவரின தும் ஒட்டுமொத்த நிலைப்பாடாக உள்ளது. அவர் பதவி விலகுவதற் கான சூழ்நிலைகள் நெருங்கி வந்துகொண்டிருந்த நேரத் தில் ரணில் விக்கிரமசிங்க

19

## 11 பரல்களில் எரிபொருள்கள் பதுக்கி விற்ற இருவர் கைது!

### சுன்னாகம் பொலிஸார் நடவடிக்கை



யாழ்ப்பாணம், மே. 29

சுன்னாகம் பொலிஸ் பிரிவில் 11 பரல்களில் எரி பொருள்களைப் பதுக்கி வைத்திருந்த குற்றச்சாட்டில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

8 பரல்களில் மண்ணெண்ணெய், 2 பரல்களில் பெற்றோல் மற்றும் ஒரு பரல் டீசல் என்பனவே

19

## 9 வயது சிறுமி கடத்தப்பட்டு படுகொலையென சந்தேகம்!

### 20 பேரிடம் வாக்குமூலம் பதிவு

கொழும்பு, மே. 29

பண்டாரகம, அட் டலுகம பகுதியில் காணா மற்போயிருந்த 09 வய துச் சிறுமி நேற்று பிற்ப கல் சடலமாக மீட்கப்பட் டுள்ளார்.

அவர் படுகொலை செய்யப்பட்டிருக்கலாம் என பொலிஸார் சந்தே கம் வெளியிட்டுள்ளனர்.

அட்டுலுகம , எப்பிட்டமுல்ல பகுதியைச் சேர்ந்த

19

## மின்வெட்டு இன்று இல்லை

கொழும்பு, மே. 29

இன்று ஞாயிற்றுக் கிழமை மின்வெட்டு நடைமுறைப்படுத்தப் படமாட்டாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவின் தலைவர் ஜானக்க ரத்நாயக்க குறித்த

19

## காலிமுகத்திடல் போராட்டம் நேற்றுடன் 50 நாட்கள் நிறைவு

### போராட்டக்காரர்கள் மீது கண்ணீர் புகை தாக்குதல்!



கொழும்பு, மே. 29

கொழும்பு, கோட்டை உலக வர்த்தக மையத்திற்கு அருகில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களை கலைப்பதற்கு பொலி ஸார் நேற்றிரவு நீர்த்தாரை மற்றும் கண்ணீர்ப்புகை பிரயோகம் மேற் கொண்டதால் பதற்ற நிலை ஏற்

19

## இப்படியும் நடக்கிறது...!

பிரேமதாசா ஜனாதிபதி தேர்தலில் வெற்றிபெற்ற பின்னர், அவர் யாரை பிரதமராக நியமிப்பார் என்பதில் எல்லோர் கவனமும் திரும்பியிருந்த காலம் அது. அப்போது, ஐக்கிய தேசிய கட்சியில் அவருக்கு அடுத்த நிலையில் இருந்த ஒருவரே பிரதமராக நியமிக்கப்படுவார் என்ற எதிர்பார்ப்பு. ஆனால், கட்சியில் பலர் அடுத்த நிலை தலைவர்கள்.

லலித் அத்துலத் முதலி - தேசிய பாதுகாப்பு அமைச்சராக இருந்து யுத்தத்தை வழிநடாத்தியவர். காமினி திசாநாயக்க - மகாவலி அமைச்சராக இருந்து புகழ்பெற்றவர். இவர்களில் ஒருவரே பிரதமராக நியமிக்கப்படுவார் என்றே சகலரும் எதிர்பார்த்தனர். ஆனால், யாருமே எதிர்பார்க்காத டிங்கிரி பண்டா விஜேதுங்க பிரதமராக நியமிக்கப்பட்டார். இந்த நியமனம் நடைபெற்ற பின்னர் ஊடகம் ஒன்று எழுதிய குட்டிக்கதை ஒன்று இப்போது ஞாபகத்திற்கு வருகின்றது.

அன்று அதிகாலை நான்கு மணிக்கு பிரேமதாசவிடமிருந்து தொலைபேசி அழைப்பு. எப்போதும் காலை நான்கு மணிக்கே தினமும் தனது பணிகளை தொடங்குபவர் பிரேமதாசா என்று கூறப்படுவதுண்டு. உடனே புறப்பட்டு, தனது வாழைத்தோட்டம் இல்லத்திற்கு வருமாறு லலித்திடம் கேட்டிருந்தார்.

லலித் அத்துலத் முதலிக்கு உள்ளூர மகிழ்ச்சி, தனக்குத்தான் பிரதமர் பதவி. அதற்காகத்தான் அழைக்கின்றார் என்ற நம்பிக்கை.

அவர் பிரேமதாசவின் வீட்டுக்கு போய்ச் சேர்ந்தபோது, வரவேற்பு அறையில் காமினி அமர்ந்திருக்கிறார். லலித்துக்கு தூக்கி வாரிப்போட்டது. இது என்னடா, இருவரையும் அழைத்திருக்கிறார்? அப்போ, அழைத்திருப்பது வேறு எதற்காகவோ என்ற எண்ணம் வந்துவிடுகின்றது. இருவரும் வந்துவிட்ட செய்தி பிரேமதாசவுக்கு தெரிவிக்கப்பட்ட பின்னரும் அவர்களை உள்ளே அழைக்கவில்லை பிரேமதாசா. சில நிமிடங்களில் டி. பி. விஜேதுங்க வந்து சேர்ந்தார். அதன் பின்னரே மூவரும் ஒன்றாக அழைக்கப்பட்டனர்.

மூவரும் அவர் எதிரே அமர்ந்திருக்க, பிரேமதாசா முதலில் லலித்திடம் கேட்டார், இரண்டும் இரண்டும் எத்தனை?

ஒக்ஸ்போர்ட், ஹாவார்ட் பல்கலைக்கழகங்களின் பட்டதாரியான லலித்துக்கு இது தெரியாதா, என்ன? நான்கு என்று திமிருடன் பதிலளித்தார்.

அதே கேள்வியை இப்போது காமினியிடம் கேட்டார். கேம்பிறிட்ஜ் பட்டதாரியான காமினி, இது என்ன என்று புரியாதவராக, இரண்டும் இரண்டும் நான்கு. ஆனால், இரண்டையும் இரண்டையும் அருகருகே வைத்தால் இருபத்தி இரண்டு என்று பதிலளித்தார்.

இப்போது விஜேதுங்கவின் முறை. அவரைத் திரும்பிப் பார்த்தார் பிரேமதாசா, விஜேதுங்க சொன்னார், இரண்டும் இரண்டும் நான்குதான் சேர், ஆனால், நீங்கள் மூன்று என்றால் மூன்றுதான் என்று.

மற்றைய இருவரும் அழைத்தற்கு நன்றி சொல்லிவிட்டு, அங்கிருந்து வெளியேறினர். இதுதான் அந்தக் குட்டிக் கதை.

பிரதமர் பதவி என்பதும், நிறைவேற்று ஜனாதிபதி முறையில், வெறும் 'றப்பர் ஸ்டாம்ப்' பதவிபோலவே ஒவ்வொரு ஜனாதிபதி காலத்திலும் இருந்துவந்திருக்கின்றது. மகிந்த காலத்தில் டி. எம். ஜெயரத்ன, சந்திரிகா காலத்தில் ரட்னசிறி விக்கிரமரநாயக்க என்று இருந்தது. தாம் என்ன நினைக்கின்றோமோ அதனை செய்யக் கூடியவர்களையே அந்தப் பதவிக்கு நியமித்தனர். ஆனால் பிரேமதாசா, விடுதலைப் புலிகளின் தற்கொலைத் தாக்குதலில் படுகொலை செய்யப்பட, அவரது எஞ்சிய காலத்தை டி. பி. விஜேதுங்க ஜனாதிபதியாக இருந்து ஆட்சி செய்தது அவருக்கு கிடைத்த 'ஜக்பொட்' பரிசு.

எவர் ஒருவர் பதவிக்கு வந்தாலும், தன்னால் நியமிக்கக்கூடிய பதவிகளுக்கு தனக்கு நம்பிக்கையானவர்கள், நண்பர்களுக்கு அந்த பதவிகளை வழங்குவது வழக்கமான ஒன்றுதான். இதனால்தான் தனது நண்பர்களை ஒவ்வொரு பதவிக்கும் தேடித்தேடி ஜனாதிபதி கோட்டாபய நியமித்தார். இவ்வாறு அவர் நியமித்தவர்கள் அவரது நண்பர்கள் மாத்திரமல்ல, புலிகளுடனான யுத்தத்தில் ஒவ்வொரு படைப்பிரிவுக்கும் தலைமை தாங்கிய தளபதிகள். அவர்களை - அவர்களின் திறமையை, குறைத்து மதிப்பிடவும் முடியாதுதான். அதற்காக, நிர்வாக சேவை அதிகாரிகளின் பணிகளைச் செய்ய இராணுவ அதிகாரிகளை நியமித்தது சரி என்பதல்ல. ஜனாதிபதியாக பதவியேற்றதும் அவர் முதலில் எதிர்கொண்டது, கொரோனா நெருக்கடி. இந்த நெருக்கடியை கையாள அவர் தெரிவுசெய்தது இராணுவ தளபதியை. தனக்கு நிகராக தன் பக்கத்திலேயே எப்போதும் அவரை வைத்திருந்த ஜனாதிபதி கோட்டாபய, இப்போது அவரது பணிகளை விசாரணை செய்யவேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டிருக்கின்றார்.

ஜனாதிபதியின் வீட்டை போராட்டக்காரர்கள் திடீரென்று முற்றுகையிட்டபோதும் சரி, அதற்குப் பின்னர் மே ஒன்பதில் காலி முகத்திடல் போராட்டக்காரர்கள்மீது நடத்தப்பட்ட தாக்குதலின் போதும் சரி, அதன் பின்னர் நாடெங்கும் நடந்த வன்முறைகளின் போதும் சரி, இராணுவ தளபதி தனது கடமையை சரியாக செய்யவில்லை என்ற புகார் பல்வேறு தரப்பிடமிருந்தும் கிடைத்த நிலையிலேயே, இப்போது அதுபற்றி விசாரிப்பதற்காக ஜனாதிபதி குழுவை நியமித்திருக்கின்றார்.

ஏற்கனவே ஒரு தளபதிக்கு எதிராக இராணுவ நீதிமன்றில் விசாரணை நடாத்தியதால் ஏற்பட்ட விளைவு, சரத் பொன்சேகாவை முழுநேர அரசியலாளராக்கியது. இப்போது, மற்றுமொரு தளபதி மீதான விசாணை இன்னுமொருவரை அரசியலாளராக்குகின்றதா என்பதை பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

மேலே கூறிய இந்த சம்பவங்கள் நடப்பதற்கு சில தினங்களுக்கு முன்னர், அமெரிக்க தூதுவர் தனது ராஜீய விதிமுறைகளுக்கு புறம்பாக இராணுவ தளபதியை சந்தித்ததும் இவ்வாறு நடக்க காரணமாகியதா என்று அரசியல் விமர்சகர் பனங்காட்டான் கேள்வி எழுப்பியிருப்பதும் நியாயமான சந்தேகம்தான்.

**- ஊர்க்குருவி.**

# 21 ஐ அனுபவிக்கும் அதிகாரம் ரணிலுக்கு அறவே கிடையாது!

## அநுரகுமார திஸாநாயக்க சுட்டிக்காட்டு

கொழும்பு, மே. 29

"உத்தேச 21 ஆம் திருத்தத்தில் வழங்கப்படும் அதிகாரங்களை அனுபவிக்கும் உரிமை தற்போதைய பிரதமருக்கோ அல்லது அரசாங்கத்திற்கோ இல்லை. எனவே ஓராண்டு காலத்திற்குள் மக்கள் ஆணையை பெற்றுக்கொள்ளும் நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் எனவும், புதிய அரசாங்கமும் பிரதமருமே 21 ஆம் திருத்தத்தின் அதிகாரங்களை அனுபவிக்க முடியும் எனவும் மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

மக்கள் விடுதலை முன்னணியின் தலைமையகத்தில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

ஜனாதிபதியிடம் இருந்து அதிகாரங்கள் பரவலாக்கப்பட வேண்டும் என கூறும்போது அது பல்வேறு தரப்பை சென்றடைகின்றது. அதில் முக்கியமாக பிரதமருக்கும் அதிகாரங்கள் பகிரப்படுகின்றன.

பாராளுமன்றத்திற்கும் பகிரப்படுகின்றது. ஆனால் இப்போதுள்ள பிரதமர் மக்களினால் நிராகரிக்கப்பட்ட ஒருவர், அவருக்கு இந்த அரசியல் அமைப்பு திருத்தம் மூலமாக புதிய அதிகாரங்கள் கிடைக்கின்றன. ஆனால் அதனை அனுபவிக்கும் ஆணை அவருக்கு இல்லை. எனவே அவர் இந்த ஆசனத்தில் இருக்க தகுதியிலாதவர்.

எனவே இப்போதுள்ள பாராளுமன்றத்தின் கால எல்லையை குறைக்க வேண்டும் என்பதே எமது கோரிக்கையாகவும். எனவே மேலும் ஒரு வருடத்திற்குள் இந்த பாராளுமன்றத்தின் கால எல்லையை கட்டுப்படுத்தி அதன் பின்னர் புதிய பாராளுமன்றம் மற்றும் பிரதமர் தெரிவு செய்யப்படவேண்டும். அவர்களுக்கே 21



ஆவது திருத்தத்தின் அதிகாரங்கள் கிடைக்கவேண்டும்.

இப்போதுள்ள பிரதமருக்கு 21 ஆவது திருத்தத்தின் அதிகாரங்கள் கிடைக்க முடியாது. எனவே புதிய மக்கள் ஆணைக்காக பாராளுமன்றத்தின் காலஎல்லையை மட்டுப் படுத்தவேண்டும்.

அத்துடன் 21 ஆம் திருத்தத்தை நிறைவேற்றுவதில் மக்கள் விடுதலை முன்னணியின் சார்பில் சில யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. குறிப்பாக கட்சி தாவினால்

பாராளுமன்ற உறுப்புரிமை நீக்கப்பட வேண்டும், ஜனாதிபதிக்கு பொதுமன்னிப்பு வழங்கும் அதிகாரம் கட்டுப்படுத்தப்படவேண்டும், ஜனாதிபதிக்கு எந்தவொரு அமைச்சுப் பதவிகளையும் வகிக்க முடியாது , இரட்டைப் பிரஜாவுரிமை கொண்ட நபர்கள் அரசாங்கத்தில் எந்தவொரு முக்கிய பதவியிலும் அங்கம் வகிக்க கூடாது, அரசியல் அமைப்பு சபையினூடாகவே அமைச்சின் செயலாளர்கள் நியமிக்கப்படவேண்டும், மக்கள் பிரதிநிதிகளின் சொத்து விவரங்கள் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட குற்றச்சாட்டுகளுக்கு அமைய இலஞ்ச ஊழல் தடுப்பு ஆணைக்குழு விசாரணைகளை நடத்த முடியும் என்ற விடயங்களை உள்ளடக்கிய யோசனைகளை முன்வைத்துள்ளோம்-என்றார்.

(அ)

# பொருளாதார நெருக்கடியை ரணிலினால் வெல்லமுடியும்

## அமெரிக்கா நம்பிக்கை

கொழும்பு, மே. 29

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் ,சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தனவை நேற்று முன்தினம் சந்தித்து பேச்சு நடத்தினார்.

அரசியல் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்தி தற்போதைய பொருளாதார நெருக்கடியை வெற்றிகொள்ள புதிய பிரதமர் உள்ளிட்ட அரசாங்கத்தினால் முடியும் என தான் நம்புவதாக அவர் இதன்போது குறிப்பிட்டார்.

அதேபோன்று மக்கள் எதிர்பார்க்கும் அரசியல் மறுசீரமைப்புகளை மேற்கொண்டு ஜனநாயகத்தைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தையும் அவர் வலியுறுத்தினார்.

இலங்கை - ஐக்கிய அமெரிக்க நாடாளுமன்ற நட்புறவுச்சங்கத்தின் ஊடாக இரு நாடுகளுக்குமிடையிலான உறவுகளை மேலும் மேம்படுத்தஎதிர்பார்ப்பதாகவும் ஜூலி சங் தெரிவித்தார்.

பாராளுமன்ற பெண் உறுப்பினர்களின் ஒன்றியம் மேற்கொள்ளும் பணிகளை பாராட்டிய அவர், பாராளுமன்றத்தில் பெண்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்கும் அவசியம் குறித்தும் கலந்துரையாடினார்.



இலங்கையில் ஜனநாயகத்தை வலுப்படுத்த ஐக்கிய அமெரிக்கா தொடர்ந்தும் வழங்கிவரும் பங்களிப்புக்குச் சபாநாயகர் தனது நன்றியைத் தெரிவித்தார்.

ஜூலி சங், இந்நாட்டுக்கான ஐக்கிய அமெரிக்க தூதுவராக நியமிக்கப்பட்டதை அடுத்து சபாநாயகருடன் இடம்பெற்ற முதலாவது சந்திப்பு இதுவாகும். (அ)

# மற்றுமொரு டீசல் கப்பல் இன்று இலங்கை வருகிறது

கொழும்பு, மே. 29

டீசலை ஏற்றிக்கொண்டு மற்றுமொரு கப்பல் இன்று நாட்டை வந்தடைய உள்ளதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

நாட்டுக்கு வந்துள்ள மசகு எண்ணெயை கப்பலில் இருந்து இறக்கும் பணி ஏற்கனவே தொடங்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

கொலன்னாவ மற்றும் முத்துராஜவெல முனையங்களில் தற்போதுள்ள எரிபொருள் இருப்புக்கள் தொடர்பிலும் அமைச்சர் தெளிவுபடுத்தினார்.

17,077 மெற்றிக் தொன் டீசல், 1,072 மெற்றிக் தொன் சுப்பர் டீசல், 37,391 மெற்றிக் தொன் 92 பெற்றோல், 6,142 மெற்றிக் தொன் 95 பெட்ரோல், 2,437 மெற்றிக் தொன் ஜெட் ஏ1 எரிபொருள் இருப்பதாக அவர் கூறினார்.

எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு டீசல் மற்றும் பெற்றோல் விநியோகம் தொடரும் என இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

(அ)

# அரச சேவையின் செலவினங்களை கட்டுப்படுத்த அதிரடி நடவடிக்கை!

## ஒப்பந்த நியமனங்கள் இடைநிறுத்தம்

கொழும்பு, மே. 29

**ஓய்வு பெற்ற அரச உத்தியோகத்தர்களை ஒப்பந்த அடிப்படையில் மீள் நியமனம் செய்வதை மறு அறிவித்தல் வரை இடைநிறுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.**

அரச சேவை ஆணைக்குழுவின் அலுவலகம் இது தொடர்பான தீர்மானம் தொடர்பில் அனைத்து அமைச்சுக்களின் செயலாளர்கள் மற்றும் திணைக்களத் தலைவர்களுக்கு அறிவித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

நிதி அமைச்சின் செயலாளரினால் அரச சேவையின் செலவினங்களைக் கட்டுப்படுத்துவதற்காக அண்மையில் வெளியிடப்பட்ட சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பொதுமக்களின் பணத்தை சிக்கனமாக பயன்படுத்தவேண்டியதன் அவசியத்தை கருத்திற் கொண்டு இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி, ஓய்வுபெற்ற அரச உத்தியோகத்தர்களை ஒப்பந்த அடிப்படையில் மீண்டும் பணியமர்த்துவதற்கான விண்ணப்பங்களை மறு அறிவித்தல் வரை சமர்ப்பிக்கவேண்டாம் என அனைத்து அமைச்சுக்களின் செயலாளர்கள் மற்றும் திணைக்களத் தலைவர்களுக்கு பொதுச் சேவை ஆணைக்குழுவின் அலுவலகம் அறிவுறுத்தியுள்ளது.

இனிமேல், அரச துறையில் வெற்றிடமாக உள்ள பணியிடங்களை தற்போதைய அதிகாரிகள் மூலம் நிரப்புவதில் கூடுதல் கவனம் செலுத்துமாறு அரச சேவை ஆணைக்குழு அலுவலகம் உத்தரவிட்டுள்ளது. (அ)

# இலங்கைக்கு மயக்க மருந்துகளை அன்பளிப்பாக வழங்கிய பிரான்ஸ்

கொழும்பு, மே. 29

நாட்டில் பற்றாக்குறையாகவுள்ள மயக்க மருந்துகளில் ஒரு தொகை, பிரான்ஸ் அரசாங்கத்தினால் இலங்கைக்கு அன்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

இந்த மருந்துகள் மூன்று மாதங்களுக்கு போதுமானவை என சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

வைத்தியசாலைகளில் சில மருந்துகளுக்கு தட்டுப்பாடு நிலவுகின்ற போதிலும், நோயாளர் பராமரிப்பு சேவைகள் சிக்கலின்றி முகாமைத்துவம் செய்யப்படுவதாக அமைச்சர் கூறினார்.

இதேவேளை, வைத்தியசாலையில் தற்போது பற்றாக்குறையாகவுள்ள மருந்துகளை விரைவாக விநியோகிக்கும் வேலைத்திட்டம் ஒன்றும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

ஆசிய அபிவிருத்தி வங்கி, உலக வங்கி உள்ளிட்ட நிறுவனங்களுடன் இது குறித்து கலந்துரையாடியுள்ளதாகவும் சுகாதார அமைச்சர் கூறினார்.

இதேவேளை, வைத்தியசாலையில் பற்றாக்குறையாக உள்ள மருந்துகள் தொடர்பான அறிக்கை பிரதமர் அலுவலகத்துக்கு அனுப்பப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (அ)

# எழுதுமட்டுவாழில் கைக்குண்டு மீட்பு

யாழ்ப்பாணம், மே. 29

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட எழுதுமட்டுவாழ் பகுதியில் துர்க்கை அம்மன் ஆலய வீதியில் உள்ள தனியார் காணி ஒன்றில் வெடிக்காத நிலையில் கைக் குண்டு ஒன்று அடையாளம் காணப்பட்டுள்ளது.

அந்தப் பகுதியில் கைக்குண்டு ஒன்று காணப்படுவதாக இராணுவத்தினருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் கைக்குண்டை மீட்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கொடிகாமப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (அ)

# மருத்துவ பொருட்களை இலங்கைக்கு நிவாரணமாக வழங்கியது இந்தியா

கொழும்பு, மே. 29

25 தொன்களுக்கும் அதிக மான எடையுள்ள மருத்துவப் பொருட்களை இந்தியா இலங்கைக்கு நிவாரணமாக வழங்கியுள்ளது.

இந்திய பதில் தூதுவர் சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெலவிடம் இந்த மருத்துவப் பொருட்களைக் கையளித்தார்.

குறித்த மருத்துவப் பொருட்களின் பெறுமதி சுமார் 260 மில்லியன் இலங்கை ரூபாய் என அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)




# ஜூன் முதலாம் திகதி திறைசேரி உண்டியல்கள் ஏலத்தில் விற்பனை

கொழும்பு, மே. 29

எதிர்வரும் ஜூன் முதலாம் திகதியன்று ஏலவிற்பனையினூடாக 83,000 மில்லியன் ரூபா வுக்கான திறைசேரி உண்டியல்கள் ஏலத்தில் விடப்படவுள்ளன.

இலங்கை மத்திய வங்கி இதனை அறிவித்துள்ளது.

இதன்படி, 91 நாட்களில் முதிர்வடையும் 40,000 மில்லியன் உண்டியல்களும், 182 நாட்களில் முதிர்வடையும் 23,000 மில்லியன் உண்டியல்களும், 364 நாட்களில் முதிர்வடையும் 20,000 மில்லியன் உண்டியல்களும் ஏலத்திற்கு விடப்பப்படவுள்ளன.

அரசாங்கப் பிணையங்களில் உள்ள முதனிலை வணிகர்களிடம் இருந்து விலைக்குறிப்பீடுகள் கோரப்படுகின்றன.

இலங்கை மத்திய வங்கியால் வழங்கப்பட்ட இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு வசதியூடாக மட்டுமே விலைக்குறிப்பீடுகள் அனுப்பப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# அஜித் ரோஹணவுக்கு இடமாற்றம்

கொழும்பு, மே. 29

உடன் அமுலாகும் வகையில் இரண்டு சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர்கள் இடமாற்றப்பட்டுள்ளனர்.

அதன்படி, குற்றவியல் மற்றும் போக்குவரத்துப் பிரிவின் சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தென் மாகாணத்துக்கு இடமாற்றப்பட்டுள்ளார்.

அதேபோல், தென் மாகாணத்துக்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் ராஜித ஸ்ரீதமிந்த கிழக்கு மாகாணத்துக்கு இடமாற்றப்பட்டுள்ளார் என அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# வவுனியா வர்த்தக நிலையம் முன் தலை சிதறிய நிலையில் சடலம்!

வவுனியா, மே. 29

வவுனியா நகரில் வர்த்தக நிலையத்திற்கு முன்பாக ஆணொருவரின் சடலம் ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

வவுனியா நகரில் பஜார் வீதியில் அமைந்துள்ள வர்த்தக நிலையம் ஒன்றின் முன்பாக தலை சிதறிய நிலையில் காயங்களுடன் ஒருவர் காணப்பட்ட நிலையில் உடனடியாக மக்கள் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதித்தனர். எனினும் அவர் முன்பதாகவே உயிரிழந்துள்ளதாக வைத்தியர் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் இரவு 11.45 மணியளவில் வவுனியா பஜார் வீதியிலுள்ள வர்த்தக நிலையத்தின் முன்பகுதியில் தலை சிதறிய நிலையில் வீதியின் நடைபாதையில் ஒருவர் இரத்த வெள்ளத்தில் கிடப்பதை அவதானித்த மக்கள் அவரை வைத்தியசாலையில் அனுமதித்தனர்.

எனினும் அவர் முன்பதாகவே உயிரிழந்துவிட்டார் என தெரிவிக்கப்பட்டது.

இவ்விடயம் தொடர்பில் விசாரணைகளை வவுனியா பொலிஸார் முன்னெடுத்தனர்.

குறித்த நபர் வர்த்தக நிலையத்தின் மேற்பகுதியில் விடுதி அமைந்துள்ள மூன்றாம் மாடிக் கட்டடத்திலிருந்து கீழே வீழ்ந்து தற்கொலை செய்திருக்கலாம் என ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

குறித்த நபர் இந்தியாவைச் சேர்ந்த 36 வயதுடைய சன்டிப் மலிக் என அடையாளம் காணப்பட்டார். இவர் விடுதியில் தங்கியிருந்து நகை வேலை செய்பவர் என்பதும் தெரியவந்துள்ளது.

சடலம் பிரேத பரிசோதனைகளுக்காக வவுனியா மாவட்ட பொது வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இது கொலையா, தற்கொலையா அல்லது தவறி வீழ்ந்து இறந்துள்ளாரா என்ற கோணங்களில் தடயவியல் பொலிஸாரின் உதவியுடன் மேலதிக விசாரணைகளை வவுனியா பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (அ)

# 240 லீற்றர் பெற்றோலுடன் ஒருவர் கைது

கொழும்பு, மே. 29

பதுக்கி வைத்து அதிக விலைக்கு விற்பனை செய்யப்படுவதாக கிடைத்த தகவலை அடுத்து 240 லீற்றர் பெற்றோலுடன் 50 வயது நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பதுளை மாவட்டம், மடுல்சீமை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிட்டமாறுவை பகுதியில் வியாபார நிலையத்தில் அதிக விலைக்குப் பெற்றோல் விற்பனை செய்யப்படுகின்றது எனப் பொலிஸாருக்குத் தகவல் கிடைத்துள்ளது. இதையடுத்து மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போது, கொள்கலன்களில் இருந்து மொத்தமாக 240 லீற்றர் பெற்றோல் மீட்கப்பட்டுள்ளது.

கைதானவர், பிட்டமாறுவ பகுதியைச் சேர்ந்தவராவார்.

குறித்த சந்தேகநபர் பதுளை நீதிவான் முன்னிலையில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளார்.

# அரச ஊடகங்களின் தலைவர்களை இராஜினாமா செய்யுமாறு உத்தரவு

கொழும்பு, மே. 29

அரசாங்கத்தின் அனைத்து அச்சு மற்றும் மின்னணு ஊடகங்களின் தலைவர்களையும், பணிப்பாளர் சபை உறுப்பினர்களையும் பதவி விலகுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

வெகுசன ஊடக அமைச்சர் பந்துல குணவர்தன இந்த அறிவிப்பை விடுத்துள்ளதாக தெரிவித்தார்.

ரூபவாஹினி, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், லேக் ஹவுஸ் உள்ளிட்ட அரச ஊடக நிறுவனங்களின் தலைமை பதவிகளிலேயே இந்த மாற்றம் செய்யப்படுகிறது.

இதற்கிடையே, சுயாதீன தொலைக்காட்சி ஊடக வலையமைப்பின் தலைவர் நிரோஷன் பிரேமரத்ன தனது ராஜினாமா கடிதத்தை கையளித்துள்ளார். (அ)

# ரஞ்சனை சந்திக்கவுள்ள நீதி அமைச்சர் விஜேதாஸ

கொழும்பு, மே. 29

தற்போது சிறைத்தண்டனை அனுபவித்து வரும் ரஞ்சன் ராமநாயக்கவை சந்தித்து அவருக்கு தேவையான வசதிகளை செய்து கொடுப்பதற்கு தீர்மானித்துள்ளதாக நீதியமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

ஜனாதிபதி மன்னிப்பு வழங்கி விடுதலை செய்ய நடவடிக்கை எடுப்பதற்கு முன்னர், அவரைச் சந்தித்துப் பேசி இவ்விடயம் தொடர்பில் அவரது கருத்துக்களைப் பெறவேண்டும் எனவும் விஜேதாஸ மேலும் கூறினார்.

எதிர்க்கட்சி அரசியல்வாதிகள் ரஞ்சனை விடுவிக்கக் கோருகின்றனர். கட்சிகளின் கோரிக்கையை விட, ரஞ்சனை பிரதிநிதித்துவப்படுத்தும் கலைஞர்களின் குரலைக் கேட்பதன் முக்கியத்துவத்தை கருத்திற் கொண்டு ரஞ்சனை விடுவிக்க தன்னால் முடிந்த அனைத்தையும் செய்வதாகவும் விஜேதாஸ ராஜபக்ஷ குறிப்பிட்டார். (அ)

# கச்சதீவை வழங்க முடியாது அதில் உடன்பாடு கிடையாது

## சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவிப்பு

கொழும்பு, மே. 29

**கச்சதீவை வழங்க முடியாது அதில் உடன்பாடு இல்லை எனவும் தன்னுடைய நிலைப்பாடு அதுவே என பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்துள்ளார்.**



தமிழகத்துக்கு விஜயம் மேற்கொண்ட இந்தியப் பிரதமர் மோடியிடம் கச்சதீவை மீட்பதற்குரிய பொருத்தமான நேரம் இதுவென தமிழக முதலமைச்சர் கோரிக்கை விடுத்திருந்தார்.

இது தொடர்பில் வினவிய போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

வடக்கு தமிழர்கள் குறிப்பாக கடற்தொழிலாளர்களின் நிலைப்பாடு கச்சத்தீவை வழங்க முடியாது என்பதுவே. அது எங்கள் கடற்தொழிலாளர்களுக்கு பாதிப்பாக அமையும். எனவே கச்சதீவை வழங்க முடியாது. அதற்கான வாய்ப்பு இல்லை.

தமிழக முதலமைச்சர் தமிழக கடற்தொழிலாளர்களின் கோரிக்கையை ஏற்று அவ்வாறு ஒரு கோரிக்கையினை விடுத்திருக்கலாம். ஆனால் அதற்கான வாய்ப்புக்கள் இல்லை.

தமிழக முதலமைச்சரின் இந்தக் கோரிக்கை தொடர்பில் தமிழக மற்றும் ஈழத்தமிழ் உறவில் பாதிப்புக்கள் ஏற்படாது. ஒரு விடயத்தில் வெவ்வேறு கருத்துக்கள் இருக்கலாம். ஆனால் அது உறவில் பாதிப்பை ஏற்படுத்தாது-என்றார். (அ)

# ஜப்பான், இந்தியாவுக்கு பிரதமர் ரணில் நன்றி

கொழும்பு, மே. 29

இலங்கைக்கான வெளிநாட்டு உதவி கூட்டினை அமைப்பதற்கான முன்யோசனை தொடர்பாக ஜப்பானும் இந்தியாவும் சாதகமான பதில் வழங்கியுள்ளதாக பிரதமர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

இதற்காக, ஜப்பான் மற்றும் இந்தியாவுக்கு தாம் நன்றி தெரிவிப்பதாகவும் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் நெருக்கடியான சூழலில் இந்தியாவும் ஜப்பானும் இணைந்து பணியாற்றுவதற்கு இணங்கியுள்ளதாக ஜப்பான் அரசாங்கம் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# இளையோரை முன்னிறுத்தி விரைவில் புதிய கட்சி உதயம்

கொழும்பு, மே. 29

இலங்கையில் புதிய அரசியல் கட்சி ஒன்றை ஆரம்பிப்பதற்கான இரகசியப் பேச்சுக்கள் தற்போது இடம்பெற்று வருவதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த புதிய கட்சிக்கு இதுவரை 10 பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பல சிவில் சமூக அமைப்புகள் ஆதரவு தெரிவித்துள்ளனர் என கூறப்படுகிறது.

ஊழல் குற்றச்சாட்டுகள் அற்ற இளைய தலைமுறையினரை அரசியலில் களமிறக்கி புதிய அரசியல் கட்டமைப்பை உருவாக்குவதே இந்த புதிய கட்சியின் நோக்கம் என தெரிவிக்கப்படுகிறது. (அ)

# இலங்கையில் கட்டுமானத் தொழில் சார்ந்த 12 இலட்சம் பேர் வேலையிழக்கும் அபாயம்!

கொழும்பு, மே. 29

நாட்டில் தற்போது நிலவும் நெருக்கடியான சூழ்நிலை காரணமாக கட்டுமானத் தொழில்துறை சார்ந்த சுமார் 12 இலட்சம் பேர் அடுத்த மாதம் முதல் வேலையிழக்கும் அபாயத்தில் உள்ளதாக இலங்கை தேசிய கட்டுமான சங்கம் தெரிவித்துள்ளது.

கட்டுமானத் தொழில் துறையில் ஈடுபட்டுள்ள சுமார் 75 வீதம் தொழிலாளர்கள் இவ்வாறு வேலை இழக்க நேரிடும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் 800,000 முதல் 900,000 வரையிலான பணியாளர்கள் கட்டுமானத் துறையில் ஈடுபட்டுள்ளனர். கிட்டத்தட்ட 300,000 தொழிலாளர்கள் கட்டுமான தொழில்துறையுடன் தொடர்புடைய மறைமுக வழிகளில் வருவாய் ஈட்டுவோராக உள்ளனர்.

இந்நிலையில் தற்போது இலங்கையில் 90 சதவீதமான கட்டுமானப் பணிகள் முற்றாக நிறுத்தப்பட்டுள்ளதாக தேசிய கட்டுமான சங்கத்தின் தலைவர் எம்.டி. போல் குறிப்பிட்டுள்ளார்.

இதனால் கட்டுமானத் தொழில்துறை சார்ந்த மற்றும் அதனுடன் மறைமுகத் தொடர்புடைய சுமார் 12 இலட்சம் பேர் அடுத்த மாதம் முதல் வேலையிழக்கும் அபாயத்தில் உள்ளனர் எனவும் அவர் கூட்டிக்காட்டியுள்ளார். (அ)

# யாழ். ஒருங்கிணைப்பு குழு தலைவரை தற்போதுள்ள அரசுதான் தீர்மானிக்கும்

## அமைச்சர் டக்ளஸ் கூறுகிறார்

யாழ்ப்பாணம், மே. 29

யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவர் யார் என்பதை தற்போதைய அரசே தீர்மானிக் கும். ஆனால் நான் அமைச்சரவை அந்தஸ்துள்ள தமிழ் அமைச்சர் என்ற ரீதியில் யாழ்., கிளிநொச்சி மாவட்ட மக்களுக்கு என்னால் முடிந்த சேவையை செய்வேன். அதில் யாரும் தலையிட முடியாது. யாரும் தடுக்கவும் முடியாது என கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்தில் உள்ள பொருளாதார நெருக்கடி நிலை தொடர்பில் ஆராயும் விசேட கூட்டம் நேற்று யாழ். மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்ட பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.



தற்போது கோட்டா- ரணில் ஆட்சி இடம்பெறுகின்றது. யாழ்., கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவர் பதவி யாருக்கும் வழங்கப்படவில்லை. எனவே நீங்கள்தான் யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவரா என ஊடகவியலாளர் ஒருவர் கேட்டதற்கு பதில் அளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அதை அரசாங்கம் தான் தீர்மானிக்க வேண்டும். யாரை நியமிக்க தீர்மானிக்கிறார்கள் என்று எனக்கு தெரியாது. ஆனால் எனக்கு ஒரு கடமை உள்ளது. கிளிநொச்சி, யாழ்ப்பாண மாவட்டங்களில் ஒரு மூத்த பாராளுமன்ற உறுப்பினர் மற்றும் அமைச்சரவை அந்தஸ்துள்ள ஒரு தமிழ் அமைச்சர் என்ற ரீதியில் எனது மக்களுக்கு என் சேவை தொடரும். அதனை யாரும் தடுக்க முடியாது-என்றார்.

கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் ரணில் விக்ரமசிங்க ஆகியோர் பதவி விலகவேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்த கருத்து தொடர்பில் ஊடகவியாளர்கள் கேட்டபோது,

அவருடைய சுபாவம் அப்படி தான். ஒரு கொலை இடம்பெற்றால் கொலைகாரன் காசை கொடுத்து காப்பாற்றச் சொன்னால் காப்பாற்றுபவர்தான் சுமந்திரன்-என்றார்.

யாழ். மாவட்டத்தில் மக்கள் எதிர்நோக்கும் பொருளாதார நெருக்கடி தொடர்பில் ஆராயும் விசேட கூட்டம் யாழ்.மாவட்ட செயலகத்தில் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபரின் தலைமையில் இடம்பெற்றது.

இந்த கூட்டத்தில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த அனைத்து பிரதேச செயலர்கள், யாழ்.மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் மற்றும் கடற்றொழில் திணைக்களம் மற்றும் ஏனைய துறை சார் அதிகாரிகள் கலந்துகொண்டனர்

யாழ். மாவட்டத்தில் பொது மக்கள் எதிர்நோக்கும் அத்தியாவசிய பொருட்கள் மற்றும் எரிபொருள் மற்றும் எரிவாயு விநியோகம் மற்றும் பல்வேறு விடயங்கள் தொடர்பில் இதில் ஆராயப்பட்டதுடன் அதற்குரிய தீர்வும் எட்டப்பட்டது. (அ-03)

# பலமுறை எரிபொருள் வாங்க முயன்ற 1,200 பேர் அடையாளம் காணப்பட்டனர்

கொழும்பு, மே. 29

எரிபொருள் விநியோகத்துக்கு எதிராக வீதிகளை மறித்து போராட்டம் நடத்துபவர்கள், எரிபொருளைப் பெற்றுக்கொள்வதற்காக வரிசையில் நிற்கவில்லை என்று தெரியவந்துள்ளதாக மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட அலைபேசி செயலி மூலம் எரிபொருள் சேகரிக்கும் நோக்கில் நேற்று முன் தினம் மாத்திரம் பல தடவைகள் எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்குச் சென்ற ஆயிரத்து 200 இற்கும் அதிகமானவர்களை பொலிஸார் அடையாளம் கண்டுள்ளதாகவும் எரிசக்தி அமைச்சர் குறிப்பிட்டார். (அ)

# மோட்டார் சைக்கிள்கள், ஓட்டோக்களுக்கு 95 ஒக்ரைன் பெற்றோல் வழங்கப்படாது

கொழும்பு, மே. 29

மோட்டார் சைக்கிள் மற்றும் ஓட்டோக்களுக்கு 95 ஒக்ரைன் பெற்றோல் விநியோகத்தை உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் இடைநிறுத்துவதற்கு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தீர்மானித்துள்ளது.

மோட்டார் சைக்கிள்கள் மற்றும் ஓட்டோக்களுக்கு 92 ஒக்ரைன் பெற்றோல் மாத்திரமே மறு அறிவித்தல் வரை வழங்கப்படும் என்று கூட்டுத்தாபனத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

நாட்டில் தற்போதுள்ள எரிபொருள் இருப்புக்களை மையமாக வைத்து இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (அ)

ஈழநாடு
Eelanadu
29.05.2022 ஞாயிற்றுக்கிழமை
பிலவ வருடம், வைகாசி 15

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

# இந்தியாவின் கவனத்திற்கு?

சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக்கான நிகழ்ச்சித் திட்டம் நடைமுறைக்கு வரும்வரையில் இந்தியாவின் உதவிகள் தொடர வேண்டுமென்று, இலங்கை வலியுறுத்தியிருக்கின்றது. இந்தியாவிற்கான தூதுவர் மிலிந்த மொறகொட, இந்திய நிதியமைச்சருடனான சந்திப்பின் போது மேற்படி வேண்டுகோளை விடுத்திருக்கின்றார். இலங்கை நெருக்கடி நிலையிலிருந்து மீள்வதற்கு, இந்தியா தொடர்ந்தும் உதவுமென்று இந்திய பிரதமர் நரேந்திர மோடி, சில தினங்களுக்கு முன்னர் தெரிவித்திருந்தார்.

ஓர் உடனடி அயல்நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு உதவுதல் என்னுமடிப்படையில், இந்தியா தொடர்ந்தும் உதவி வருகின்றது. இன்றைய நிலையில், இந்தியாவை தவிர வேறு எந்தவொரு நாடும் இலங்கைக்கு உதவவுமில்லை. இதேவேளை, இந்தியாவின் உதவிகள், சீனாவின் பிடியிலிருந்து கொழும்பை மீட்பதற்கு பயன்படுவதாகவும் சில இந்திய ஊடங்கள் கூறுகின்றன. இந்த மதிப்பீடு சிக்கலானது. இந்தியா தொடர்பான கடந்தகால அணுமுறைகளைக் கருத்தில்கொண்டு சிந்திப்பதனால், சிங்கள ஆளும் வர்க்கத்தின் அணுகுமுறைகளை மேலோட்டமாக விளங்கிக்கொள்வது சிக்கலானதாகும்.

இலங்கைக்கு நெருக்கடி ஏற்படுகின்ற போதெல்லாம், இந்தியாவே உடனடியாக உதவியிருக்கின்றது. இது, ஒரு பிராந்திய விதியாகவே இருக்கின்றது. ஜே.வி.பி கிளர்ச்சியால் நிலைகுலையும் நிலைமை ஏற்பட்டபோது, இந்தியாவின் உதவியின் மூலமே கொழும்பு தப்பிப் பிழைத்தது. விடுதலைப் போராளிகளுக்கு ஆயுதப் பயிற்சியை வழங்கிய போதிலும்கூட, அவர்களது போராட்டம் தனிநாட்டை நெருங்க முடியாதவாறு, இந்தியா தடைகளை ஏற்படுத்தியிருந்தது.

அன்று இந்தியா ஆதரித்திருந்தால், தனிநாடு உருவாவதை எவராலும் தடுத்திருக்க முடியாது. இந்த அடிப்படையில் சிந்தித்தாலும், கொழும்பிற்கு இந்தியா உதவித்தான் இருக்கின்றது. இப்போது, இலங்கை பொருளாதார நெருக்கடியால் தடுமாறுகின்றபோதும், இந்தியாவே கைகொடுத்து வருகின்றது. ஆனால், இதற்கு கைமாறாக கொழும்பு எவ்வாறு நடந்து கொள்ளும்?

கடந்த காலத்தில் இடம்பெற்ற விடயங்கள் எவையும் கொழும்பின் நன்றியை - பொறுப்புணர்வை நிரூபிக்கவில்லை. இந்திய - பாகிஸ்தான் யுத்தத்தின்போது கொழும்பு, இந்தியாவின் பக்கம் நிற்கவில்லை. தனிநாடு உருவாகும் முயற்சியை இந்தியா ஆதரிக்காதபோதும், எவ்வித நன்றியுணர்வுமில்லாமல் இந்திய படைகளை வெளியேறுமாறு கோரி, வெயேற்றியது. இந்தியாவின் கவலைகளை, பாதுகாப்பு கரிசனைகளை புறம் தள்ளி, சீனாவை வரவேற்றது. கிழக்கு கொள்கலன் முனைய உடன்பாட்டை இரத்துச் செய்து, இந்தியாவை அவமானப்படுத்தியது. இந்தியாவின் ஆற்றல், பலம் அனைத்தையும் புறம்தள்ளியே, சிங்கள ஆளும்வர்க்கம் கடந்த காலத்தில் செயற்பட்டிருக்கின்றது. இந்தியாவின் உடனடி அயல்நாடாக இருந்தும், நடுநிலை வெளிவிவகாரக் கொள்கையென்னும் அடிப்படையில், இந்தியாவின் வரலாற்று எதிரியான பாகிஸ்தானுடன் நெருக்கமான உறவை பேணிவருகின்றது. இந்தியாவின் போட்டி நாடான சீனாவுடனும் நெருக்கமான உறவை பேணிவருகின்றது. இந்தியாவின் கரிசனைகளை மீறி, அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீன நிறுவனத்திற்கு, 99 வருட குத்தகைக்கு வழங்கியது. துறைமுக நகரத்திட்ட உடன்பாட்டை செய்தது.

இலங்கையின் கடந்தகால அணுமுறைகள், எதிர்காலத்தில் கொழும்பு எவ்வாறு நடந்து கொள்ளுமென்னும் முன்னெச்சரிக்கையை வழங்குகின்றது. இந்தியா தொடர்ந்தும் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் குழந்தையான 13ஆவது திருத்தச்சட்டத்தை அமுல்படுத்துமாறு கோரிய போதிலும், அதனை உதட்டளவில் ஆதரித்துவிட்டு, நடைமுறையில் இந்தியாவின் கோரிக்கைக்கு எதிராகவே சிங்கள ஆளும் வர்க்கம் செயற்பட்டுவந்திருக்கின்றது. இந்தியா இந்த விடயங்களை கருத்தில் கொண்டிருக்கின்றதா - கருத்தில் கொள்ளுமா? இந்தியாவே கதியென்று கூறும் - அதில் உறுதியாகவும் நேர்மையாகவும் இருக்கின்ற ஈழத் தமிழர் விடயத்தில், இந்தியாவினால் எதனையும் இதுவரையில் செய்ய முடியவில்லையென்பதையும் இந்தியா புரிந்துகொள்ளவேண்டும்.


# ‘வடலிப்பாதி ஜோன்’ என்றழைக்கப்பட்ட சிவயோக சுவாமிகள்!

- அனந்த பாலகிட்ணர் -

*இன்று, சிவயோக சுவாமிகளுடைய 150ஆவது ஜனன தினமாகும். மே 29ஆம் திகதி 1872ஆம் ஆண்டு சிவயோக சுவாமிகள் பிறந்தார். தெய்வீக நாட்டம் பெறுமுன்னர் அவரது பிள்ளைப் பருவ பெயராக சதாசிவம் என்ற பெயரே வழங்கியது. அதன் பின்னரே அவர் யோகநாதன் என்ற பெயரில், அவரது குடும்பத்தினரால் அழைக்கப்பட்டார்.*

*சிவயோக சுவாமிகள் யாழ்ப்பாணம் சென்பற்றிக்ஸ் கல்லூரியின் பழைய மாணவராவார். பள்ளிக் காலத்தில் ஒரு சுட்டித்தனமான சிறுவனாக சிவயோக சுவாமிகள் விளங்கினார். பாடசாலைக்கு வருவதாக கூறிவிட்டு, வகுப்பறைக்குச் செல்வதை அவர் பல தடவைகள் தவிர்த்து வந்தார்.*

*இதனால் மிகக் கண்டிப்பாக பாடசாலை நிர்வாகத்தை நடத்திய அக்காலத்து ஐரிஷ் வெள்ளையின பாதிரிமார், அவர் ஒருதடவை வகுப்பறைக்கு வராதிருந்தபோது எங்கு சென்றார் என்று தேடிப் பார்க்கையில் , மாணவன் சதாசிவம் சென் பற்றிக்ஸ் கல்லூரியை அண்டியிருந்த பனந்தோப்புக்குள் தனது புத்தகங் களை மறைத்து வைத்துவிட்டு, அத் தோப்புக்குள் வேறுசில மாணவர்களோடு விளையாடு வதைக் கண்டனர்.*



*இதன் பின்னர் அவர் கண்டிக்கப்பட்டு வகுப்பறைக்குக் கொண்டுவரப்பட்டதிலிருந்து அவருக்கு வேடிக்கையாக ஐரிஷ் பாதிரிமார் சூட்டிய பெயரே ‘வடலி ஜோன்’ என்பதாகும்.*

*பின்னாளில் களஞ்சியப் பொறுப்பாளராக கிளிநொச்சியில் யோக சுவாமிகள் பணியாற்றினார். இதன் பின்னர் அவர் தெய்வீக அனுபவம் பெற்றவராக, செல்லப்பா சுவாமிகள் என்ற ஆன்மீக ஞானியோடு இணைந்து, நல்லூர் கந்தசுவாமி கோவில் தேரடியிலுள்ள வில்வ மரத்தடியில் இருப்பதைக்காண முடிந்தது.*

*சகல மதத்தவரையும் மதிக்கும் பண்பினை யோக சுவாமிகள் கொண்டிருந்ததோடு, அம் மதங்களின் நூல்கள் பற்றி விரிவாக அறிந்திருந்தார். பிற மதங்களைச் சேர்ந்தோரும் சிவயோக சுவாமிகளின் பக்தர்களாக விளங்கியிருந்தனர்.*

*இத்தகையவர்களில் முக்கியமான ஒருவரே அக்காலத்தில் மேல் நீதிமன்ற நீதிபதியாக இருந்த அக்பர் என்பவர். நீதியரசர் அக்பர் இஸ்லாமிய மத அனுஷ்டானங்களை மிக உன்னதமாகப் பேணுபவர். இருந்தபோதிலும், யோகசுவாமிகள்மீது அளவு கடந்த பக்தியைக் கொண்டிருந்தார்.*

*நீதியரசராக வருமுன்னர் அக்பர் இலங்கை நீதித்துறையில் ஒரு சிரேஷ்ட வழக்கறிஞராக இருந்தார். ஒரு தடவை யோகசுவாமியைப் பார்ப்பதற்கு அக்பர் சென்றிருந்தார். அச்சமயம் நீதியரசரைப் பார்க்க தமக்கு இப்போது நேரமில்லை என்று யோக சுவாமி கூறியிருந்தார்.*

*சுவாமி அவ்வாறு கூறியபோது அக்பர் வழக்கறிஞராகவே இருந்தார். ஆனால், வீடு சென்றபோது, மேல் நீதிமன்ற நீதியரசராக தாம் நியமிக்கப்பட்டமைக்கான கடிதம் தமக்கு கிடைத்துள்ளதை அறிந்து, யோக சுவாமிகள் ஏற்கனவே தம்மை நீதியரசர் என்றழைத்ததை அறிந்து, சுவாமிகளின் தீர்க்க தரிசனத்தை பக்தி பூர்வமாக அறிந்துகொண்டார்.*

*சிவயோக சுவாமிகளின் மற்றுமொரு முக்கிய சீடரே பிரித்தானிய பிரபுக்கள் குடும்பத்தைச் சேர்ந்தவரும் இலங்கையின் முன்னாள் தேசாதிபதியாகவுமிருந்த சோல்பரி பிரபுவின் புதல்வாரன ஜேம்ஸ் ரம்போதம் என்பது குறிப்பிடத்தக்கது. இவர் சாந்தா சுவாமி என்று சிவயோக சுவாமிகளின் அடியார்களினால் அழைக்கப்பட்டிருந்தார். தமது பிரபுத்துவ வாழ்க்கையைத் துறந்தவராக சிவயோக சுவாமிகளின் சீடராக இருந்து, யோக சுவாமிகளின் விருப்பத்தின் பேரில் மட்டக்களப்பு செங்கலடியில் ஆச்சிரமமொன்றையும் அமைத்து வாழ்ந்தவர் சாந்தா சுவாமிகள். 1956ஆம் ஆண்டு முதல் இலங்கையில் வாழ்ந்த சாந்தா சுவாமிகள் பின்னர் லண்டன் திரும்பி, டிசம்பர் 2004இல் தமது 90ஆவது வயதில் இறைவனடி சேர்ந்தார்.*


**இன்று சிவயோக சுவாமிகளின் 150ஆவது ஜனன தினம்**

*இளம் பிராயத்திலேயே தமக்கு ஒரு சிறந்த ஆன்மீக குருவைத்தேடி இந்தியாவில் பயணஞ்செய்தார் சாந்தா சுவாமி. இறுதியாக, தமது தந்தையார் இலங்கையில் பணியாற்றிய போது கொழும்பு வந்து சில நண்பர்கள் மூலமாக சிவயோக சுவாமிகள் பற்றியறிந்து, அவரை நேரில் சென்று தரிசித்து பின்னர் தமக்குரிய ஆன்மீக குரு சிவயோக சுவாமிகளே என்பதை நன்குணர்ந்து அவரது சீடரானார். இவரைத் தொடர்ந்து பல வெளிநாட்டு அன்பர்களும் சிவயோக சுவாமிகளின் சீடர்களாயினர்.*

*‘ஈழநாடு’ பத்திரிகைகூட சிவயோக சுவாமிகளின் ஆசீர்வாதத்துடனேயே ஆரம்பமானது. ஈழநாடு பத்திரிகையின் ஸ்தாபகர் அமரர் கே.ஸி. தங்கராசா ஈழநாடு பத்திரிகையின் முதல் பிரதியை 1959ஆம் ஆண்டு சிவயோக சுவாமிகளிடம் ஆசீர்வாதம்பெறக் கொண்டுசென்றிருந்தார். அச்சமயம் சிவயோக சுவாமிகள், ‘ஏசுவார்கள், எரிப்பார்கள். உண்மையை எழுதுங்கள், உண்மையாக எழுதுங்கள்’ என்று ஆசீர்வாதம் வழங்கினார்.*

*சிவயோக சுவாமிகள் கூறியதுபோலவே, 1981ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதலாம் திகதி யாழ் பொதுசன நூலகம் தீக்கிரையாக்கப்பட்ட அதே இரவில் ஈழநாடு பத்திரிகை தீக்கிரையாக்கப்பட்டது. பின்னர் பல தடங்கல்கள் வந்திருந்த போதிலும், ஈழநாடு பத்திரிகை மீளவும் தற்போது வெளிவருவதற்கு சிவயோக சுவாமிகளின் தீர்க்கதரிசனமே ஓர் ஆசீர்வாதமாக இருப்பதை இன்று அவரது 150ஆவது ஜனன தினத்தில் மனதில் நிறுத்த வேண்டியுள்ளது.*

# அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



# துவிச்சக்கர வண்டி பற்றிய நினைவுப் பகிர்வு

பகிர்வு -31

கணபதி சர்வானந்தா

துவிச்சக்கர வண்டி. மனிதனின் கண்டுபிடிப்புகளில் போற்றத்தகதொரு விடயம் இது. ஆரம்பத்தில் பல குறைபாடுகளோடு உருவாக்கப்பட்டது. அந்தக் குறைபாடுகளைச் சிறிது சிறிதாக மாற்றியே இன்று நாம் காணும் வடிவத்தைப் பெற்றுக் கொண்டனர். போக்குவரவுக் காகப் பலர் துவிச்சக்கரவண்டியைப் பயன்படுத்துகின்றனர். எமது நாட்டில் மட்டுமல்ல உலகளாவிய ரீதியில் துவிச்சரவண்டி யின் பாவனை என்ற விடயம் அளப்பரியதாகக் காணப்படுகிறது.

எனக்கு ஞாபகம் இருக்கிறது, 1960 களில் எனது தந்தையார் புதிய துவிச்சக்கர வண்டி ஒன்றை ரூபா 125. கொடுத்து வாங்கி வந்தார். அதுவும் அது ஒரு பிரித்தானியத் தயாரிப்பாகக் காணப்பட்டது. அத் துவிச்சக்கர வண்டியுடன் அதனைப் பழுது பார்ப்பதற்குரிய உபகரணங்கள் சிலவற்றை யும் ஒரு சிறிய தோல் பை ஒன்றில் வைத்துக் கொடுத்திருந்த னர். காற்றடிக்க ஒரு பம்பையும் அதனுடன் இணைத்திருந்தனர். அன்று எல்லோரிடமும் துவிச்சக்கர வண்டி இருந்ததாகச் சொல்ல மாட்டேன்.

என்னைப் பாடசாலைக்கு எடுத்துச் செல்வது, வீட்டுக்குப் பொருட்கள் வாங்குவது, தோட்ட வேலைக்குரிய நீரிறைக்கும் இயந்திரத்தை எடுத்துச் செல்வது, பொதுச் சந்தைக்கு விளைபொருட்களை ஏற்றிச் செல்வது எனப் பலவற்றுக்குத் துவிச்சக்கர வண்டியே பயன்படுத்தப்பட்டது.

ஆனால் அப்போது துவிச்சக்கர வண்டியில் ஆட்களை ஏற்றிச் செல்ல அனுமதி இல்லை. ஆட்களை ஏற்றிச் செல்வதை அரசு சட்டவிரோதமாக்கி இருந்தது. அத்துடன் வெளிச்சம் அற்று இரவில் பயணிக்க முடியாது. அதுவும் குற்றமாகக் கணிக்கப்பட் டது.

அன்று துவிச்சகர வண்டியை வைத்திருந்தவர்கள் அதனைப் பாதுகாப்பாக அலங்கரித்துப் பல உப உறுப்புளைப் பொருத்தி மிகவும் அழகாக வைத்திருந்தனர். அதில் சோமநாதி மாமா என்று ஒருவர் எனது தந்தையைப் பார்க்க அடிக்கடி வருவார். அவரது துவிச்சக்கர வண்டியின் முகப்பில் ஒரு குதிரை துள்ளிப் பாய்வதைப் போல வடிவமைக்கப் பட்டுப் பொருத்தப் பட்டிருந்தது. அதை விட முன் பாரில் பல வகை கிளிப்புகளை யும் அவர் பொருத்தி இருந்தார். அதனூடாகச் செல்லும் வயர்கள் மூலம் பிற் பக்கத்தில் உள்ள டைனமோ என்று சொல்லப்படுகின்ற மின் பிறப்பாக்கி ஒன்றுடன் பிரகாசமாக எரியக் கூடிய மின் பல்புகளை உடைய அழகான ஹெட் லைற் என்று சொல்லப்படுகின்ற ஒரு உபகரணத்தையும் அவர் பொருத்தி இருந்தார். இன்றும் துவிச் சக்கர வண்டி என்றதும் சோமநாதி மாமாவின் அந்த அழகான துவிச்சக்கர வண்டியே ஞாபகத்துக்கு வரும். அந்தக் காலத்தில் ஆங்காங்கே துவிச்சக்கர வண்டிகள் களவாடப்படுவது வழக்கம். ஆனால் சோமநாதி மாமா எங்கும் தனது துவிச்சக்கர வண்டியை நிறுத்துவார். அதனை யாரும் தொட்டுப் பார்கக் கூடப் பயப்படுவார்கள். ஏனெனில் அவர் ஒரு சண்டியன். அவரது துவிச்சக்கர வண்டியை எடுத்தால் என்ன நடக்கும் என்று கள்வருக்குத் தெரியும்.

துவிச் சக்கர வண்டி பற்றிப் பல இலக்கியங்களைப் பலர் படைத்திருக்கின்றனர். அவ்வளவுக்கு துவிச் சக்கர வண்டி என்ற விடயம் மனித வாழ்வோடு பின்னிப் பிணைந்ததாகக் காணப்பட் டது. இன்றும் அந்த நிலை மாறாது அப்படி இருக்கிறது. அதுவும் தற்காலச் சூழ்நிலையில் துவிச் சக்கர வண்டி என்ற விடயம் மிகவும் முக்கியமாகக் கருதப்படுகிறது.

துவிச்சக்கர வண்டியை மிதிவண்டி எனவும் "ஈருருளி" எனவும் சைக்கிள் எனவும் சொல்லுவர். நவீன வடிவம் கொண்ட, தற்போது பாவனையிலுள்ள துவிச்சக்கர வண்டியை 1839 இல் கிர்க்பாட்ரிக் மேக்மில்லன் (Krikpatric Macmillan) என்பவர் வடிவமைத்தார். உலகில் முதன் முதலில் மிதி இயக்கி (Pedal) மிதிப்பதன் மூலம் இயங்கும் வகையிலான மிதிவண்டியை அவர் வடிவமைத்தார். ஆகையால்தான் இன்று மிதிவண்டி யைக் கண்டறிந்தவராக கிர்க்பாட்ரிக் மேக்மில்லன் அடையாளப் படுத்தப்படுகிறார். ஸ்காட்லாந்து நகரில் பட்டறை ஒன்றில் கொல்லராக வேலை பார்த்து வந்த அவர் திசைமாற்றி , தடை மற்றும் மிதிஇயக்கி ஆகிய அனைத்துப் பாகங்களையும் கொண்ட முழுமையான மிதிவண்டி ஒன்றை உருவாக்கிப் போக்குவரத்து வசதிகளில் ஒரு புதிய சாதனையைப் படைத்தி ருந்தார். மிதிக்கட்டைகளில் கால்களை வைத்து அழுத்தி உந்தப்படும் மனித ஆற்றலால் இயங்கும் மிதிவண்டிகள் முதல் முதலாக 19ஆம் நூற்றாண்டில் அதுவும் ஐரோப்பாவிலேயே அறிமுகமாகின. தற்பொழுது உலகெங்கும் ஒரு பில்லியனுக்கும் அதிகமான மிதிவண்டிகள் உள்ளன என்று சொல்லப்படுகிறது. குறிப்பாகச் சீனாவிலும் நெதர்லாந்திலும் போக்குவரத்திற்கான முதன்மையான வண்டியாகத் துவிச்சக்கர வண்டியே காணப்படுகிறது. உந்து ஆற்றலை சக்கரத்துடன் சங்கிலியால் பிணைத்து இயக்கும் தற்போதைய மிதிவண்டி களின் வடிவத்தை 1885 இல் அடைந்த பிறகு அதில் பெரும் மாற்றம் ஏதும் நிகழ்ந்ததாகத் தெரியவில்லை.

பதினேழாம் நூற்றாண்டில் பிரான்ஸில் செல்வச் செழிப்பான குடும்பத்தில் பிறந்தவர் கோம்டி மீடி டீ ஷிவ்ராக் (Comte Mede De Sivrac). அவர் பொழுது போக்காக வீட்டுக்குத் தேவையான அலங்காரப் பொருட்களைத் தயாரிப்ப தற்காக மரத்துண்டுகளைச் செதுக்கிக் கொண்டிருக்கும்போது தற்செயலாக அவரது சிந்தனையில் தோன்றிய வடிவம் தான் மிதிவண்டி. 1791-ஆம் ஆண்டு முழுக்க முழுக்க மரத்துண்டு களால் செய்யப்பட்ட சைக்கிள் ஒன்றை அவர் வடிவமைத்திருந் தார்.

இன்று எமது நாட்டில் ஏற்பட்டிருக்கும் பொருளாதார நெருக்கடிகள் காரணமாகக் காணப்படும் எமது போக்குவ ரத்தைப் பாரிய செலவின்றி சமாளிக்க உதவுவதாக துவிச்சக்கர வண்டிகள் காணப்படுகின்றன. 2021 ஆம் ஆண்டு ரூபா.15,000 க்கு விற்பனை செய்யப்பட்ட ஒரு துவிச்சக்கர வண்டி தற்போது ரூபா.45,000 வரை விற்கப்படுவதாகச் சொல்லப்படுகிறது.

ஆரம்பத்தில் ஏழைகளுக்குரியதாக இருந்த துவிச்சக்கர வண்டி இன்று அவர்கள் கனவாக மாறி இருக்கிறது. கனவான்களால் மட்டுமே வாங்கக் கூடியவாறு அதன் விலை இன்னும் அதிகரிக்கப்படலாம் என்றும் சொல்லப்படுகிறது.சில காலத்துக்கு முன்னர் தம்மிடமுள்ள பாவிக்கப்பட்ட துவிச்சக்கர வண்டிகளைப் பழைய இரும்பு வியாபாரிகளிடம் இரும்பு விலைக்கு நிறுத்துப் பலர் விற்றனர் என்ற விடயத்தையும் ஒரு முறை ஞாகப்படுத்திக் கொள்கிறேன். இன்று பாவனையிலுள்ள பழைய சைக்கிளுக்கு கிராக்கி ஏற்பட்டிருக்கிறது. இக்காலத் தின் கட்டாய தேவைகளில் ஒன்றாகச் சைக்கிள் மாறி இருக்கி றது என்றும் சொல்லலாம்.

# இந்தவார ராசிபலன் 29.05.2022 - 03.06.2022

மே 29 ஞாயிற்றுக்கிழமை
சுபகிருது வருடம் - வைகாசி 15

நல்ல நேரம்: 7.30 - 9.00 ராகு காலம் : 04.30 - 06.00 திதி : சதுர்த்தசி

### மேஷம்
[ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

முயற்சிகளில் வெற்றி காண்பீர்கள். வேலை நிமித்தமாக வெளியூர் பயணம் மேற்கொள்வீர்கள். தொழிலில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டியதாக இருக்கும். செலவுகள் அதிகரித்தாலும் அதற்கேற்ற வருவாய் உண்டாகும். வார்த்தைகளில் நிதானம் அவசியம். தொழிலில் புதிய நெருக்கடிகளை சந்திக்க வேண்டியதாக இருக்கும். நிலைமைகளை சமாளிக்கும் அளவிற்கு வரவுகள் இருக்கும்.

### ரிஷபம்
[ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

செலவுகள் அதிகரிக்கும். செயல்களில் மந்தமான நிலை இருக்கும். அதன்பிறகு நினைத்த செயல்களை நடத்தி முடிப்பீர்கள். எதிரிகளால் உண்டான சங்கடங்கள் விலகும்.பகைவர்களின் தொல்லைகள் விலகும் என்பதால் உங்கள் முயற்சிகள் ஜெயமாகும். தொழிலில் லாபநிலை உண்டாகும்.நெருக்கடிகளில் இருந்து மீளுவீர்கள். தொழிலில் கூடுதல் கவனம் தேவைப்படும். உங்களுடைய வேலைகளை அந்நியரை நம்பி ஒப்படைத்திட வேண்டாம்.

### மிதுனம்
[ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

எதிர்பார்த்தவற்றில் நன்மைகள் உண்டாகும். முதலீடுகளில் இருந்து வரவு காண்பீர்கள். அந்நியர்கள் வழியே ஆதாயநிலை உருவாகும். குடும்பத்தினர் உங்களுக்கு ஆதரவாக இருப்பார்கள். திடீர் வரவுகளால் கடன்களை அடைப்பீர்கள். உங்கள் திறமை இக்காலத்தில் பளிச்சிடும். நண்பர்களின் உதவி தக்க சமயத்தில் கிடைக்கும். பிள்ளைகளால் சில சங்கடங்களை சந்திக்க வேண்டியதாக இருக்கும். உத்தியோகத்தில் கூடுதல் கவனம் செலுத்துங்கள்.

### கடகம்
[ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

வாரத்தின் முற்பகுதியில் வேலைகளில் இழுபறி இருக்கும். பிள்ளைகளின் கல்வி, திருமணம் குறித்த முயற்சிகளில் ஈடுபடுவீர்கள். வாழ்க்கைத்துணையுடன் இருந்த பிணக்குகள் தீரும். அரசு வகையிலான எதிர்பார்ப்புகள் நிறைவேறும். வாரத்தின் பிற்பகுதியில் வரவும் செலவும் போட்டி போடும். தாய்வழியில் சில சங்கடங்கள் தோன்றும். உறவுகள், நண்பர்கள் உதவி புரிவார்கள்.

### சிம்மம்
[ மகம், பூரம், உத்திரம் 1 ]

எதிர்பார்க்கும் முயற்சிகளில் தாமதம் உண்டாகும். எதிரிகளின் கை மேலோங்கும். உங்கள் திட்டங்களில் ஒன்று நிறைவேறாமல் போகும். மன தைரியத்தால் துணிச்சலாக சில செயல்களில் ஈடுபடுவீர்கள். சகோதரர்கள் வழியில் சங்கடங்கள் உண்டாகும். நிதானிக்காமல் சில செயல்களில் ஈடுபட்டு உங்கள் பளுவை அதிகரித்துக் கொள்வீர்கள். எதிரிகள் விஷயத்தில் கூடுதல் எச்சரிக்கை தேவைப்படும்.

### கன்னி
[ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

மனதில் தேவையற்ற குழப்பம் ஏற்பட்டு விலகும். திருமண வயதினருக்கு திருமணம் கூடி வரும். நண்பர்களும் உறவினர் களும் உங்களுக்கு ஆதரவாக இருப்பதால் உங்கள் முயற்சிகள் வெற்றியாகும். எதிர்பார்த்தவற்றில் லாபங்கள் உண்டாவதால் குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். குடும்ப வகையில் சில குழப்பங்கள் வந்து போகும். வார்த்தைகளில் நிதானம் அவசியம்.

### துலாம்
[ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

உங்கள் கவனத்தை சிதற வைக்கும் சம்பவங்கள் நடைபெறும். ஆசையின் காரணமாக உங்கள் மனம்போன போக்கில் செல் வீர்கள். கட்டுப்பாடுகளால் உங்களை பத்திரப்படுத்திக் கொள் ளுங் கள். புதிய ஆட்களிடமும் நட்புகளிடமும் எச்சரிக்கை தேவைப்படும். சட்டத்திற்கு புறம்பான செயல்களால் சங்கடங்கள் தோன்றும். எவ்வளவுதான் கவனமாக செயல்பட்டாலும் ஏதேனும் சில தவறுகள் உண்டாகும்.

### விருச்சிகம்
[ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

உங்கள் முயற்சிகளில் நன்மைகள் உண்டாகும். அதன் பிறகு உங்கள் செயல்களில் சில சிரமங்கள் உண்டாகும். தெளிவான முடிவுகளுடன் நினைத்ததை செய்து முடிப்பீர்கள். லாபகரமான வாரமாக இருக்கும். பகைவர்களால் உண்டான தொல்லைகள் வில கும். உங்கள் செல்வாக்கு உயரும். பொன் பொருள் சேர்க்கையால் குடும்பத்தில் மகிழ்ச்சி நிறையும். புதிய முயற்சி அனுகூலமாகும்.

### தனுசு
[ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

குடும்பத்தில் இருந்த நெருக்கடிகள் விலகும். சந்தோஷமும் அதிகரித்து மகிழ்வீர்கள். குடும்பத்தில் இருந்த சங்கடங்கள் விலக ஆரம்பிக்கும்.உங்கள் வாக்கிற்கு மரியாதை கூடும். நேர்மையான வழியில் வரவுகள் உண்டாகும். அரசு வழி முயற்சிகளிலும் பலன்கள் உண்டாகும். புதிய நட்பினால் சங்கடங்களை விட்டு வெளியில் வருவீர்கள். தொழில் உத்தியோகத்தில் கூடுதல் கவனம் செலுத்துவீர்கள்.

### மகரம்
[ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

நெருக்கடிகளை சந்தித்து மீளுவீர்கள். நண்பர்கள் உறு துணையாக இருப்பார்கள். பண வருவாய்க்குரிய முயற்சிகள் வெற்றி யாகும். தந்தை வழியே நன்மைகள் உண்டாகும். நட்புகளிடம் ஏற்பட்ட பிரச்சனைகள் விலகும்.வாழ்க்கைத் துணையுடன் இருந்த கருத்து வேறுபாடு விலகும். ஆதாயம் அதிகரிக்கும். சகோதர வகையில் எதிர்பார்த்தவற்றில் நன்மைகள் உண்டாகாமல் போகும்.

### கும்பம்
[ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

நீண்டநாள் எண்ணம் ஒன்று நிறைவேறும். குடும்பத்தில் இருந்த பிரச்சனைகள் தீரும். தொழில், உத்தியோகம் சிறப்படையும். வரவுகள் அதிகரித்து மகிழ்வீர்கள். பேச்சில் நிதானம் தேவைப்படும். தடைகள் விலகும். நீங்கள் நினைத்ததை வெற்றிகரமாக செய்து முடிப்பீர்கள். உங்கள் உடல்நிலையில் பாதிப்புகள் அகன்று சீராகும். தொழிலில் இருந்த தடைகள் விலகும். சிலர் புதிய தொழில் தொடங்குவீர்கள். குடும்பத்தில் சுப நிகழ்வுகள் நடைபெறும். தொழிலில் லாபத்தைக் காண்பீர்கள்.


### மீனம்
[ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

கொடுத்த வாக்கை நிறைவேற்ற முடியாத நிலை உண்டாகும். உடல்நிலையில் எச்சரிக்கை அவசியம்.பேச்சில் நிதானமும் புதியவர்களிடம் கவனமும் தேவை. குடும்பத்தில் திருமணப்பேச்சு எழும். வேலையின் காரணமாக அலைச்சல் அதிகரிப்பதுடன் சோர்வும் உண்டாகும்.யோசித்து செயல்பட வேண்டிய வாரம். அரசு வகையிலான முயற்சிகளில் நன்மைகள் உண்டாகும். வருவாயில் இருந்த தடைகள் விலகும். முயற்சிகளில் வெற்றியுண்டாகும். உடல்நலனில் சங்கடங்கள் உருவாகலாம் என்பதால் கவனமுடன் இருங்கள்.

# கோட்டாபய பதவியில் தொடர்வதைத்தான் தமிழர்கள் விரும்புகிறார்களா?

## சென்னை மடல்

-பகவான் சிங்-



செய்தித் தாள்களைப் புரட்டினாலோ தொலைக் காட்சி செய்திகளைப் பார்த்தாலோ அங்கிங்கெனாதபடி எங்கும் வலியும் வேதனையும் பதற்றமும் நிறைந்திருப்பதைப் பார்க்கிறோம். மகிழ்ச்சியான இதமான செய்திகள் அருகி வருவதையும் உணர்கிறோம். உலகம் முழுவதும் சமூக ஊடகங்களிலிருந்து பரப்பப்படும் தகவல்களும் எதிர்மறையாகவே உள்ளதையும் காண்கிறோம். இத்தனை விரைவாக மனித இனம் இருள் நிறைந்த பள்ளத்தின் ஆழத்தை நோக்கிச் செல்வது ஏன்? இந்த அழிவுப் பாதையில் நாமே விரும்பி ஆர்வத்துடன் செல்வது ஏன்? குழந்தைகள் ஐஸ் க்ரீமை நாடுவதுபோல், நாம் பேரழிவுகளை நாடிச் செல்வது ஏன்? உலக ஊடகங்கள், உக்ரைன் போரால் விளைந்துவரும் சேதங்களையும் மலையாகக் குவிந்திருக்கும் மனித சடலங்களையும் நிர்மூலமாக்கப்பட்ட நகரங்களையும் படம் பிடித்துக் காட்டியும்கூட, ரஷ்ய அதிபர் விளாடிமிர் புட்டின் போரை நிறுத்தும் உத்தேசம் எதுவுமில்லை என்று கூறுகிறார். இவ்வாரத் தொடக்கத்தில், ரோக்கியோவில் 'க்வாட்'

உச்சி மாநாடு நடந்துகொண்டிருக்கும் நேரத்தில்,

## சிங்களவர்களின் பிரச்னையில் தமிழர்கள் ஒதுங்கியிருக்கவேண்டுமா?

ரஷ்யாவும் சீனாவும் இணைந்து ஜப்பானுக்கு அருகில் போர் விமானக் கூட்டுப் பயிற்சிகளை மேற்கொண்டன. தென் சீனக் கடல் மற்றும் இந்தியப் பெருங்கடல் பகுதிகளில் சீனாவின் ஆதிக்கத்தை ஒடுக்க, க்வாட் நிறைவேற்றும் தீர்மானத்தை சீன அதிபர் ஷீ ஜின்பிங்கும் ரஷ்யாவும் அமைதியாகப் பார்த்துக்கொண்டிருக்கப் போவதில்லை என்பதான புட்டினின் எச்சரிக்கையாகவே இதைக் கொள்ளவேண்டியுள்ளது. இந்த விமான சாகசம், தூண்டிவிடும் ஒரு நடவடிக்கை என்று ஜப்பானிய பாதுகாப்பு

அமைச்சர் நோபுவோ கிஷி வர்ணித்துள்ளார். 2021 நவம்பர் தொடங்கி, சீனாவும் ரஷ்யாவும் தொலைதூரக் கூட்டு விமானப் பயிற்சிகளை ஜப்பானுக்கு அருகில் மேற்கொள்வது இது நான்காவது முறையாகும். உக்ரைன் ஆக்கிரமிப்புக்குப் பிறகு இது முதல் முறை என்பதும் குறிப்பிடத்தக்கது.



அமெரிக்க அதிபர் ஜோ பைடன், பாரதப் பிரதமர் நரேந்திர மோடி, ஜப்பானிய பிரதமர் புமியோ கிஷிடா மற்றும் அவுஸ்திரேலியாவின் புதிய பிரதமர் அந்தொனி அல்பனீஸ் ஆகிய க்வாட் நாடுகளின் தலைவர்கள் சீனாவின் விரிவாக்க நோக்கத்தைக் கட்டுப்படுத்தவும், தங்களின் உறுதியை வலியுறுத்தவும் இந்த ரோக்கியோ உச்சி மாநாட்டைப் பயன்படுத்திக்கொண்டனர். சீனாவின் இழுவைப் படகுகள், அப்பிராந்தியத்தில் உள்ள பிற சிறு நாடுகளின் கடல் பகுதியில் சட்ட விரோதமாக மீன் பிடிப்பதைத் தடுக்கவும் விரிவான வியூகத்தை அமைத்துள்ளனர். ஆயிரக்கணக்கான சீனக் கப்பல்கள், சீனப்பகுதியின் கடல் வளத்தை சுரண்டிய பிறகு, அண்டை நாடுகளின் கடல் பகுதிகளையும் சூறையாடி வருகின்றன. சீன அதிபரின் இந்தப் பெரியண்ணன் நிர்வாத்தை எதிர்க்கும் சில சீன அதிகாரிகள் சில நாட்களுக்கு முன் யூ ரியூபில் கசியவிட்ட ஒரு வீடியோ பெரும் அதிர்வுகளை ஏற்படுத்தியுள்ளது. அண்டை நாடான தைவானின்மீது ஆக்கிரமிப்பு செய்யும் ஜின்பிங்கின் விரிவான சதித் திட்டம் அந்த வீடியோவில் வெளியானது. தைவான், சீனாவின் ஒருங்கிணைந்த ஒரு பகுதி என்றும், தைவானில் உள்ள சீன எதிர்ப்புப் போராளிகளுக்கு மேற்கத்திய நாடுகள் தொடர்ந்து ஆதரவளித்து வருவதாகவும் சீனா கூறி வருகிறது. புட்டினின் உக்ரைன் போரைத் தொடர்ந்து, 2025க்குள் சீனா, தைவான்மீது போர் தொடுக்கவுள்ளதாக தைவானின் அமைச்சர்கள் அச்சம் தெரிவித்துள்ளனர். உலகின் வடக்குப் பகுதியில் ஏற்பட்டிருக்கும் போரழிவை முடிவுக்குக் கொண்டுவரும் முன்னரே கிழக்கில் ஒரு போர்ச்சூழல் உருவாகி வருவது பெரும் அச்சத்தை ஏற்படுத்துகிறது. அந்த யூ ரியூப் வீடியோவிற்கு எதிர்வினையாற்றிய அமெரிக்க அதிபர் ஜோ பைடன், இதை 'ஆபத்துடன் விளையாடும் செயல்' என்று குறிப்பிட்டுள்ளார். மேலும் அவர், தன்னாட்சித் தீவான தைவான்மீது சீனா ஆக்கிரமிப்பு செய்யத் துணிந்தால், அமெரிக்கா தைவானுக்குத் துணை நிற்கும் என்றும் கூறியுள்ளார். இதற்குப் பதிலளிக்கும் விதமாக ஷீ ஜின்பிங்க், மிகவும் அலட்சியமாக, தைவான் எல்லையை ஒட்டிய பகுதியில், மாபெரும் இராணுவப் பயிற்சியைத் தொடங்கினார். உலகின் மிகப்பெரிய இராணுவமான சீனாவின் மக்கள் சுதந்திர இராணுவத்திடம் (பி எல் ஏ) 25 லட்சம் வீரர்கள் உள்ளனர். ஆனால், அமெரிக்க இராணுவத்திடம் 13 லட்சம் வீரர்களே உள்ளனர் என்பது கவனத்தில் கொள்ளத்தக்கது. சீன ஆக்கிரமிப்பிலிருந்து தைவானை காக்கும் நோக்கில் ஒருங்கிணைந்த ட்ரோன்களின் குழுக்களை அமெரிக்கா பயன்படுத்தத் திட்டமிட்டுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. எதிர்காலத்தில் போர்களை வெல்லக்கூடிய மிகப்பெரிய ஆயுதங்களான ஆளில்லா வானூர்திகளான( யூ ஏ வி) இந்த ட்ரோன்கள், தொலைதூரத்திலிருந்து கட்டுப் படுத்தப்பட்டு, எந்நேரமும் இரகசியமாகப் பறந்து முக்கிய எதிரி முகாம்களைத் தாக்கு வதன்மூலம், நேரடித் தாக்குதலால் வீரர்களுக்கு ஏற்படக்கூடிய சேதங்கள் தவிர்க்கப்படுவதாக இராணுவ வல்லுநர்கள் கருதுகின்றனர். அறிவியல் மற்றும் உயர் தொழில்நுட்பத்தின் பயனை மனித இனம் பயன்படுத்திக்கொள்வது பாராட்டத்தக்க விஷயம்தான் அல்லவா? அணு ஆயுதங்களைத் தாங்கிச்சென்று நாடுகளையே அழிக்கவல்ல, கண்டம் விட்டுக் கண்டம் பாய்ந்து இலக்கைத் தாக்கி அழிக்கும் ஏவுகணைகள், அணு ஆயுதம் தாங்கிய நீர் மூழ்கிக் கப்பல்கள் மற்றும் போர்க்கப்பல்கள், குண்டு துளைக்காத போர் டாங்கிகள், குறிப்பிட்ட சமூகத்தினர்மீது உயிர்கொல்லி வைரஸ்களை ஏவிவிடும் இரசாயனப் போர்முறை என, இலக்கைக் குறிவைத்துத் துல்லியமாகத் தாக்கி அழிக்கும் விந்தை மிகு சாதனைகளே இவை அல்லவா?

இல்லை. இது மிகவும் வருத்தத்துக்குரியது, கவலைக்குரியது. சக மனிதனிடமான தனது கோபத்தை வெளிப்படுத்தவும் சக மனிதனின் சொத்துகள் மீதான தனது பேராசையை நிறைவேற்றிக்கொள்ளவும் பேரழிவுகளை உண்டாக்க இந்த நவீன பரிசோதனைக் கூடங்களில் ஆயுதங்கள் தயாரிக்கப்படுகின்றன, இது மனித இன வரலாற்றிலேயே மிகவும் கொடூரமான பெருங் குற்றம். மன வேதனையையும் மரணத்தையும் ஏற்படுத்தும் இவற்றுக்குப் பெரும் பொருட்செலவு செய்யப்படு

## முதல் அடி சிறியதாக இருந்தாலும் பொது மக்களாகிய நம்மிடம் அது தொடங்கட்டும்

வது இன்னும் வேதனை. சக மனிதனிடம் வெறுப்பும் பேராசையும் கொள்வதை விடுத்து, அன்பையும் இரக்கத்தையும் கைக்கொண்டால், பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பினால், இந்த பூமியும் அதில் வசிக்கும் நாமும் எவ்வளவு இன்பமாக வாழலாம் என்று கற்பனை

செய்து பாருங்கள்! அமெரிக்கா, ரஷ்யா, சீனா ஆகிய நாடுகள் ஆயுதங்கள் தயாரித்து விற்பனை செய்வதை விடுத்து, பாதிக்கப்பட்டோருக்கான உதவிகளை வழங்க மட்டும் செலவு செய்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்!

ஆனால் இந்த வல்லரசுகள் அதைச் செய்யமாட்டா. இவர்களின் ஆயுத உற்பத்திக் கூடங்கள் தொடர்ந்து அதிக வேலைவாய்ப்புகளையும் அந்நியச் செலாவணியையும் உருவாக்கும் மையங்களாகவே இருக்கும். தங்கள் நாட்டுக் குழந்தைகளுக்குக்கூடத் துப்பாக்கியை விற்பனை செய்யும் வியாபாரிகளுக்கு விநியோகம் செய்ய ஆயுதங்களைச் சேமித்து வைப்பதிலேயே குறியாக இருக்கும்.

அண்மையில், ஒரு 13 வயதுச் சிறுவ னுக்கு மது பானம் வழங்கவும் சிகரெட் வழங்கவும் கடைகள் மறுத்ததையும் ஆனால், ஒரு கடையில் கைத்துப்பாக்கி உடனே விற்பனை செய்யப்பட்டதையும் ஒரு வீடியோவில் காண நேர்ந்தது. உலகிலேயே ஆயுதங்களை அதிகம் தயாரிக்கும் அமெரிக்கா, தனது பாவத்தின் சுவையை அவ்வப்போது தானே சுவைக்கவும் நேர்கிறது. எனினும், தனது நாட்டுக் குடிமகனுக்கு ஆயுதம் கிடைப்பதைக் கடினமாக்க எந்தச் சட்டமும் இயற்ற அந்த ஆட்சியாளர்கள் தயாராக இல்லை. மே மாதத்தில் மட்டுமே அங்கு மூன்று பெரும் துப்பாக்கிச் சூட்டு சம்பவங்களில் பல உயிர்ச் சேதங்கள் ஏற்பட் டுள்ளன. அதில் ஒரு பதின்ம வயதுச் சிறுவன் ஒரு பள்ளியில் பலரைக் கொன்ற கொடூரம் ரெக்ஸாஸ் மாகாணத்தில் நடந்தது. 'அமெரிக்காவில் துப்பாக்கி வாங்குவதைக் கடினமாக்குவது ஏன் அவசியம்'என்ற தனது கட்டுரையில் 'த எக்கனாமிஸ்ட்' இதழ், 'பல மாகாணங்களில் ஒரு நாய் வாங்குவதைவிட, துப்பாக்கி வாங்குவது எளிதானதாக உள்ளது' என்று குறிப்பிட்டுள்ளது.

இந்தக் கொடூரங்களுக்கு வல்லரசுகளையும் அவர்களின் சுய நலப் போக்கையும் மட்டுமே குற்றம் சாட்டுவது சரியன்று. குறைந்த வளங்களுடன் பெரும் மக்கள் தொகையைக் கையாளவேண்டிய நம் போன்ற சிறிய நாடுகள் என்ன செய்கிறோம்? பொது நன்மைக்காக நமது முன்னுரிமைகளை நேர்மையாக அமைத்துக் கொள்கிறோமா? அனைவருக்கும் உணவு கிடைக்கும் வகையில் நமது கட்டுப்படுத்தப்பட்ட வளங்களைப் பங்கிடுகிறோமா? இந்த மண், நீர், காற்று ஆகிய இயற்கைக் கொடைகளைத் தங்கள் மூதாதையர்கள் அனுபவித்ததுபோல் நமது அடுத்த தலைமுறையினர் அனுபவிக்கும் அளவுக்குச் சிறப்பாக்கத் தேவையான வழிமுறைகளைத் தொலைநோக்குப் பார்வையுடன் நாம் வகுக்க முன்வரலாமா?

இந்த ஞாயிறன்று காலை, இந்தியாவிலும் இலங்கையிலும் தற்சமயம் நிலவும் பொதுவான சமூக, அரசியல் விஷயங்களை விடுத்து, இதுபோன்ற தத்துவார்த்தமான விஷயங்களில் எனது ஆதங்கத்தை உங்களுடன் ஏன் பகிர்ந்துகொள்கிறேன்? மனிதனால் உருவாக்கப்பட்ட பேரழிவுகளினால் திண்டாடிக்கொண்டிருக்கும் இந்த உலகில் உள்ள அச்சுறுத்தல்களுக்கு நாம் விழித்துக் கொண்டு, அவற்றைத் தடுக்க ஒரு சிறிய அடியை எடுத்து வைக்க உங்களை வேண்டவே. அந்த முதல் அடி சிறியதாக இருந்தாலும், பொது மக்களாகிய நம்மிடம் அது தொடங்கட்டும்.

ஆனால், அண்மைக்காலங்களில், ஈழத்தில், 'மக்களாகிய நாம்' என்ற சிந்தனை பெருமளவுக்கு வெளிப்படுத்தப்படாதது வருத்தத்துக்குரியது. 'காலி முக' புரட்சியில் ஈழத் தமிழர்கள் பெருமளவில் பங்கேற்றால்தான் அதன்

வெற்றியின் பலனைக் கோரமுடியும் என்பதால் நான் இதனைத் தொடர்ந்து வலியுறுத்து வந்துள்ளேன். எனினும், அந்தக் கோரிக்கை செவிமடுக்கப்படவில்லை என்பது வருத்தமளிக்கிறது. இதற்குக் காரணம், சிங்களவர்களின் பிரச்னையிலிருந்து நாம் விலகியிருக்க வேண்டும் என்று யாழ்ப்பாணத்தில் இருக்கும் சில அறிஞர்கள் கூறும் அறிவுரைதான். இப்போது ஒரு தேசிய அரசை உருவாக்கும் வாய்ப்புக்கு வழி பிறக்கிறது. ஒதுங்கியே இருக்காமல், ஆட்சியில் பங்கு பெறும் வாய்ப்பைத் தமிழ்ச் சமூகம் பெற மீண்டும் ஒரு நல்வாய்ப்பு.

தற்போதைய மோசமான நிலைக்குக் காரணமான ராஜபக்ஷ குடும்பத்தைத் தண்டனையிலிருந்து தப்புவிக்க செல்வாக்கிழந்த அதிபர் கோட்டாபயவால் இயக்கப்படும் பொம்மையே ரனில் விக்ரமசிங்க என்று தமிழர் தலைவர்கள் மட்டுமல்ல, முன்னாள் அதிபர் சந்திரிகா குமாரதுங்க போன்ற சிங்களவர்களே கூடக் கூறுவதைக் கேட்டுள்ளேன். ராஜபக்ஷவின் பொதுஜன பெரமுனவை மட்டுமே, அல்லது முன்னாள் அதிபர் சிறிசேன விரும்பினால், சிறிலங்கா சுதந்திர கட்சியின் 14 எம் பிக்களையுமே நம்பித்தான் இந்த ரணில் அரசு செயல்படமுடியும். காரணம், அவரது கட்சியில் அவர் மட்டுமே ஒரே உறுப்பினராக உள்ளார். எனவே, அவருக்கு ஆட்சி செய்ய எந்த தார்மீக அதிகாரமும் இல்லை. சிறிசேனவுக்கு மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றும் கனவு இருப்பது அவரது மே தின உரையில் வெளிப்படுகிறது.

இந்தியா, அமெரிக்கா மற்றும் பிற மேற்கு நாடுகளின்

(19ஆம் பக்கம் பார்க்க)



♦ வீரகத்தி தனபாலசிங்கம்



# 21 ஆக மறு அவதாரம் எடுக்கும் 19

## மேலோட்டமான அரசியல் சீர்திருத்தங்கள் நெருக்கடியை முடிவுக்கு கொண்டுவரப்போவதில்லை

இலங்கை அரசியலமைப்புக்கு இன்னொரு திருத்தத்தைக் கொண்டுவருவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்தனவின் அரசாங்கத்தினால் கொண்டுவரப்பட்ட 1978 இரண்டாவது குடியரசு அரசியலமைப்பு கடந்த 44 வருடங்களாக நடைமுறையில் இருந்து வருகிறது. அதற்கு கொண்டுவரப்படுகின்ற 21 வது திருத்தம் இதுவாகும்.

அமெரிக்காவின் அரசியலமைப்பு 234 வருடங்களாக நடைமுறையில் இருக்கிறது. இதுவரையில் அதற்கு 27 திருத்தங்களே கொண்டுவரப்பட்டிருக்கின்றன. இரண்டேகால் நூற்றாண்டுக்கும் அதிகமான காலமாக நடைமுறையில் இருந்துவரும் அந்த அரசியலமைப்புக்கு இறுதியாக 1992 ஆம் ஆண்டில்தான் திருத்தம் கொண்டுவரப்பட்டது. ஆனால், நான்கு தசாப்தங்களுக்கும் சற்று அதிகமான காலமாக நடைமுறையில் இருந்துவரும் இலங்கை அரசியலமைப்பு இது வரையில் 20 தடவைகள் திருத்தம் செய்யப்பட்டிருக்கிறது.

ஜெயவர்தன ஆட்சிக்காலத்திலேயே அடிக்கடி அரசியலமைப்புக்கு திருத்தங்கள் (16) கொண்டுவரப்படுவது வழக்கமாக இருந்தது. அவர் தனது அரசியல் வியூகங்களுக்கு வசதியாக அமையக்கூடிய வகையில் அரசியலமைப்பில் திருத்தங்களைக் கொண்டுவந்தார். அவரது ஐக்கிய தேசிய கட்சிக்கு பாராளுமன்றத்தில் இருந்த 5ல்6 பெரும்பான்மைப் பலம் அதற்கு வசதியாகவும் அமைந்தது. ஜெயவர்தனவுக்கு பின்னரான 24 வருடங்களில் நான்கு தடவைகளே அரசிலமைப்புக்கு திருத்தங்கள் செய்யப்பட்டிருக்கிறது.



அந்த திருத்தங்களும் கூட அந்தந்த காலகட்டங்களில் பதவியில் இருந்த ஆட்சியாளர்களின் அரசியல் அனுகூலங்களுக்கு இசைவான முறையிலேயே கொண்டுவரப்பட்டன.

ஜெயவர்தன ஆட்சியில் அடிக்கடி திருத்தங்கள் கொண்டுவரப்பட்ட நாட்களில் ஒரு திருத்தச் சட்டமூலம் மீதான விவாதத்தில் பாராளுமன்றத்தில் உரையாற்றிய தமிழர் விடுதலை கூட்டணியின் முன்னாள் தலைவர் மு. சிவசிதம்பரம் அவர்கள் சொன்ன ஒரு சுவாரஸ்யமான கதை நினைவுக்கு வருகிறது. அதாவது லண்டனில் புத்தகசாலையொன்றுக்கு சென்று ஒருவர் இலங்கை அரசியலமைப்பு பிரதிகள் கிடைக்குமா என்று கேட்டாராம். தாங்கள் மாத சஞ்சிகைகளை விற்பனை செய்வதில்லை என்று அங்குள்ளவர்கள் அவருக்கு பதில் கூறினார்களாம். இலங்கையில் அடிக்கடி அரசியலமைப்புக்கு திருத்தங்கள் கொண்டுவரப்படுவது அவ்வாறு கேலிக்குரியதாக இருந்தது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் புதிய அரசாங்கத்தின் முதலாவது சட்டவாக்க நடவடிக்கையாக அரசியலமைப்புக்கான 21வது திருத்த வரைவு கடந்தவாரம் அமைச்சரவைக்கு புதிய நீதியமைச்சர் விஜேதாச ராஜபக்சவினால் சமர்ப்பிக்கப்பட்டது. அமைச்சர்கள் விஜேதாச, நிமால் சிறிபால டி சில்வா, சட்டமா அதிபர், சட்டவரைஞர் மற்றும் சில சட்ட நிபுணர்களை உள்ளடக்கிய பிரதமர் தலைமையிலான குழுவே இதை தயாரித்தது. இறுதி வரைவு பூர்த்தி செய்யப்படுவதற்கு முன்னதாக தற்போதைய வரைவை பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் சகல கட்சிகளினதும் தலைவர்களின் கலந்தாலோசனைக்கு சமர்ப்பிக்க அமைச்சரவை தீர்மானித்ததாக பிரதமர் விக்கிரமசிங்க அறிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினதும் பிரதமர் விக்கிரமசிங்கவினதும் தலைமையிலான அரசாங்கத்தின் (2015 - 2019) ஆரம்பக்கட்டத்தில் நிறைவேற்று அதிகார ஜனாதிபதியின் அதிகாரங்களைக் குறைப்பதற்காக நிறைவேற்றப்பட்ட 19 வது திருத்தத்தின் அம்சங்களையும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவின் ஆட்சியின் தொடக்கத்தில் 2020 பிற்பகுதியில் கொண்டுவரப்பட்ட 21வது திருத்தத்தின் அம்சங்களையும் கலந்ததாக புதிய திருத்தம் அமைகிறது.

ஜனாதிபதியின் அதிகாரங்கள் குறைக்கப்படுவதாக இருந்தாலும் அவரே தொடர்ந்தும் அரச தலைவராக இருப்பதை திருத்த வரைவு அனுமதிக்கிறது. அதே வேளை, ஒரு பாராளுமன்றத்தின் ஐந்து வருட பதவிக்காலத்தில் இரண்டரை வருடங்கள் நிறைவடைந்த நிலையில் அதைக் கலைப்பதற்கான அதிகாரத்தை ஜனாதிபதி கொண்டிருப்பார். 19 வது திருத்தத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நான்கரை வருடங்களுக்கு பிறகே ஜனாதிபதியினால் பாராளுமன்றத்தைக் கலைக்கமுடியும். நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறை ஒழிப்பு பற்றி பேச்சில்லை.

19 வது திருத்தத்தின் ஏற்பாடுகளின் கீழான அரசியலமைப்பு பேரவையையும் (Constitutional Council) சுயாதீன ஆணைக்குழுக்களையும் (Independent Commissions) மீண்டும் கொண்டுவரும் நோக்கத்தை பிரதானமாகக் கொண்டிருக்கிறது புதிய திருத்தம்.

பிந்திய இரு அரசியலமைப்பு திருத்தங்களினதும் கலவையாக வருகின்ற 21வது திருத்தம் முற்றுமுழுதான எதேச்சாதிகாரத்துக்கும் மிதவாதமான எதேச்சாதிகாரத்துக்கும் இடையிலான ஒரு ஊசலாட்ட ஏற்பாடாகவே அமையப்போகிறது என்பது தெளிவாகத்தெரிகிறது.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதியின் அதிகாரங்களைக் குறைப்புச் செய்வதற்கான சட்டவாக்க நடவடிக்கைகள் இந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் இருந்தே மேற்கொள்ளப்பட்டு வந்திருக்கின்ற போதிலும், இறுதியில் அந்த ஜனாதிபதி பதவியின் அதிகாரங்கள் மீண்டும் மீண்டும் அதிகரிக்கப்பட்டதையே எம்மால் காணக் கூடியதாக இருந்தது.



முனானாள் ஜனாதிபதி திருமதி சந்திரிகா பண்டாரநாயக்க குமார துங்கவின் இரண்டாவது பதவிக் காலத்தில் 2001 ஆம் ஆண்டில் கொண்டுவரப்பட்ட அரசியலமைப்புக்கான 17வது திருத்தத்தின் மூலமாக அரசியலமைப்பு பேரவையும் சுயாதீன ஆணைக்குழுக்களும் அறிமுகப்படுத்தப்பட்டு ஜனாதிபதியின் அதிகாரங்கள் சிறிதளவு குறைக்கப்பட்டன.

பாராளுமன்றத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்ட அந்த திருத்தத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் சுயாதீன ஆணைக்குழுக்களுக்கும் அரசியலமைப்பு பேரவைக்கும் நியமனங்களைச் செய்வதற்கு லிபரல் போக்குடைய ஒரு தலைவி என்று வர்ணிக்கப்படுகின்ற திருமதி குமாரதுங்கவே எவ்வாறு காலத்தை இழுத்தடித்தார் என்பது எல்லோருக்கும் தெரியும்.

(09 ஆம் பக்கம் பார்க்க...)











# 21 ஆக மறு அவதாரம் எடுக்கும் 19

(08 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

பிறகு ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் இரண்டாவது பதவிக்காலத்தின் தொடக்கத்தில் 2010 பிற்பகுதியில் கொண்டுவரப்பட்ட 18 வது திருத்தத்தின் மூலமாக சுயாதீன ஆணைக் குழுக்களும் ஜனாதிபதியின் இரு பதவிக்கால வரையறையும் இல்லாமல் செய்யப்பட்டன.

பிறகு மைத்திரி - ரணில் ஆட்சியில் 2015 ஆம் ஆண்டில் 19வது திருத்தத்தின் மூலமாக சுயாதீன ஆணைக் குழுக்களும் ஜனாதிபதிக்குரிய இரு பதவிக்கால வரையறையும் மீண்டும் அறிமுகப்படுத்தப்பட்டன. ஜனாதிபதி கோதாபயவின் ஆட்சியில் 20வது திருத்தம் சுயாதீன ஆணைக்குழுக்களை ஜனாதிபதிக்கு கீழ்ப்படிவானவையாக்கியது. இப்போது 21வது திருத்தம் என்ற வடிவில் 19வது திருத்தம் மறுஅவதாரம் எடுக்கப்பார்க்கிறது.

இதனிடையே, அண்மைக்கால இலங்கை பாராளுமன்ற வரலாற்றில் எம்.பி.க்களின் நடத்தைகளில் அவதானிக்கக்கூடியதாகவிருந்த ஒரு விசித்திரத்தை இச்சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்டுவது பொருத்தமானதாகவிருக்கும்.

ஒரு இருபது வருட காலத்திற்குள் கொண்டுவரப்பட்ட நான்கு அரசியலமைப்பு திருத்தங்களையும் (17,18,19,20) இன்று எம்.பி.க்களாக இருப்பவர்களில் கணிசமான எண்ணிக்கையினர் ஆதரித்தார்கள். திருத்தங்களுக்கு இடையிலான வேறுபாடுகள் எல்லாம் அவர்களுக்கு ஒரு பொருட்டல்ல. 21வது திருத்தத்தை ஆதரிப்பதும் அவர்களுக்கு ஒரு பிரச்சினையாக



இருக்கப்போவதில்லை.

புதிய திருத்த வரைவு கலந்தாராய்வுக்கு வரும்போது பாராளுமன்ற கட்சித்தலைவர்கள் வெளிப்படுத்தக்கூடிய நிலைப்பாடுகள் அதன் ஒப்பேறலில் பெரும் தாக்கங்களைச் செலுத்தும் என்பதில் சந்தேகமில்லை. நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிக்கப்படவேண்டும் என்ற நிலைப்பாட்டைக் கொண்ட எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச 21வது திருத்த வரைவு குறித்து ஏற்கெனவே அதிருப்தியை வெளியிட்டிருக்கிறார்.

அதன் போதாமைகளை அவர் சுட்டிக்காட்டுகிறார். ஜனதா விமுக்தி பெரமுனவை (ஜே.வி.பி.) பொறுத்த வரை தற்போதைய வடிவில் திருத்தத்தை தொட்டும் பார்க்கமாட்டார்கள் என்று நம்பலாம்.

ஜனாதிபதி கோட்டாபயவையும் அரசாங்கத்தையும் வீட்டுக்கப்போகுமாறு கோரும் மக்கள் போராட்டங்கள் உச்சக்கட்டத்தில் இருந்தபோது சில வாரங்களுக்கு முன்னர் பிரேமதாசவின் ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தனிநபர் பிரேரணையாக அரசியலமைப்பு திருத்தச்சட்டமூலம் ஒன்றை (21) சபாநாயகரிடம் கையளித்தார்.

அந்த வரைவு நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழித்து பாராளுமன்ற ஆட்சிமுறைக்கு திரும்ப வேண்டும் என்று கோருகிறது. பாராளுமன்றத்தினால் தெரிவு செய் யப்படுகின்ற ஜனாதிபதி சம்பிரதாய பூர்வ பதவிக்குரியவராக இருக்கும் அதேவேளை அரச தலைவராகவும் (Head of the State) ஆயுதப்படைகளின் பிரதம தளபதியாகவும் இருப் பதற்கு ஏற்பாடுகள் இந்த வரைவில் உள்ளன. ஜனாதிபதியை பாராளு மன்றத்தில் சாதாரண பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்படக்கூடிய நம்பிக்கையில்லா பிரேரணை மூலம் பதவி விலக்கவும் ஏற்பாடு இதில் உள்ளது.

அதேவேளை, அரசாங்கத்தில் இருந்துவிலகி பாராளுமன்றத்தில் சுயாதீன குழுவாக இருந்த 41 எம்.பி.க்களின் சார்பில் விஜேதாச ராஜபக்சவும் 21 வது திருத்தத்துக்கான தனிநபர் பிரேரணையொன்றை சமர்ப்பித்தார். அந்த பிரேரணை நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிக்கக் கோரவில்லை. ஜனாதிபதியின் அதிகாரங்கள் கணிசமாக குறைக்கப்பட்ட 19வது திருத்தத்தின் ஏற்பாடுகளை மீண்டும் அறிமுகப்படுத்தவேண்டும் என்றே அது கோரியது. ஜனாதிபதி பல விவகாரங்களில் பிரதமருடன் ஆலோசனை கலந்தே செயற்படமுடியும் என்று விஜேதாசவின் பிரேரணை கூறியது.

> " 19 வது திருத்தத்தின் ஏற்பாடுகளில் பெருமளவானவற்றை 21வது திருத்த வரைவில் உள்ளடக்குவது பற்றி பேசும்போது 2015 - 2019 கால கட்டத்தில் ஜனாதிபதி சிறிசேனவும் பிரதமர் விக்கிரமசிங்கவும் ஆட்சி நிருவாக செயற்பாடுகளில் ஏற்படுத்திய குளறு படிகளை நினைவு மீட்டவேண்டியது அவசியமானதாகும்.

தற்போது அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் 21வது திருத்த வரைவு விஜேதாசவின் பிரேரணையில் உள்ள ஏற்பாடுகளையே பிரதானமாகக் கொண்டிருக்கின்றது என்பதை இது வரை அறியக்கூடியதாக இருந்த தகவல்கள் மூலம் விளங்கிக்கொள்ள முடிகிறது.

19 வது திருத்தத்தின் ஏற்பாடுகளில் பெருமளவானவற்றை 21வது திருத்த வரைவில் உள்ளடக்குவது பற்றி பேசும்போது 2015 - 2019 காலகட்டத்தில் ஜனாதிபதி சிறிசேனவும் பிரதமர் விக்கிரமசிங்கவும் ஆட்சி நிருவாக செயற்பாடுகளில் ஏற்படுத்திய குளறுபடிகளை நினைவுமீட்டவேண்டியது அவசியமானதாகும்.

ஜனாதிபதியின் அதிகாரங்கள் குறைக்கப்பட்ட அதேவேளை பாராளுமன்றத்தினதும் பிரதமரினதும் அதிகாரங்கள் கணிசமானளவுக்கு வலுப்படுத்தப்பட்டன. அதனால் ஜனாதிபதி ஒருபுறத்திலும் பிரதமர் மறுபுறத்திலும் இரு அதிகார மையங்களாக செயற்பட்டதனால் அவர்களது ஆட்சி சீரழிந்தது. அதுவே ராஜபக்சாக்கள் மீண்டும் பிரமாண்டமான செல்வாக்குடன் ஆட்சியதிகாரத்துக்கு வர வழிவகுத்தது.

அதனால் அன்று 19வது திருத்தத்தில் இருந்த ஓட்டைகளின் விளைவாக ஏற்பட்ட குளறுபடிகள் மீண்டும் தோன்றாதிருப்பதை உறுதிசெய்வது முக்கியமானதாகும். அந்த நோக்கில் அரசியல் வர்க்கம் எந்தளவுக்கு விவேகத்துடன் செயற்படுமோ தெரிய



வில்லை.

எல்லாவற்றுக்கும் மேலாக, ஆட்சிமுறையின் தோல்விக்கு எதிராக நாடு பூராவும் கிளர்ந்தெழுந்திருக்கும் மக்களின் அரசியல் உணர்வு வெளிப்பாட்டின் பிரகாசமான சின்னமாக கொழும்பு காலிமுகத்திடலில் ஒன்றரை மாதகாலமாக ஜனாதிபதி செயலகத்தை முற்றுகையிட்டு நிற்கும் இளந்தலைமுறையினர் பிரதமர் விக்கிரமசிங்கவின் அரசாங்கம் முன்னெடுக்கின்ற அரசியல் சீர்திருத்தங்களை எவ்வாறு நோக்குகின்றார்கள் என்பதும் முக்கியமானது.

அபகீர்த்திக்குள்ளாகியிருக்கும் அரசியல் மேல் வர்க்கத்தை பாதுகாக்கும் நோக்கில் வடிவமைக்கப்படக்கூடிய எந்தவொரு “மேலோட்டமானதும் துண்டுதுண்டானதுமான” அரசியல் சீர்திருத்தங்கள் நாட்டின் பொதுவான அரசியல் நெருக்கடியையோ அல்லது ஜனநாயக நெருக்கடியையோ தீர்க்க உதவப்போவதில்லை.

ஈழநாடு



# ஆட்சிக் கவிழ்ப்பு அச்சத்தில் கோட்டாவின் அதிரடிக் களையெடுப்பு!

பனங்காட்டான்

மார்ச் மாதம் 31ம் திகதி மிரிஹானையிலுள்ள கோட்டாபய ராஜபக்சவின் வீட்டுக்கு முன்னால் திடுதிப்பென ஆரம்பமான கோதா வீட்டுக்குப் போ (கோட்டா கோ ஹோம்) என்னும் மக்கள் எழுச்சி இந்த மாதம் 30ம் திகதியுடன் இரண்டு மாதங்களைப் பூர்த்தி செய்கிறது.

கோட்டாவை இலக்கு வைத்து எறியப்பட்ட அம்பு திசை திருப்பப்பட்டு, இலக்கு மாறி - அவரை ஜனாதிபதி ஆசனத்தில் இருத்தி அழகு பார்த்த அண்ணன் மகிந்தவை மட்டுமன்றி அனைத்து ராஜபக்சக்களையும் வீடேக வைத்துவிட்டது.

இந்த வீடேற்றம் தற்காலிகமானதா அல்லது நிரந்தரமானதா என்பதை இப்போது கூறமுடியாது. கடந்த தேர்தலில் பூச்சியத்தின் மன்னராக்கப்பட்ட ரணில், திடீரென துள்ளி எழுந்ததுபோல காலக்கிரமத்தில் ராஜபக்சக்களும் எழக்கூடும். அதற்காகவாவது இன்னும் சில காலம் ஒருவாறு தமது பதவியை தக்க வைத்திருக்க வேண்டுமென கோட்டாபய எண்ணுகிறார் போல் தெரிகிறது. அதற்கேற்றாற்போல ரணிலை பிரதமராக்கி, அரச வண்டியை இழுத்துக் கொண்டிருக்கிறார்.

சிங்கள தேசிய அரசியலில் சுட்ட மண்ணும் பச்ச மண்ணுமாக இருந்து வரும் இருவேறு கட்சிகளின் ஷதலைகள், தங்கள் இருப்புக்காக இணைந்த கலப்பாட்சி இருவேறு திசைகளில் நகர்வதைக் காணமுடிகிறது.

இதனால் தினமும் இரவு வேளையில் விசேட வர்த்தமானிகள், அவசர கால விதிகள் உருவாக்கலும் ரத்தாவதும், புதுப்புது உயர்மட்ட நியமனங்கள், அதற்கு நிகராக பலரது பதவிகள் பறிக்கப்படுவது, கோடிக் கணக்கான ரூபாவில் ஆளிழுப்புகள் என்பவற்றோடு ரொக்கட் வேகத்தில் விலைவாசி உயர்வும் பொருட்கள் தட்டுப்பாடும் காணப்படுகிறது.

ஒன்றுக்கொன்று சோடி சேரமுடியாத இரண்டு மாடுகள், ஒற்றைத் திருக்கல் வண்டியை இழுத்தால் எப்படியிருக்குமோ அப்படித்தான் இலங்கையின் அரச சக்கரம் உருளுகிறது.

மே மாதம் 9ம் திகதிய சம்பவத்துடன் சம்பந்தப்பட்டவர்கள் பொலிஸ் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். இதில் மகிந்தவும் அவரது மகன் நாமலும் விதிவிலக்கல்ல. இவர் களது வெளிநாட்டுப் பயணங்களை தடை செய்த நீதிமன்றம், கடவுச்சீட்டுகளையும் ஒப்படைக்க உத்தரவிட்டது. மகன் ஒப்படைத்துவிட்டார். அப்பா இழுத்தடிக்கிறார். முன்னாள் பிரதமர் - முன்னாள் ஜனாதிபதி என்ற கௌரவ பிரச்சனை தடுக்கிறது போலும்.

என்ன சொன்னாலும், இரத்தம் தண்ணீரிலும் தடிப்பானது என்பதால் தம்பி கோதாவின் கடைக்கண் பார்வை தமக்குக் கிடைக்கலாமென அண்ணன் மகிந்த எண்ணுகிறாரானால், அதிலும் தவறில்லை. இப்போது குடும்ப - நீதிமன்ற பிரச்சனை, நாட்டுப் பிரச்சனையை விட மேலோங்கியுள்ளது. இந்தக் கட்டத்தில் இரட்டைப் பிரஜாவுரிமைக்காரரான பசில் ராஜபக்ச தமது வழமையான திரைமறை வேலைகளை தொடர ஆரம்பித்துள்ளார்.

ரணிலை எவ்வாறு பிரதமர் கதிரையிலிருந்து இறக்குவது, இரட்டைப் பிரஜாவுரிமை உள்ள தம்மை புதிய இருபத்தோராவது அரசியல் திருத்தத்திலிருந்து எவ்வாறு காப்பாற்றுவது என்ற விடயங்களில் மிகக் கரிசனையோடு இவர் செயற்படுகிறார்.

ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரங்களை நீக்கி அவற்றை நாடாளுமன்றத்துக்கு பாரப்படுத்தி விட்டால் தமது எதிர்காலம் சுபீட்சமாகும் என்ற நப்பாசையில் இருபத்தோராவது திருத்தத்தை துரிதமாக நிறைவேற்ற வேகமாக இயங்குகிறார் ரணில்.




நாடாளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மையுள்ள பொதுஜன பெரமுனவின் ஆதரவின்றி இதனை நிறைவேற்ற முடியாதென்பதால், பசில் தமது பணியை கச்சிதமாகக் கவனிப்பாரென்ற நம்பிக்கையில், இருபத்தோராவது திருத்தத்தைத் தாம் ஆதரிப்பது போன்று வெளிக்காட்டுகிறார் கோட்டாபய. இந்த அரசியல் குறளி விளையாட்டுகளை குள்ளநரி ரணில் புரியாதவரல்ல. இன்னும் சில மாதங்களில் கோட்டாவும் ரணிலும் கிளித்தட்டு விளையாடும்போது சகலதும் அம்பலமாகும்.

பொதுஜன பெரமுனவின் செயலாளர் சாகர காரியவாசம் ரணிலை நோக்கி சூடாகத் தன் கருத்தை வெளிப்படுத்தியுள்ளார். இவரை பிரதமர் பதவிக்குக் கொண்டு வந்தது பொருளாதார நெருக்கடியை நீக்கவே தவிர புதிய அரசியலமைப்பை கொண்டு வருவதற்கு அல்ல என்ற இவரின் கருத்தினூடாக ரணிலை பொதுஜன பெரமுன எங்கு வைத்திருக்கிறது என்பதை புரிந்து கொள்ளலாம்.

சமகாலத்தில் சில முக்கிய களையெடுப்புகளில் கோட்டாபய இறங்கியுள்ளார். கடந்த இரண்டு வருடங்களில் தம்மால் அரச உயர் பதவிகளுக்கு கொண்டு வரப்பட்டவர்களில் சிலரை இலகுவாக வீட்டுக்கு அனுப்பிவைக்கும் செயற்பாடு இது.

படைத்துறைகளைச் சேர்ந்த - தமிழின அழிப்பில் முனைப்புடன் செயற்பட்ட - தம்முடன் இணைந்து முள்ளிவாய்க்காலில் மனித குலத்துக்கு எதிராக இயங்கிய சுமார் முப்பதுக்கும் அதிகமானவர்களை பல முக்கியமான பதவிகளில் கோட்டாபய அமர்த்தியிருந்தார். இதனை ஜெனிவா மனித உரிமைகள் பேரவை, சர்வதேச மன்னிப்புச் சபை உட்பட பல அனைத்துலக அமைப்புகள் கண்டித்திருந்தன.

வழமையாக சிவில் சேவை அதிகாரிகள் வகிக்கும் பல அமைச்சுகளின் செய லாளர் பதவிகளை தமது கூட்டாளிகளான ராணுவத்தினருக்கு கோட்டா வழங்கினார். அதுமட்டுமன்றி துறைமுக சேவை, விமானப் போக்குவரத்து, கூட்டுத்தாபனங்களின் தலைமைப் பதவிகள் என்று பலவற்றுக்கு தமது படைத்துறை நண்பர்களையே நியமித்தார்.

கோட்டா கோ ஹோம் போராட் டத்தின் விளைவாக இவர்களுள் முக்கியமான சிலர் இந்த வாரத்தில் பதவி பறிக்கப்பட்டுள்ளனர். சுகாதார அமைச்சின் செயலாளர் மேஜர் ஜெனரல் சஞ்சீவ முனசிங்க, பொதுப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மேஜர் ஜெனரல் ஜெகத் அல்விஸ், வெளியுறவு அமைச்சின் செயலாளர் அட்மிரல் ஜெயநாத் கொலம்பகே ஆகியோர் இதுவரை பதவியிழந்த முக்கியமான மூவர். டோக்கியோவில் இலங்கையின் தூதுவராக இருந்த சஞ்சீவ குணசேகர பதவியை ராஜினாமா செய்துள்ளார்.

**கோட்டா வீட்டுக்குப் போ என்ற எழுச்சி அவரின் சகோதரர்களையும் மருமக்களையும் மட்டுமன்றி, அவரால் பதவி வழங்கப்பட்ட பல படைத்துறை அதிகாரிகளையும் வீட்டுக்கு அனுப்ப ஆரம்பித்துள்ளது. இவ்வாறு வெளியேறும் - வெளியேற்றப்படும் ஷ பிரமுகர்கள், கோட்டா கோ ஹோம் பக்கம் திரும்புவார்களானால் என்ன நடைபெறும்? இதற்கான பதிலைச் சொல்லக்கூடிய ஒருவர் இப்போதைக்கு ரணில்தான்.**

கோட்டாவின் நம்பிக்கைக்குப் பாத்திரமாக - வலது கரமாக இயங்கிய ராணுவத்தளபதி சவேந்திர சில்வா இந்த மாதம் 31ம் திகதியுடன் அப்பதவியிலிருந்து நீங்குகிறார். இவர் தாமாகவே பதவி விலகுவதாகக் கூறப்படினும், கோட்டாயவின் கோரிக்கைக்கு இணங்கியே (மகிந்தவுக்கு நடந்தது போன்று) பதவி விலகுகிறார். இப்போதைக்கு சில மாதங்களுக்கு முப்படைகளின் பிரதானியாக கடமையாற்றிவிட்டு அதிலிருந்தும் விலக்கப்படுவாரென்பது தெரிந்த விடயம்.

இந்த மாத ஆரம்பத்தில் கொழும்பிலுள்ள அமெரிக்க தூதுவர் ஜூலி சங், சவேந்திர சில்வாவை தனிமையில் சந்தித்து உரையாடினார். வெளிநாட்டுத் தூதுவர் ஒருவர் ராணுவத் தளபதியை சந்தித்து களநிலைவரம் பற்றி உரையாடுவது வழமையானதல்ல. ராஜரீக (டிப்ளோமசி) நடைமுறைக்கு இது முரணானது. இச்சந்திப்பையிட்டு கோட்டாபய சற்றே சலனமடைந்திருந்தார்.

இந்தச் சந்திப்பின் பின்னர் மே மாதம் 9ம் திகதி இடம்பெற்ற ஆர்ப்பாட்டக்காரர் மீதான தாக்குதல், அரச தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் மற்றும் ஆதரவாளர்களின் வீடுகள் எரிக்கப்பட்டது சேதமாக்கப்பட்டது போன்ற விடயங்களில் ராணுவத் தளபதி நடவடிக்கை எடுக்கத் தவறியதாக பல குற்றச்சாட்டுகள் பகிரங்கமாக வைக்கப்பட்டன. அமெரிக்க தூதுவருக்கும் சவேந்திர சில்வாவுக்குமிடையிலான சந்திப்பின் பின்னணியில் இவ்வாறு நடவடிக்கை எடுக்கத் தவறியிருக்கலாம் என்ற சந்தேகம் கொழும்பின் சில பிரதான ஊடகங்களில் சுட்டிக்காட்டப்பட்டது. இவ்வாறான கருத்தை ஊடகங்களுக்கு கோட்டாபய தரப்பே கசிய விட்டதாகவும் சொல்லப்படுகிறது.

இது உண்மையாக இருக்குமானால், சிலவேளை ஆட்சிக்கவிழ்ப்பினூடாக ராணுவப் புரட்சி ஒன்றுக்கு திட்டமிடப்படுகிறதா என்ற கேள்வி கோட்டாபயவின் சுற்றுவட்டத்துக்குள் எழுந்தது. இதன் முன்னெச்சரிக்கையாக சவேந்திர சில்வா ராணுவத் தளபதி பதவியிலிருந்து இறக்கப்படுகிறார். ராணுவ மேஜர் ஜெனரலாகவிருக்கும் விகுன் லியனகே இப்பதவியை யூன் 1ம் திகதி ஏற்கவுள்ளார்.

1980ன் பிற்பகுதியில் ரணசிங்க பிரேமதாச ஜனாதிபதியாகப் பதவியேற்ற போது, பிரதமர் பதவிக்கு உயர் தகுதியான பலர் அவரது கட்சியில் இருந்த போதும், தபால் அமைச்சராகவிருந்த ஷ சப்பாணி; அரசியல்வாதியான டி.பி. விஜேதுங்கவை பிரதமர் பதவிக்கு நியமித்தார். தமது பதவியை கவிழ்க்கும் சாதுரியமில்லாதவரை பிரதமராக நியமித்தால் தமது பதவிக்கு ஆபத்தில்லையென்ற எண்ணமே விஜேதுங்க தெரிவுக்கிருந்த ஒரேயொரு தகுதி.

இதே பாணியில்தான் விகும் லியனகேயை புதிய ராணுவத் தளபதியாக தேடிப்பிடித்து நியமித்துள்ளார் கோட்டாபய. பாதுகாப்பு செயலாளர் கமால் குணரட்னதான் இப்போது எஞ்சியிருக்கும் கோட்டாவின் கூட்டாளி. மே மாதம் 9ம் திகதி அசம்பாவிதத்தின்போது பொலிஸார் சில நடவடிக்கைகளை எடுக்க முனைந்தவேளை - இது அண்ணன் தம்பி பிரச்சனை, இதற்குள் தலையிட வேண்டாம் என்று கமால் குணரட்ன ஆலோசனை வழங்கியதும் இப்போது பகிரங்கமாகியுள்ளது. இதனைச் சாதமாக கோட்டாபய பார்ப்பாரானால் கமாலின் தலை உருளாது. வேறு மாதிரிப் பார்ப்பாரானால் இவரும் விரைவில் வீட்டுக்குச் செல்ல வேண்டியவராவார்.




மொத்தத்தில் ஒன்றுமட்டும் நன்கு தெரிகிறது. கோட்டா வீட்டுக்குப் போ என்ற எழுச்சி அவரின் சகோதரர்கள் மருமக்களை மட்டுமன்றி, அவரால் பதவி வழங்கப்பட்ட பல படைத்துறை அதிகாரிகளையும் வீட்டுக்கு அனுப்ப ஆரம்பித்துள்ளது.

இவ்வாறு வெளியேறும் - வெளியேற் றப்படும் ஷபிரமுகர்கள், கோட்டா கோ ஹோம் பக்கம் திரும்புவார்களானால் என்ன நடைபெறும்? இதற்கான பதிலைச் சொல்லக்கூடிய ஒருவர் இப்போதைக்கு ரணில்தான்.

# உச்ச விலையில் தங்கம் தளம்பும் நகை வியாபாரம்

நாட்டின் பொருளாதார வீழ்ச்சியும் உலகப் போக்கும் இன்று தங்கத்தின் விலையை உச்சத்தில் ஏற்றி வைத்துள்ளது. இதன் விளைவு, சேமிப்பாகவும் – முதலீடாகவும் தமிழர்களின் கலாசார அடையாளமாகவும் இருக்கும் தங்க நகை வியாபாரத்தை தளம்ப வைத்துள் ளது. உலக நெருக் கடியும் – நாட்டின் பொருளாதாரமும் ஒருசேர நெரிக்கும் யாழ்ப்பாணத்தின் தங்க வியாபாரம் குறித்து இங்கே மனம் திறக்கின்றனர் நகை வியாபாரிகள்...!

## எங்கள் நிலைமை கவலைக்கிடம்



**ஏ. கே. நந்தபாலா,**
நகை வியாபாரி,
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

யாழ்ப்பாணம் கன்னாதிட்டியில் 1984 ஆம் ஆண்டிலிருந்து நகை வியாபார தொழிலை நடத்துகிறேன். முன்னர் இருந்ததை விட தற்போது தங்கத்தின் விலையேற்றத்தால் நகை வியாபாரம் மிகவும் மோசமான நிலைக்கு சென்றுள் ளது. உதாரணமாக 50 ஆயிரத்துக்கு ஒரு பவுன் வாங்கலாம் என்றால் தற்போது ஒரு பவுன் 2 இலட்சம் ரூபாய்க்கு வாங்க வேண்டியுள்ளது. அந்த இரண்டு இலட்சம் ரூபாய்க்கும் முன் னர் 4 பவுண் வாங்கலாம்.

நகை வியாபாரத்தை பொறுத்தவரை விலையேற்றத்திற்கு ஏற்ப எங்களு டைய முதலீட்டையும் கூட்டிக் கொண்டுபோக வேண்டும். அவ்வாறு முதலை கூட்டிகொண்டே போக வழி இல்லாவிட்டால் நம்மிடம் இருக்கின்ற மூலதனமான தங்கம் வெகுவாக குறைந்து போய்விடும்.

பவுன் விலையேற்றத்துக்கு முன்னர் 11 பவுனில் செய்த தாலிக்கொடி இப்போது, ஒன்பது, ஏழு, ஐந்து பவுன் எனக் குறைந்து செல்கின்றது. முன்னர் சாதாரணமாக 11 பவுன் தாலிக்கொடி போடுவார்கள் தற் பொழுது அந்த நிலைமை மாறிவிட்டது.

ஒவ்வொரு பிள்ளையின் பிறந்தநாளுக்கும் சங்கிலி, மோதிரம் எடுப் பார்கள். ஆனால், அந்த வியாபாரம் இப்போது நடப்பதில்லை. அனேக மாக தாலிக்கொடி, மாற்று மோதிரம் செய்யும் வியாபாரம் மற்றும் பழைய பவுனைக் கொடுத்து புதிதாக்கும் வியாபாரமுமே இடம்பெறுகின்றன.

முன்னரை விட நமக்கு கிடைக்கின்ற இலாபம் மிகவும் குறைவ டைந்து செல்கின்றது. 2 இலட்சம் ரூபாய் முதலுக்கு ஏற்ற இலாபம் மிகவும் குறைவு. கொள்வனவு செய்கின்ற பவுனின் விலை இன்றைய விலை 175,000 ரூபாய் என்று வைத்துக்கொண்டால் தங்கத்தின் விலை இறங்கி விடுமோ அல்லது நாளை விலை குறைந்து விடுமோ, விலை கூடுமோ என நாங்கள் பவுனை கொள்வனவு செய்வதிலும் பல இடர்பாடுகளை எதிர்நோக்கி நிற்கிறோம்.

எமக்கு மட்டுமல்ல பொது மக்களுக்கும் இதனால் பாதிப்புதான் பவுன் விலை சில வேளைகளில் 5,000 ரூபாய் குறைவடைந்தும் காணப் படுகின்றது. ஆனால், இந்த நாட்டில் பொருளாதார நிலைமை சரியாகும் வரைக்கும் நகைக் கடை வியாபாரிகளின் நிலை மிகவும் கவலைக்கிடம்.

**அறிக்கையிடல்**
**REPORTING**
**என். குகராஜ்**

## சேமிப்பு இன்று கேள்வியாகிறது!



**இராசையா ஜெயக்குமார்,**
அசோகா நகைக்கடை உரிமையாளர்

யாழ்ப்பாண குடாநாட்டில் தற்போ தைய பவுன் நிலவரம் மற்றும் இதற்கு முன் னரான நிலவரத்தை பார்க்கும்போது ஆறு மாதங்களுக்கு முதல் அல்லது கடந்த ஒரு வருடத்திற்கு முதல் இருந்த நிலையை விட தற்பொழுது பவுனின் விலை மூன்று மடங்குக்கு மேல் அதிகரித்துள்ளது.

இந்த அதிகரிப்பால் நகைக் கடை வியா பாரம் அதிகளவில் பாதித்துள்ளது. ஏனென்றால், மக்களிடம் பணம் இல்லை. அத்துடன், நாட்டில் பணவீக்கம் அதிகமா கவுள்ளது. அதேநேரம் தமிழ் மக்களான எங்களிடம் ஒரு கலாசாரம் இருக்கின்றது. நகை அதுவும் முக்கியமாக திருமணம் என்றால் தாலிக்கொடி கட்டாயமாக அனைவரும் செய்கின்றார்கள். தங்களு டைய வசதிக்கேற்றவாறு செய்கின்றார் கள். அதாவது செய்ய வேண்டும் என்ற கட்டாயத்தின் பெயரில் செய்கிறார்கள். ஆனால், தமிழர்களின் ஒரு பாரம்பரிய கலாசாரம் சேமிப்பு என்பது ஒரு விடயமாக இருந்தது.

அது கூடியளவில் தங்க நகைகளை தமது சேமிப்பாக வைத்திருந்தார்கள். ஆனால், தற்போது அது மிகவும் குறைவடைந்துள் ளது. காரணம் பவுனின் விலை மிகவும் அதி கரித்துள்ளது. பாதுகாப்பு பிரச்னை. தற் போதைய நிலையில், யாழ்ப்பாணத்தில் உள்ள பொதுமக்கள் தம்மிடம் இருக்கின்ற நகைகளை விற்று பணத்தை வங்கியில் வைப் பிலிடும் நிலைமை காணப்படுகின்றது.

நாட்டுச் சூழ்நிலை இவ்வளவு தாக்கப் பட்டும் இவ்வளவு பொருளாதார நெருக்கடி ஏற்படும் யாழ்ப்பாண மக்கள் ஓரளவு தாக் குப்பிடிப்பதற்கு காரணம், இந்த பொருளா தார தடை உணவு கட்டுப்பாடுகளுக்கு யாழ் மக்கள் ஓரளவு பழக்கப்பட்டவர்கள் என்பதுதான். நம்மிடமிருக்கின்ற பவுன் சேமிப்பு. ஆனால், இந்த சேமிப்பு என்ற விடயம் தற்போது ஒரு கேள்விக்குறியான நிலையில் காணப்படுகின்றது.

எதிர்காலத்தில் பவுன் சேமிப்பு நிலைமை எவ்வாறு வரும் என்பது கேள்விக்குறி யாக காணப்படுகின்றது.

இந்த விடயம் தொடர்பில் நாம் அனை வரும் சிந்திக்க வேண்டிய நிலையும் காணப் படுகின்றது. இப்போது பவுனின் விலை ஒரு சீரான நிலையில் இல்லை. மூன்று, நான்கு மாதங்களுக்கு முதல் இரண்டு இலட்சம் ரூபாய் வரை விலை அதிகரித்து காணப்பட்டது. ஆனால், மிகவும் குறைந்து கொண்டு வந்து ஒரு இலட்சத்து எழுபத்து ஐயாயிரம் ரூபாய் வரை குறைவடைந்து மீண்டும் விலை அதிகரித்து செல்கின்றது. 2 இலட்சம் ரூபாய் வரை அதிகரித்து சென்று தற்போது ஒரு இலட்சத்து எழுபத்தி ஐயாயிரம் ரூபாயாக குறைந்து இருக்கின் றது. ஆனால், பவுன் விலை மிகவும் தளம் பல் நிலையில் காணப்படுகின்றது. சரியான விலையை வாடிக்கையாளருக்கு சொல்ல முடியாத பெரும் துரதிர்ஷ்டம் நகை வியாபா ரிகளான எங்களுக்கு காணப்படுகின்றது.

தமிழ் பாரம்பரிய திருமண காலங்களில் தங்கத்தின் விலை அதிகரிக்கும். அது உலக ளாவிய ரீதியில்தங்கம்விலை என்ன விலையோ அதுதான் இங்கேயும். அந்த விலையேற் றத்துக்குக் காரணம். ஆனால், உலகளா விய ரீதியில் தங்கத்தின் விலை அதிகரிக் கும் போது நாங்கள் அதிக விலை கொடுத்து பவுனை வாங்க வேண்டும். ஆனால், திருமண காலங்களில் தங்கத்தின் விலை அதிகரிக் கும் என்பது பிழையான கருத்து.

ஆரம்பத்தில் பவுன் விலை குறைவாக இருக்கும்போது கிடைத்த இலாபத்தை விட தற்போது பவுன் விலை கூடும்போது கிடைக்கின்ற இலாபம் மிகவும் குறைவ டைந்து காணப்படுகின்றது. பவுன் விலை குறைவாக இருக்கும்போது கூலி மற்றும் ஏனைய செலவுகளால் ஏற்பட்டாலும் அதிக இலாபம் கிடைத்தது. ஆனால், பவுனின் விலை அதிகமாக இருக்கும் போது எம்மி டம் வரும் வாடிக்கையாளர்கள் பாதிக்கப் படக்கூடாது என்பதான நிலைப்பாடும் அந்த வாடிக்கையாளர்களை திருப்திப்படுத் துவதற்காக எங்களுக்கு வரும் இலாபத்தை குறைத்து வாடிக்கையாளர்களை திருப்திப் படுத்துவதற்காக தொடர்ச்சியாக முன்னெ டுக்க வேண்டிய நிலையில் நாங்கள் தள்ளப்பட்டுள்ளோம்.

## விலைகூடியதால் இலாபம் குறைந்துள்ளது



**நடராஜா கஜேந்திரன்,**
நியூ மைதிலி ஜூவல்லரி உரிமையாளர்

யாழ்ப்பாணத்தில் இன்றைய தங்கத்தின் விலை 24 கரட் ஒரு இலட்சத்து 86 ஆயிரம் ரூபாய். 22 கரட் ஒரு இலட்சத்து75 ஆயிரம் ரூபாய். 20 கரட் ஒரு இலட் சத்து 55ஆயிரம் ரூபாய்.

யாழ்ப்பாணத்தில் நாளாந்தம் தங்கத்தின் விலை கூடுவதும் குறைவதுமாக இருக்கின்றது தற்சமயம் குறைந்துகொண்டு போகின்றது. எந்தளவு குறையும் என்பது எங்களுக்கு தெரியாது. உறுதியாகச் சொல்ல முடியாதுள்ளது. ஆனால், மீண்டும் கூடும் என நகை வியாபாரிகள் எதிர்பார்க்கின்றார்கள்.

கடந்த காலங்களுடன் ஒப்பிடும்போது தேவைகள் உள்ளவர்கள் மாத்திரமே நகைக் கடைகளுக்கு நகை வாங்க வருகிறார்கள். முன்னர்போல வியாபாரம் இல்லை. முன்னரை போல டிசைன் நகை அதிகமாக தேடுபவர்கள் குறைவு நமக்கு தேவையான தங்கத்தை உரிய நேரத்துக்கு எடுக்க முடியாவிட்டாலும் எமக் குத் தேவையான தங் கத்தை உரிய காலத் தில் பெற்றுக் கொள்ளக் கூடிய தாக இருக்கின்றது.

தங்கத்தின் விலை கூடக்கூட இலாபம் குறைவாகத் தான் எமக்கு கிடைக்கின்றது. ஆனால், நீண்டகால மாக இந்த நகை வியாபாரத்தில் ஈடுட்டதால் தொடர்ச்சியாக இந்த வியாபாரத்தை தொடர்ந்து செய்கிறோம். ஆனால், தங்கத்தின் விலை அதிகரிக்க அதிகரிக்க நமக்கு இலாபம் மிக சொற்ப அளவே கிடைக்கின்றது. விலை உயர்வு உலக நாடுகளோடு சம்பந்தப்பட்ட விடயம் ஆனால், எமது நாட்டிலுள்ள பொருளாதார பிரச்னையும் இந்த விலைத்தளம்பல் ஏற்படக் காரணம். சிங்கப்பூரில் இருந்தே நமக்கு தேவையான டிசைன் நகைகளை பெற்றுக்கொள்வோம். அத்துடன், சில மொத்த வியாபாரிகள் ஊடா கவும் எமக்குத் தேவையான தங்கத்தைப் பெற்றுக் கொள்வோம். கூடுதலாக சிங்கப்பூர் நகைகளே எமக்கு கிடைக்கின்றன. ஏனென்றால், மக்களுக்கு தரமான பொருளை கொடுக்க வேண்டும். புதிய டிசைன்களை கொடுக்க வேண்டும் என்பதற்காக புதிய டிசைன்களை சிங்கப்பூரில் இருந்து வாங்குகிறோம்.

ஆனால், தற்போது மக்கள் நகை கொள்வனவில் அதிக அளவில் நாட்டம் காட்டவில்லை. இப்போது, யாழ்ப்பாணத்தில் உள்ள மக்கள் 10 பவுன் தேவையெ னில் 5 பவுனைக் கொள்வனவு செய்து கொண்டு செல்கின் றார்கள். அதாவது, தமது திருமண நிகழ்வுகள் அல்லது பொது நிகழ்வுகளில் தேவையானவற்றை பெற்றுச் செல்கிறார்கள்.

# அடுத்த வருடமே அஜித் படம்



விக்னேஷ் சிவன் அடுத்து அஜித்தின் படத்தை இயக்கவுள்ளார் என்பது அறிந்ததே. படத்தின் கதையை அஜித் இன்னும் முழுமையாகக் கேட்கவில்லை. ஒரு வரிக் கதையை மட்டும் சொல்லி சம்மதம் வாங்கியிருக்கிறார் விக்னேஷ் சிவன்.

அவரின் திருமணத்துக்குப் பிறகுதான் அஜித் படத்துக்கான பணிகள் தொடங்கவிருக்கின்றன. அடுத்த வருடம் ஜனவரி மாதம், இதன் படப்பிடிப்பு தொடங்கும் என்கிறார்கள்.

# இரு பாகமாகும் விடுதலை



வெற்றிமாறன் இயக்கத்தில் விஜய் சேதுபதி, சூரி, கௌதம் மேனன், பிரகாஷ்ராஜ், பவானி ஸ்ரீ உட்பட பலர் நடித்து வரும் படம் விடுதலை. இளையராஜா இந்தப் படத்திற்கு இசையமைக்கிறார்.

கதையின் நாயகனாக சூரி நடித்து வரும் இந்தப் படத்தில் விஜய் சேதுபதி ஒரு முதன்மை கதாபாத்திரத்தில் நடிக்கிறார். ஆரம்பத்தில் சில நாட்கள் மட்டுமே இந்தப் படத்தில் விஜய் சேதுபதி நடிப்பார் என்று கூறப்பட்ட நிலையில், தற்போது அவரின் கதாபாத்திரத்துக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப் பட்டுள்ளது.

முக்கியத்துவம் கருதி விஜய் சேதுபதியின் பாத்திரத்தின் நேரம் அதிகமாகியுள்ளது. இதனால், படத்தின் நீளமும் அதிகரித்து விட்டது. இதனால், விடுதலை படத்தை இரு பாகங்களாக வெளியிடத் திட்டமிட்டுள்ளார்கள்.



# மீண்டும் சினேகா!



பிள்ளைகளை கவனிப்பதற்காக சினேகா திரையுலகிலிருந்து ஒதுங்கியிருந்தார். தற்போது அவர்கள் வளர்ந்து விட்டதால் மீண்டும் களமிறங்கத் தீர்மானித்துள்ளார்.

முக்கிய பாத்திரங்களில் நடிக்கவும் சொந்தமாகப் படங்கள் தயாரிக்கவும் அவர் திட்டமிட்டு வருகிறார். இதற்கு அவரின் கணவர் பிரசன்னாவும் ஆதரவளித்துள்ளாராம்.

நடுத்தர செலவிலான படங்களே அவரின் தெரிவாகவுள்ளது. இதற்காக அவர் தீவிரமாகக் கதை கேட்டு வருகிறார். திரையுலகில் மீண்டும் வருவதால் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் பங்கேற்பதை குறைத்து வருகிறார்.

# வேகமெடுக்கும் பாலா படம்!

சூர்யா நடிப்பில் பாலா இயக்கும் படத்தின் முதல்கட்ட படப்பிடிப்பு முடிந்துள்ளது. 30 நாள்கள் நடந்த படப்பிடிப்பில் ஒரு மணி நேர காட்சிகள் தேறியுள்ளனவாம்.

படத்தின் செம்மையாகத்திலும் (எடிட்டிங்) பாலாவுக்கும் திருப்தி. இதனால், அடுத்தகட்டப் படப்பிடிப்பை முன்னதாகவே ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.



# திருமண திகதி அறிவிப்பு!

திரையுலகின் காதல் இணையரான விக்னேஸ் சிவன் - நயன்தாரா இணை தங்கள் திருமண திகதியை அறிவித்துள்ளார்கள்.

நானும் ரவுடிதான் படத்தின் மூலம் இணைந்த இருவரும், அந்தப் படத்தின் பின்னர் தங்கள் காதலை பகிரங்கப்படுத்தினர். அண்மைக்காலமாக கோயில்களுக்கு இருவரும் சென்று வந்த நிலையில், எதிர்வரும் ஜூன் 9ஆம் திகதி திருமண பந்தத்தில் இணையவுள்ளதாக அறிவித்துள்ளனர்.

முதலில் திருப்பதி கோயிலில் திருமணத்தை நடத்த இருவரும் திட்டமிட்ட போதும், அதிகளவான விருந்தினர்களின் பங்கேற்பை ஆலய நிர்வாகம் விரும்பாததால் சென்னை மகாபலிபுரத்திலுள்ள ஹோட்டல் ஒன்றில் திருமண நிகழ்வை நடத்தவுள்ளனர். இருவரின் திருமண நிகழ்வு ஒளிபரப்பு உரிமையை பிரபல இணைய நிறுவனம் ஒன்று வாங்கியுள்ளது.




## திரைப்படம் - ரொப் கன் மேவ்ரிக்

**இயக்கம் - ஜோசப் கொசின்ஸ்கி**

**நடிப்பு - ரொம் குரூஸ், மைல்ஸ் ரெல்லர், ஜெனிபர் கான்னெலி**

டோனி ஸ்கார் இயக்கத்தில், ரொம் குரூஸ், கெல்லி மெக்கில்ஸ், வால் கில்மர் மற்றும் பலர் நடித்து 1986ஆம் ஆண்டில் வெளிவந்த ஹொலிவூட் திரைப் படம் “ரொப்கன்”. அப்படத்தின் தொடர்ச்சியாக 36 ஆண்டுகள் கழித்து வந்துள்ள படம் தான் “ரொப் கன் – மேவ்ரிக்”.

ஜோசப் கொசின்ஸ்கி இயக்க, ரொம் குரூஸ், மைல்ஸ் டரல்லர், ஜெனிபர் கான் னெலி மற்றும் பலர் இப்படத்தில் நடித்திருக்கிறார்கள். சுமார் 17 கோடி டொலர் செலவில் உருவாகியுள்ள படம் இது.

ரொம் குரூஸ் படம் என்றாலே அதிரடியான சண்டைக் காட்சிகள் நிச்சயம் இருக்கும். இந்தப் படத்தில் இந்த அதிரடி அனைத்துமே அந்தரத்தில் இருக்கிறது. அதாவது வானில் போர் விமானங்களின் சாகசங்களாக இடம்பெற்றுள்ளது. இந்தப் படத்துக்காக போர் விமானங்களை ஓட்டவும், கமெராக்களை வைத்து படமெடுக்கவும் ரொம் குரூஸ் உள்ளிட்ட நடிகர்கள் சில மாதங்கள் பயிற்சிகளை மேற்கொண்டனர். அதற்குப் பிறகே படப்பிடிப்பில் கலந்து கொண்டனர்.

அமெரிக்க கடற்படையில் 30 ஆண்டுகளுக்கும் மேலாக பணியில் இருக்கும் விமானியான பீட் மேவ்ரிக் (ரொம் குரூஸ்), ஓர் அதிரடி தாக்குதல் திட்டத்திற்காக இளம் திறமை சாலிகள் அடங்கிய போர் விமானிகள் குழுவுக்கு பயிற்சி அளிக்க அழைக்கப்படுகிறார். அங்கு அவரஜன நெருங்கிய நண்பரான மறைந்த கூஸின் மகன் பிராட்லி பிராட்ஷாவை (மைல்ஸ் ரெல்லர்) சந்திக்கிறார். தாக்குதல் திட்டத்திற்கு பிராட்லியையும் சேர்க்க வேண்டுமா, வேண்டாமா என தடுமாறுகிறார் மேவ்ரிக். அதற்குக் காரணம் விமான விபத்தில் இறந்த நண்பன் கூஸ். இந்த சூழ்நிலையில் அவர் தாக்குதல் திட்டத்துக்கு யாரைத் தேர்ந்தெடுத்தார், தாக்குதல் வெற்றிகரமாக நடந்ததா இல்லையா என்பதுதான் படத்தின் மீதிக் கதை.

30 ஆண்டுகளுக்கு மேலாகியும் ஹொலிவுட்டின் அட்டகாசமான அதிரடி நாயகர் களில் ஒருவராக ரொம் குரூஸ் இருக்கிறார் என்பதே அவரின் ரசிகர்களுக்குக் கொண்டாட்டமாக இருக்கும். இந்த வயதிலும் 30 ஆண்டுகளுக்கு முன்னால் எப்படி அதிரடிகளில் அசத்தினாரோ அதே போலவே இந்தப் படத்திலும் அசத்தி இருக்கிறார். மிகநவீன போர் விமானங்களைக் கையாள்வதில் ஒரு பக்கம் அதிரடி என்றால், மற்றொரு பக்கம் தனது மறைந்த நண்பனின் மகனை இந்தத் திட்டத்தில் ஈடுபடுத்த வேண்டுமோ என்று உணர்ச்சி வசப்பட்டு யோசிப்பதில் ஆகட்டும், இன்னொரு பக்கம் முன்னாள் காதலி ஜெனிபர் கான்னெலியுடன் காதல் செய்வதில் ஆகட்டும் ரொம் குரூஸின் நடிப்பு உச்சம்.

ரொம் குரூஸ் நண்பனின் மகனாக மைல்ஸ் ரெல்லர், மைல்ஸை சீண்டிப் பார்க்கும் சக விமானியாக கிளென் போவெல், அட்மிரலாக ஜோன் ஹேம் ஆகியோரும் இப்படத் தில் குறிப்பிட வேண்டியவர்கள். முதல் பாகத்தில் நடித்த வால் கில்மர் இப்படத்தில் அட்மிரல் ஆக ஒரே ஒரு காட்சியில் நடித்திருக்கிறார்.

உலக நாடுகளின் பேச்சுக்களைக் கேட்காத ஒரு நாடு யுரேனியத்தை வைத்து செய்ய நினைக்கும் பரிசோதனைக் கூடத்தை அழிப்பதற்காக ரொம் குரூஸ் அவர் பயிற்சி தரும் மாணவர்கள் செய்யும் விமானப் பயிற்சிகள் ஒவ்வொன்றும் எப்படி படமாக்கப்பட்டது என்ற ஆச்சரியம் ஒவ்வொரு காட்சியிலும் நமக்குத் தோன்றுகிறது. இந்தப் படத்தில் வி. எவ். எக்ஸ் காட்சிகள் குறைவாகத தான் உருவாக்கப்பட்டிருக்கிறதாம். பல காட்சிகள் உண்மையான அதிரடிக் காட்சிகளாகவே படமாக்கப்பட்டுள்ளது. இடைவேளை வரை கொஞ்சம் உணர்ச்சிமயம், வசனக் காட்சிகள், காதல் என நகரும் படம் இடைவேளைக்குப் பின்னர் பரபரப்பாகி, உச்சக்கட்டத்துக்கு முன்பாக இருக்கையின் நுனியில் அமர்ந்து இரசிக்க வைக்கிறது. ஹொலிவூட் அதிரடிப் படப் பிரியர்களுக்கு இந்தப் படம் நிச்சயம் பிடிக்கும்.

# கனவை நெருங்கும் ராஜஸ்தான்!



கப் பந்து வீச்சாளர்களின் எழுச்சியாலும், பட்லரின் வழக்கமான சரவெடியாலும், 13 தொடர் கள் கழித்து இறுதிப் போட்டியில் நுழைந்தது ராஜஸ்தான் றோயல்ஸ். மறு புறம் ஆர்.சி.பியோ வழக்கம்போல அனைத்துத் தவறுகளையும் செய்து தங் கள் கோப்பைக் கனவை அடுத்த வருடத்திற்கும் நீட்டித்துள்ளது.

கோலியின் சதத்திற்காக மட்டுமல்ல, ஆர்.சி.பியின் கோப்பைக் கனவுக்கும் சுபம் போட முடியாமல் ரசிகர்களின் காத்திருப்பு தொடர்ந்து கொண்டே இருக்கிறது.

நாணயச் சுழற்சியில் தொடர்ந்து வாகை சூடும் சாம்சன், இந்தப் போட்டியிலும் அதிசயமாக வென்றார். இருப்பினும், "நாங்கள் துடுப்பெடுத்தாடவே விரும்பினோம்" என டு பிளசிஸ் கூற, இரு அணிகளுக்குமே கேட்டது கிடைத்திருந்தது. இரு பக்கமும் மாற்றமில்லை என்பதும் எதிர்பார்த்ததே.

டூ பிளசிஸுக்கு இடதுகை பந்துவீச்சாளர், கோலிக்கு ஸ்பின்னர் என ஆர்.சி.பியின் முதுகெலும்புகளை உடைக்க பல வகைகளில் ராஜஸ்தான் திட்டம் தீட்டியிருந்தது. ஆனால், கோலியை வீழ்த்த பிரஷித்துக்கு அவரின் பழைய பலவீனமே போதுமானதாக இருந்தது. ஓவ் ஸ்டம்புக்கு வெளியே பந்து நகர்ந்து கோலியின் துடுப்பில் பட்டு விக்கெட் காப்பாளர் அல்லது ஸ்லிப்பிடம் பிடி கொடுத்து அவர் ஆட்டமிழக்கும் காட்சி மீண்டும் ஒருமுறை அரங்கேறியது.

இந்தத் தொடர் முழுவதிலும் ராஜஸ்தானுக்கு எதிராக ஒற்றை இலக்கத்திலேயே கோலி ஆட்டமிழந்திருக்கிறார். முன்னதாக அதேபோல வீசப்பட்ட பந்தை, "வெல் லெப்ட்" என விட்டவர், மறுபடியும் அதனைச் செய்திருக்கலாம். அதேசமயம், வேகம், ஸ்விங்கோடு கூடிய பவுன்ஸ் பிரஷித்தை அபாய கரமானவராக ஆக்குகிறது.

பவர்பிளேக்குள் புதிதாக எதையும் சாம்சன் முயற்சி செய்யவில்லை. போல்ட்டுக்கும் ப்ரஷித்துக்கும் தலா மூன்று ஓவர்களைக் கொடுத்து ஓட்டக் குவிப்பைக் கட்டுப்படுத்தினார். இதனால், பவர்பிளேயில் 46 ஓட்டங்களை மட்டுமே ஆர். சி. பி. அடித்திருந்ததே முதல் சறுக்கலானது. மிகச்சிறந்த களத்தடுப்பாளரான பராக் வெறும் 13 ஓட்டங்களோடு இருந்த பட்டிதர் தந்த பிடியெடுப்பு வாய்ப்பை நழுவவிடாமல் இருந்திருந்தால் கௌரவமான ஓட்டததை ஆர். சி. பி. எட்டியிருக்காது.

பவர்பிளேயில் மட்டுமல்ல பத்து ஓவர்கள் முடிவில்கூட 74 ஓட்டங்கள் என மோசமாகவே ஆர். சி. பி. இருந்தது. தொடர்ந்து சஹால் - அஷ்வினைக் கொண்டு சுழலால் சாம்சன் சுருட்டுவார் என்று பார்த்தால் நடுநடுவே வேகப்பந்து வீச்சாளர்களுக்கு தலா ஓர் ஓவரைக் கொடுத்தார். அப்படித் தரப்பட்ட இரண்டு ஓவர்களிலும் இரண்டு விக்கெட்கள் விழுந்ததுதான் ஆர். சி. பி. யைக் குழியில் தள்ளியது.

மெக்காய், டூ பிளசிஸை வெளியேற்றி இந்தக் கூட்டணியை உடைக்க, அவரது இடக்கை வேகப்பந்து வீச்சாளர்களுக்கு எதிரான பலவீனம் மீண்டும் காட்சிப் படுத்தப்பட்டது. அதிரடி துடுப்பாட்டத்துக்கு பெயர் போன டு பிளசிஸ், இத்தொடரில் பெரும்பாலான போட்டிகளில் சொற்ப ஓட்டங்களோடு, குறைவான ஸ்ட்ரைக்ரேட் உடனோ விடைபெற்று, தொடக்க வீரருக்கான இலக்கணத்திலிருந்தே தவறியுள்ளார்.

சுழலுக்கு நடுவே வேகம் எனும் முறையை சாம்சனுக்கு மறுபடி கைகொடுத்தது. அவரது ஸ்பெல்லின் கடைசி ஓவரை போல்டை வீசவைக்க, 200 ஸ்ட்ரைக் ரேட்டோடு அதிவேகப் புயலாக மாறத் தொடங்கியிருந்த மக்ஸ்வெல்லை அவரின் பவுன்ஸர் வெளியேற்றியது.

சீனியர் வீரர்கள் மூவருமே ஏமாற்றியிருந்தும் பட்டிதர் மட்டும் சென்ற போட்டியில் விட்ட இடத்திலிருந்து தொடர்ந்திருந்தார். அவரின் பொறுப்பான ஆட்டமும் அரைச்சதமும்தான், கொஞ்சமேனும் ஆர். சி. பியைக் கரையேற்றியிருந்தது. ஆனால், அஸ்வினின் பந்தில் சிக்ஸரைப் பறக்கவிட்ட பட்டிதரை அடுத்த பந்தில் எல்லைக்கு உயர்த்த வைத்து வெளியேற்றினார். மக்ஸ்வெல் மற்றும் பட்டிதர் - இந்த இரு விக்கெட்டுகள்தான் போட்டியின் திருப்பு முனைகள்.

180ஓட்டங்கள்கூட துரத்தியடிக்கக்கூடிய ஓட்டம் என்பதால், இறுதி நான்கு ஓவர்களில் சிக்ஸர்களும் பௌண்ட்ரிகளும் பறக்க வேண்டியது அவசியமாக, ராஜஸ்தானின் பலவீனமான மரண பந்து, அதற்கு உதவும் என நம்பப்பட்டது. ஆனால், சுழல்பந்து வீச்சாளர்கள் செய்யத் தவறிய விஷயத்தை வேகப் பந்து வீச்சாளர்கள் செய்து முடித்தனர். லாம்ரோரின் விக்கெட்டோடு மெக்காய் அதிர்ச்சியளிக்க, அடுத்த ஓவரிலேயே பிரஷித், தினேஷ் கார்த்திக்கை ஓவ் ஸ்டம்புக்கு வெளியே வீசப்பட்ட பந்தாலும், ஹசரங்காவை அதிவேக யோர்க்கராலும் வெளியேற்றி சகலத்தையும் முடித்தார்.

முதல் பத்து ஓவர்களில் ஒரு விக்கெட்டை மட்டுமே இழந்திருந்த ஆர். சி. பி. , அதற்கடுத்த பாதியில் ஏழு விக்கெட்களை இழந்தது. இணைப்பாட்டத்தை உருவாகவிடாமல் ராஜஸ்தானின் வேகப்பந்து வீச்சாளர்கள் அடித்து நொறுக்கினர். இறுதி நான்கு ஓவர்களில், நான்கு விக்கெட்களை வீழ்த்தி 25 ஓட்டங்கள் மட்டுமே கொடுத்த இடத்திலேயே ராஜஸ்தான் போட்டியை பாதி வென்றுவிட்டது.

பட்டிதரின் அரைச்சதத்தையும், மக்ஸ்வெல்லின் கேமியோவையும் கழித்துப் பார்த்தால் ஆர். சி. பியின் துடுப்பாட்டப் படை மொத்தமாகத் தோற்றிருந்தது. உபயம்: பிரஷித், மெக்காயின் அதிஅற்புத ஸ்பெல்கள். ஆறாவது பந்துவீச்சாள்கூடத் தேவையில்லாதவாறு மெக்காயின் எதிர்பாராத எழுச்சி ராஜஸ்தானை முன்னிலைப்படுத்தியது. முக்கிய போட்டியில் சவாலான இலக்கோடு மிரட்டாமல் சாதாரண ஆர். சி. பியாக மறுபடியும் சொதப்பியது டூ பிளசிஸ் அண்ட் கோ.

அதிக ஓட்ட இலக்கை துரத்தும்போது அதிரடித் தொடக்கம் எப்படித் தேவையோ, அதேபோல் குறைந்த இலக்கைத் துரத்தும்போது தற்காப்புக்கு விரைவான விக்கெட்கள் தேவை. ஆடுகளத்தில் கிடைத்த மேலதிக பவுன்ஸை பயன்படுத்திக் கொள்ளும் விதமாக தொடக்கத்திலேயே ஹசில்வூட்டுக்குக் கூடுதல் ஓவர்கள் கொடுக்கப்பட்டிருந்தால் அது அதிவிரைவான விக்கெட்களுக்கு வழிசெய்திருக்கும். அங்கேயே கோட்டைவிட்டது ஆர். சி. பி.

மறுபுறம், 158 என்பது எளிய இலக்குதான், மெதுவாக துரத்துவோம் என்று எண்ணாமல், ஆர். சி. பியால் நிறுத்த முடியாத அச்சுறுத்தலாக இருந்தது பவர்பிளேயில் பட்லரின் அதிரடி. மொத்த ஆர். சி. பி. கூடாரத்தின் தன்னம்பிக்கையையும் தூள் தூளாக்கி மனதளவில் பலவீனப்படுத்திவிட்டது அந்த ஆரவாரத் தொடக்கம்.

ஆறு ஓவர்களுக்கு உள்ளாகவே நான்கு பந்துவீச்சாளர்களை முயன்று பார்க்க வைத்துவிட்டார் பட்லர். இந்த தொடரில் நடுவில் சின்னத் தடுமாற்றத்துக்குப் பின் மீண்டும் விஸ்வரூபமெடுத்துள்ள அவரின் அதிரடி, இப்போட்டியிலும் தொடர்ந்தது. தேவைப்படும் ஓட்ட சராசரிக்கு இருமடங்காக உயர்வதை பட்லர் உறுதி செய்தார்.

ஜெய்ஸ்வாலின் விக்கெட் மட்டுமே ஆர். சி. பிக்கு ஆறுதல் அளிக்க, 6 ஓவர்களிலேயே 67 ஓட்டங்களோடு தனது ஆதிக்கத்தை நிலைநாட்டிவிட்டது ராஜஸ்தான்.

கடைசி வாய்ப்பாக 11-வது ஓவரில், பட்லர் தந்த பிடியெடுப்பு வாய்ப்பையும் தவறவிட்டு தினேஷ் கார்த்திக் இந்த சீசனிலிருந்து ஆர்சிபி வெளியேறி விட்டதை அதிகாரபூர்வமாக உறுதி செய்தார். ராஜஸ்தானின் துடுப்பாட்ட வரிசை பற்றி தெரிந்த கதைதான்.

பட்லரின் அந்த ஒரு விக்கெட் விழுந்திருக்கும் பட்சத்தில், அடுத்தடுத்த விக்கெட்களுக்கு அதுவே வழிவகை ஏற்படுத்தி இருக்கும். ஆர். சி. பியாலும் இறுதி ஓவர்களில் அழுத்தத்தை அதிகரித்திருக்க முடியும். இது நடக்காததால்தான் மொத்தமாக ஆர். சி. பிக்கு மூடுவிழா நடத்தப்பட்டது.

ஹசரங்காவின் பந்தில் நடுவில் விழுந்த சாம்சனின் விக்கெட் அவருக்கு 26 ஆவது விக்கெட்டாகிவிட, சஹாலுடனான பர்ப்பிள் கேப் ரேஸில் அவரை முன்னிலைப்படுத்தியது மட்டுமே மிச்சம்.

மரண ஓவர்களுக்கு முன்னதாக, 12 - 15 ஓவர்களில் 14 ஓட்டங்களை மட்டுமே கொடுத்து, ஆர். சி. பி. ஆனால், பட்லர் களத்தில் நின்று ஹசரங்கவின் பந்தை பதம் பார்க்க, இந்தத் தொடரில் 800 ஓட்டங்களைக் கடந்தார் அவர். அத்துடன், பட்லர் இந்த தொடரில் தனது நான்காவது சதத்தையும் பதிவேற்றினார்.

இறுதியில் கடைசி ஓவர் வரை எல்லாம் எடுத்துச் செல்லாமல் 11 பந்துகள் எஞ்சியிருக்கும் போதே ஹர்சல் பட்டேலின் பந்தில் அடித்த சிக்ஸரோடு அணியை இறுதிப் போட்டிக்கு அழைத்துச் சென்றார் பட்லர்.

ஆர்சிபியின் கோப்பைக் கனவு அவர்களின் மோசமான பேட்டிங்கால் மறுபடியும் தகர்ந்து போய் இருக்கிறது.

தற்சமயம் ராஜஸ்தானுக்கும் கோப்பைக்கும் நடுவில் நிற்பது குஜராத்தும், இன்னுமொரு வெற்றியும் மட்டுமே. அதையும் வீழ்த்தி, தனது இரண்டாவது கோப்பையை ஏந்தி, சொன்னபடி ஷேன் வோர்னுக்கு அதைச் சமர்ப்பிப்பார்களா அல்லது தொடர்ந்து அதிர்ச்சி அணியாக வலம் வரும் குஜராத், ராஜஸ்தானை வீழ்த்தி சம்பியனாக மகுடம் சூடுமா என்பது இன்று தெரியும்.

# வடமராட்சி 'ஒப்பரேஷன் லிபரேஷன்':

# துயர் படிந்த மண்ணின் வரலாற்றை பதியும் வரிகள்!

• ஐங்கரன் விக்கினேஸ்வரா

வடமராட்சி! சோகங்களின் அதி உச்சங்களை சுமந்த மண்! வீரத்தின் வித்துக்களையும் பிரசவித்த மண்!

1987 மே மாதம் 26 ஆம் திகதி யாழ் குடாநாட்டில் "ஒப்பரேஷன் லிபரேஷன்" நடவடிக்கை இடம் பெற்றது. வடமராட்சியில் ஆரம்பமாகிய

இந் நடவடிக்கை இலங்கை இராணுவத்தால் 1987 ஆம் ஆண்டு மே, ஜூன் மாதங்களில், அச்சமயம் போராளிகளின் கட்டுப்பாட்டிலிருந்து யாழ் குடாநாட்டில் அமைந்துள்ள வடமராட்சியைக் கைப்பற்றும் நோக்கில் வலிந்த தாக்குதலாகும்.

1987 மே இறுதியில் வடமராட்சியில் நடந்தேறிய "ஒப்பரேசன் லிபரேசன்" நினைவுகள் மிகக் கொடூரமானது. கோரமானது, துன்பங்களின் சுவடுகள் இன்னும் அங்கே பதிக்கப் பட்டவையாக உள்ளன. பிரித்தானியர் ஆட்சியிலிருந்து இலங்கை விடுதலை அடைந்த பின்னர் இலங்கை இராணுவம் மேற்கொண்ட முதல் மரபு வழிப் போர் இதுவாகும். இந்நடவடிக்கைக்கு பிரிகேடியர் டென்சில் கொப்பேகடுவ, கர்னல் விஜய விமலரத்ன ஆகியோர் இலங்கை இராணுவத்தை வழி நடத்தியதோடு அப்போதைய ஜனாதிபதி ஜெ. ஆர். ஜயவர்தனா, பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத் முதலி ஆகியோர் அரசியல் தலைமைத்துவத்தையும் வழங்கியிருந்தனர்.

நாளைய சந்ததி இவ்வரலாறுகளை மறக்காமல் இருக்கவும், வரலாற்றின் துயர் படிந்த நாட்களை மீள நினைவு கொள்வதும் தமிழ் மக்களின் கடமையாகும். வடமராட்சியில் நடந்தேறிய "ஒப்பரேசன் லிபரேசன்" துயர் படிந்த நாட்களை வரலாற்றுத் தடங்களில் பதித்ததில் "கல்லறை மேலான காற்று" எனும் கவிதை தொகுப்பு ஒரு சான்றாகும்.

காற்றுக் கூட அனலாக வீசிக்கொண்டிருந்த 1987 காலகட்டம். அவ்வேளையிலும் விடியலை நோக்கிய எழுச்சியில் சண்டமாருதமாய் எழுந்து நின்ற இளங் கவிஞர்களின் படைப்பே "கல்லறை மேலான காற்று" எனும் கவிதை தொகுப்பாகும். ஐந்து நாட்கள் நீடித்த இராணுவத் தரப்பில் இந்த நடவடிக்கை கொப்பேகடுவ வழிகாட்டலில் இந்த அப்பாவித்தமிழர்களை வீடுகளில் இருந்து விரட்டி அடித்த நடவடிக்கையாக அமைந்தது. இந்த நடவடிக்கை மூலம் பெருந்தொகை மக்கள் இடம் பெயர்ந்தனர்.

இருண்டு போன வடமராட்சி மண்ணின் வாழ்மியத்துக்கு ஒளியை ஊட்டுவதற்கு எழுதகோலை உயர்த்திப் பிடித்த கவிஞர்களின் உள்ளக்குமுறலாய் "கல்லறை மேலான காற்று" சாட்சியம் பெறுகிறது.

ஞானசேகர், குருபரன், அகிலன் திரு, நாடி, இரா. ஜனகன், சடாவதணன், கா.யோ. கிரிதரன், தலவாக்கொல்லை சௌந்தரராஜன் ஆகிய எட்டு வளருங்கவிஞர்களின், நம் மண்ணின் கொடூரமான நிகழ்வுகளை நினைவு கூறும் கவிதைத் தொகுப்பாக மிளிர்ந்தமை இன்னோர் சிறப்பாகும்.

மாணவர் இளைஞர் பொது மன்றத்தால் (GUYS) 1988 இல் வெளியிடப்பட்ட இத்தொகுப்பில் அடங்கிய அனைத்தும் எரிதழல் கவிதைகள். படிப்பவர் நெஞ்சில் உணர்ச்சிப் புயலை எழுப்புகின்றன. இவற்றை எழுதியவர்கள் இளம் வளருங்கவிஞர்கள். அவர்கள் ஈழத்தமிழரின் மானுட வாழ்வை தனித்து நின்று பார்க்காமல், போராடும் மக்கள் மத்தியில் நின்று, அவர்களின் துயர துக்கங்களில் பங்கேற்று, மண்ணின் வாசனையை கவிதைகளின் ஒவ்வொரு வரியிலும் காணக் கூடியதாக உள்ளது.

இனவெறியின் வேட்டைக் களமாய் வடமராச்சி மாறிவிட்ட கழிவிரக்க நிலையில், ஒரு கவிஞனின் தீனக்குரல் எழுகிறது.

இனிய வடமராட்சி
மீன்கள் துள்ளும்
கடலலை ஓரம்
பேய்கள் குவியும்
பிணங்களை உருட்டும்
தேடுதல் வேட்டையின் பேரில்
தேவைகளை தீர்த்துக்
கொள்ளும்..
சோதனை என்னும் பெயரில்
பெண்களை சுவைத்துப் பார்க்கும்
என மனம் கசியும்

கண்ணீர்த்துளிகளே இவ்வரிகள்.

## புலம்பெயர் மடல்

மேலும் பல அப்பாவித் தமிழர்களின் பூர்விகப் பிரதேசங்களைப் பலாத்காரமாகப் பறித்து இராணுவ ஆதிக்கம் விஸ்தரிக்கப்பட்டது. இன்றும் பறிமுதல் செய்த இப்பிரதேசத்தில் இருந்து இடம்பெயர்ந்தவர்கள் மீளத் திரும்புவதற்கான உரிமைகள் மறுக்கப்படுகின்றன.

இந்த நடவடிக்கையில் ஏறத்தாழ 40,000 பொதுமக்கள் பாதிக்கப்பட்டனர். இந்த இராணுவ நடவடிக்கை மூலம் அப்பாவி தமிழர்களுக்கு அதீதமான அநீதிகளே இழைக்கப்பட்டது. பாதிக்கப்பட்ட ஈழ மக்கள் வாழ்வின் அவலத்தைச் சொல்லி

தாயே.. அம்மா
முடியாது வரலாறு
முள்வேலிக்கப்பால்
உன் வரலாறு
நீயே தொடர்ந்து கொள்!..
என ஈழ மக்கள் வாழ்வின்

அவலத்தைச் சொல்லி, போரின் கோர முகங்களை உலகிற்கு பறை சான்றுகிறான் இன்னோர் கவிஞன்.

கல்லறை மேலான காற்று, எக்காலமும் நினைவுகள் அழியாத அனல் வீசும் கவிதைக் கணைகளாகவும், மானுட நேசம் மிகுந்து வரும் தென்றலாகவும் தவழ்கிறது. சண்டமாருதமாகவும் சீறுகிறது.

கல்லறைக்குள் புதைந்தவர்கள்
ஊமைகளல்ல
விடிவு காண
சாவை துச்சமென்று
கருதி போராடிய போராளிகள்
என முழங்குகிறது. தமிழ் மண்ணில்

நிகழ்ந்த இவ் வரலாற்றுப் படுகொலை நிகழ்வை சரித்திரமாக வரைந்த கவிதைகளாகவும் நாம் உணரலாம் .

விமானம்,தரைவழி, மற்றும் கடல் வழித் தாக்குதல்கள் என மும்முனைகளிலும் படையினர் முன்னேறிச் சென்ற வழிகளில் பலநூற்றுக்கும் மேலும் தமிழ் இளைஞர்களையும் கைது செய்து கப்பலில் ஏற்றி புதிதாக திறக்கப்பட்ட "பூசா"தடுப்பு முகாமுக்கு ஏற்றிச் சென்றனர். அங்கே கொண்டு செல்லப்பட்ட நூற்றுக் ஆயிரக்கணக்கான இளைஞர்கள் இதுவரையில் திரும்பவேயில்லை.

அதேவேளை போகும் வழியெங்கும் ஆண்கள், பெண்கள், குழந்தைகள் என்ற வேறுபாடுகள் இன்றி சுட்டும் எரித்தும் படுகொலைகள் செய்யப்பட்டனர். இவ்வாறு ஈழத்தமிழர் சாவின் பிடியில் தத்தளித்த நிலையினை

ஆண்டவனும் தோற்றான்
அரசபயங்கரவாதத்திற்கு
மண்ணில் ஒவ்வொருதுகளும்
அந்நியர் கால்களில்
நசுங்கிப் போனதும்
எங்கள் கால்களை இழந்து
எங்கள் முகங்களை இழந்து
எங்கள் பரம்பரையை இழந்து
ஆத்மாவை மாத்திரம்
நகத்தின் இடுக்கில் ஒளித்து
இன்று வரையிருப்பதை
எப்படி மறப்போம்?
என்கிறான் இன்னோரு கவிஞன்.

"கல்லறை மேலான காற்று" அள்ளி எரியும் நெருப்புப் துகள்களின் மீதான வருடல்களின் நெருடலாக உணர்ச்சியூட்டுகின்றது.

இந்நூலின் முன்னுரையில் அல்வாய் கலாமணி மேலம் குறிப்பிடுகையில், வடமராட்சியில் நடந்தேறிய ஒப்பரேஷன் லிபரேஷன் கொடுமைகளின் கோரங்களையும் சிதைவுகளையும் நினைவு கூர்வாகக் கொண்டு வெளியாகும் இக்கவிதைகள் எழுதியவர்கள் இளங்கவிஞர்கள் என்பதும் இத்தனை அழிப்புகளுக்கு மத்தியிலும் அதன் வேகத்துக்கு ஈடுகொடுத்துக் கொண்டு புதியவர்களும் உருவாகிக் கொண்டிருக்கிறார்கள் என்பதே நிதர்சனமாகும்.

இக்கவிதைகள் யாவுமே, இராணுவக்கொடுமைகள் எம்மிடம் எவ்வளவு ஆழமாகப் பதிந்துள்ளன என்பதை வெளிக் காட்டி, வடமராட்சியில் நிகழ்ந்த கொடுமைகளைக் கூறும் வகையிலும் வரலாற்று ஆவணமாகவும் இதற்கு ஓர் இடமுண்டு என முன்னுரையில் அல்வாய் கலாமணி குறிப்பிட்டுள்ளார்.



# வியுக்தியார் பதில்கள்

**கணேசன் சாந்தினி,சங்கிலியன் வீதி, நல்லூர்.**

**கேள்வி:**

நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியையும், அதனால் ஏற்பட்ட அரசியல் நெருக்கடியையும் நமது தமிழ் அரசியல் தலைமைகள் சரியாகப் பயன்படுத்தின என்று நினைக்கின்றீர்களா?

**வியுக்தியார்:**

அவர்களது அரசிலோடு எனக்கு உடன்பாடு இல்லாவிட்டாலும் தாம் சொல்கின்ற அரசியலில் உறுதியோடு பயணிப்பவர்கள் தமிழ் தேசிய மக்கள் முன்னணியினர் மட்டும்தான். ஆனால் அவர்களே, அரசு மீதான நம்பிக்கையில்லா தீர்மானம் தயாரிக்கப்படுவதற்கு முன்னதாகவே சஜித் அலுவலகம் சென்று வெற்றுப்பேப்பரில் கையெழுத்து வைத்தபோதே எனக்கு முழு நம்பிக்கையும் தகர்ந்துவிட்டது. மற்றும்படி கூட்டமைப்பு தலைவர்கள் மீதான நம்பிக்கை தளர்ந்து பல வருடங்களாகி விட்டனவே. ஆகக்குறைந்தது, இந்த தலைவர்கள் செய்கின்ற ஒவ்வொரு தவறுகளையும் மக்கள் மத்தியில் வெளிக்கொண்டுவருவதற்காவது ஒரு அரசியல் இயக்கம் அவசரம் நமக்கு தேவைப்படுகின்றது.

---

**எஸ் பீற்றர்போல், இரண்டாம் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம்.**

**கேள்வி:**

கோட்டபாய ராஜபக்ச தலைமையில் யார் ஆட்சி அமைத்தாலும், அது நீண்டகாலம் நீடிக்காது என்பது குழந்தைப் பிள்ளைகளுக்கும் தெரிந்திருக்கும்போது, எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் இரண்டு முக்கிய தலைவர்கள் அரசுடன் இணைந்து அமைச்சர்கள் ஆகிறார்களே. இவர்களைப் போய் சிறந்த தலைவர்கள் என்று எதிர்க்கட்சி கொண்டாடிக்கொண்டிருந்திருக்கின்றதே?

**வியுக்தியார்:**

நாடு நெருக்கடியில் இருக்கும்போது அரசாங்கத்தை சஜித் பொறுப்பேற்க வேண்டும் என்று வலியுறுத்தியவர்கள் அவர்கள். தனி ஒருவனாக இருந்துகொண்டே நாட்டை காப்பாற்ற புறப்பட்ட தமது "பழைய" தலைவரா? இன்றைய தலைவரா சிறந்தவர் என்று ஒப்பிட்டுப்பார்த்து முடிவெடுத்தார்களோ என்னவோ? அங்கு தொடர்ந்து இருப்பதும் தமது அரசியலுக்கு முடிவு கட்டிவிடும் என்று நினைத்தார்களோ தெரியவில்லையே.

---

**சி. ராஜேஸ்வரன், கோயில் வீதி, நல்லூர்.**

**கேள்வி:**

புலம்பெயர்ந்தோர் முதலீடு செய்தால் இலங்கையின் பொருளாதாரத்தை கட்டியெழுப்பலாம் என்று எல்லோரும் சொல்கிறார்களே? முதலீடு செய்தால் அவர்கள் லாபமும் பெறுவார்கள் தானே. லாபமும் பெற்று நாட்டையும் காப்பாற்றலாம் என்றால், ஏன் இன்னமும் அவர்கள் முதலீடு செய்ய தயங்குகின்றனர்?

**வியுக்தியார்:**

புலம்பெயர்ந்தோர் இதுவரை யாழ்ப்பாணத்தில் முதலீடு செய்தது, கல்யாண மண்டபங்கள் கட்டுவதற்குத்தான். அது ஒன்றுதானே ஆட்கள் இல்லாமலும் நடத்தக்கூடியது. வேறு தொழில்களுக்கு முதலீடு செய்தால் வேலைக்கு ஆட்களை எங்கே தேடுவது. நம்மவர்கள் வேலை செய்தால் "கோழி மேய்த்தாலும் கொறுணமேந்தில தானே" மேய்ப்பார்கள். இந்த லட்சணத்தில் அவர்கள் எப்படி முதலீடுகளைச் செய்வதாம்!

**உங்கள் கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி**

**வியுக்தியார் பதில்கள்**
**ஈழநாடு, 707 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**
viyukthiyar@gmail.com

# என்னைப் பேசச் சொன்னால்..

- முல்லை அமுதன் -

சும்மா இருந்திருக்கலாம். இன்றெனப்பார்த்து மனைவி புத்தகங்களைக் கலைத்து மீள அடுக்கத்தொடங்கினாள். எதிர்பார்க்கவில்லை. காலையிலேயே தேநீருடன் வருபவள் இன்று காணவில்லையேயென இறங்கிவந்தேன் .கடைசிப்படியில் ஒரியோ படுத்திருந்தது. ஒரியோ எங்களது செல்லப்பூனை.வந்து இரண்டுவருடமாகிறது. பிள்ளைகளுக்கு பரீட்சையில் சித்தியடைந்தால் வாங்கித் தருவதாகச் சொல்லியிருந்தேன். இப்போது பிள்ளைகளுள் ஒன்றாகிவிட்டது.

நாய்க்குட்டி ஒன்றிருந்தால் நன்றாக இருக்குமே என்கிறாள் கடைசிப்பெண்.முன்பென்றால் துணிந்து வாங்கிவிடுவேன்.இப்போது வேலைக்குப்போகாத நிலையில் வீட்டிற்குப்பாரமாகிவிட்டேனோ என்கிற நினைப்பு வர ஓய்ந்து போன ஒரு மனநிலையும் வந்துவிட்டது.கம்பீரமாக வேலை,வீடு,நண்பர்கள், புத்தகம்,பிள்ளைகள் என வலம்வந்தவனை முடக்கிப் போட்டுவிட்டது இந்த கொறோனா... வேலைக்கு போகாமல் வீட்டினுள் முடங்க எல்லாம் இழந்தது போல... படுக்கை,கணினி என இந்த ஒருவருடம் ஓடிவிட்டது.

“என்னப்பா...இண்டைக்குத் தேத்தண்ணி இல்லையோ?“

பதில் அவளிடமிருந்து கிடைக்கவில்லை.

-“நீங்க ரீமாஸ்டர் தானே..போடுங்கோவன்“ என்று சொன்னது மாதிரி

இருந்தது.அவள் சொல்லவில்லை.எண்டைக் கெண்டாலும் சொல்லலாம்.படியில் படுத்திருந்த பூனையும் எழுந்து என்னுடன் வந்தது.அதற்கு சாப்பாட்டைப்போட்டுவிட்டு தேநீர் தயாரிக்கத் தொடங்கினேன்.முந்தி அம்மா குசினிக்குள் வரவிடமாட்டாள்...தானே சமைக்கவேண்டும்.. தானே தரவேண்டும்..என்று நினைப்பாள்.அப்பாவும் கண்டிப்பென்றாலும் வேலை ஒண்டும் செய்யவிடமாட்டார்..

“போய் படிக்கிற வேலையைப்பார்” என்பார்.

படிச்சாச்சு..வேலையும் ஆச்சு..கலியாணமும் ஆச்சு...பிள்ளைகளும் ஆச்சு...அகதியாய் வந்து இங்கும் செட்டில் ஆகியாச்சு..

“இப்ப வேலையில்லை எண்டதும்தான் இடிக்குது...

மனுசி என்ன சொன்னாலும் கோபம் வருகுது.. வாய்திறந்து கதைக்க முடியேல்ல.தாழ்வு மனப்பான்மை அதிகமாக வெளிப்படுது...”

பிள்ளைகள் படிப்பு முடிய நல்ல வேலையில் அமர்த்தவேண்டும்...அவர்களின் திருமணம் பற்றியும் சிந்திக்கவேண்டும்.தானே எல்லாம் செய்வதா என்று இபோதெல்லாம் இவள் சலித்துக்கொள்கிறாள். எனக்கும் உள்ளுக்குள் உடைந்து போவதாய் உணர்கிறேன்.எனக்கும் உரிமை,பாத்தியதை இருக்கவே இருக்கிறதுதானே..அவளுக்கு என் மீது அன்பு இல்லை என்று சொல்லிவிடமுடியாது.அன்பு காதல் இருந்ததினால் தானே கேட்கும் போதெல்லாம் தன்னைத் தருவதில் பிரியமாய் இருப்பவள்தான்.வேலைக்குப் போகவேண்டும் அல்லது பிள்ளைகளின் தேவைகளையும் செய்பவள் இப்போது மட்டும் புறக்கணிப்பது போல நடந்துகொள்கிறாள்..ஒருவேளை எனது பிரமையோ..இயல்பாக நடந்துகொள்பவளிடம் நான் புறக்கணிக்கிறாள் என்று நினைக்கவேண்டும்.

உழைக்கும்போது தருகின்ற உற்சாகம் ஓய்வூதியம் பெறுகையில் எதையோ இழந்தது போன்று உணர்கிறேன்..ஒவ்வொரு முறையும் சம்பளத்தைக் கொண்டு வந்து இவளிடம் கொடுத்துவிட்டு “தேவையானதை வாங்கிக்கொள்கின்ற நீயே வாங்கிகொள்” என்ற எழுதாத விதியே கடந்த காலங்களில் நடந்திருக்கிறது.

இப்போது அவளிடம் செலவிற்குப் பணம் கேட்டகவும் கூச்சமாக இருகிறதே.எனது பென்சன் பணம்தான்..எனினும் அவளிடமிருந்து முன்னைப்போல துணிச்சலாக பெறமுடியாதபோது யாரோ சம்மட்டி கொண்டு அடிப்பதுபோன்ற வலி..

“இருந்து பார் தெரியும்..வீட்டிலும்,வெளியிலும் யாரும் மதிக்கவில்லையே என வலிக்கும்“கண்ணாடி முன் நின்று புலம்பத்தோன்றும். நின்று நிதானமாக இன்றாவது பூனையை தூக்கிக் கொஞ்சவேண்டும் என்கிற பிரயத்தனம் கூட தோற்றுப்போனது.மகள் கெக்கட்டமிட்டுச் சிரித்தாள்

என்னைச் சுற்றித்தான் வரும்..நானே சாபாடு போடுவேன்..கடைகலுக்குச் சென்றாலும் பூனையின் நினைப்பில் அதற்கென்றெ எல்லாம் வாங்குவதுமுண்டு..ஆனால் தூக்கச் சொன்னால் ஒருவித பயம்.. ஊரில் அம்மா “கோழியைப் பிடிச்சுத் தா” என்றாலும் தோற்றுவிடுவேன். ஆனாலும் குழந்தைகளைப் போலவே வளர்ப்புப்பிராணிகளிடம் அன்பு



அதிகம்தான். என்னைச் சுற்றிக் கட்டியெழுப்பட்ட ஒரு பெரும் சுவர் உடைந்து நொருங்குவது போன்ற பிரமை..எனக்கு மட்டும்தானா? “அப்புவுக்கு வயசு போட்டுது” வயதானவர்களைப்பார்த்து பகிடி பண்ணியது ஞாபகம் வந்தது.

ஒருவனின் தலை எழுத்தை ஒவ்வொரு நிமிடங்களும் தீர்மானிக்கின்றனவோ.ஒவ்வொரு கணப்பொழுதும் கடந்து போகையில் அது நடக்காமலேயே இருந்திருக்கலாம்...அவரைச் சந்திக்காமலேயே இருந்திருக்கலாம்.கடைசியில் பிறந்திருக்காமலேயே இருந்திருக்கலாமோ என்கிற சலிப்பும் வந்து நிற்கும்.எனக்கு மட்டும்தானா? இல்லை..இல்லை எல்லாருக்கும் ஒருதடவையாவது வந்து போயிருக்கும்.வேறு வேறு காரணங்களுக்காக சலிப்படைந்த நிகழ்வுகளும் நடந்திருக்காமல் இல்லை.தற்கொலை செய்துகொள்ளலாமோ எனவும் சிந்திக்கவைத்திருக்கும்.இப்போது பூதாகாரமாகத் தோன்றுகிறது.. அவ்வளவே..நண்பர்களைச் சந்தித்தே மாதங்களாயிற்று.

அவர்களிலும் என் வயதொத்தவர்களெனில் என்றால் அனுபவம் வித்தியாசமாக இருக்கும்..

“சீச்சி அப்படியில்லை..அனுபவம் எல்லார்க்கும் பொதுவானவையே” சமாதானமாகவிடாது மனதும் அலைக்கழித்தது.

அப்பாவின் ஞாபகம் வந்தது.எப்படி வாழ்ந்தவர்?

அப்பாவும் சம்பளப்பணத்தை அப்படியே அம்மாவிடம் கொடுத்துவிடுவார்..பிறகு சொல்லுவார்...அவருக்கு இவ்வளவு...இன்னாருக்கு இவ்வளவு கொடுக்கவேணும்...என்பார்.அம்மாவும் முகம் சுழிக்காமல் அப்பா சொல்வதையே மௌனமாக செய்துவிடுவார்.எதிர்த்து கேள்வி கேட்டுப் பழக்கமில்லை.பென்சன் நாளும் வந்தது..ஒரு தொகையாக ஓய்வூதியப்பணம் வர அப்படியே அம்மாவிடம் கொடுத்தார்...அம்மாவிற்குத் தெரியும்.. பிள்ளைகளின் பேரில் கொஞ்சம் கொஞ்சமாக பிரித்துப்போட்டால்தான் அவர்களுக்குத் தேவையான போது பயன்படுத்தலாம்...காணிவிற்ற காசையும் வைத்து பிள்ளைகளின் திருமணமும் நடத்திமுடித்தார்.ஆசை ஆசையாக கட்டியவீட்டை மகளுக்கு சீதனமாகக் கொடுக்கையில் தான் நிலைகுலைந்து போனார்..அங்கு தான் இருக்கமுடியாது“ என்று வருந்தினார்.சீவிய உருத்துவைத்து எழுதலாமே என்றும் நினைத்தார்.யாரும் அப்போதைய சூழலில் ஒத்துழைக்கவில்லை..அப்பாவிற்கு அதில் வருத்தமும் இருந்தது.

எல்லாம் ஆயிற்று..

பிள்ளைகள் தங்கள் பிள்ளைகளில் அதிக கவனம் செலுத்த பெற்றவர்கள் இரண்டாம் பட்சமாக... அப்பா மேலும் உடைந்துபோனார்..

படுத்த படுக்கையானார்.

அனாதரவாக விடப்பட்டதாக உணர்ந்திருப்பார். யாரிலும் தங்கியிருக்காத வாழ்வு வேண்டும் என்றிருந்தவர்.தன் நண்பர்களின் இழப்பை நேரில் கண்டவர்கள்.அவர்களின் துன்பங்களை நன்கு உணர்ந்தவர். பிறகு தன் நிலைகண்டு அருவருப்பு அடைந்தவர்களைகண்டு மனம் வெதும்பியிருப்பார்.படுக்கையிலேயே சலம்,மலம் போகும் நிலைமை பற்றிக் கேள்விப்பட்டதும் துக்கம் மேலிட்டது.பாவம் அப்பா..

எனக்குள்ளிருந்த ஆதங்கம் அவரின் கையில் காசைக்கொடுத்து முன்னர் போல கம்பீரமாக தானே விரும்பியதை வாங்கி,செலவழித்து யார் கையையும் எதிர்பார்த்து நிற்காமல் இருக்கட்டுமே என நினைத்து பணத்தை உண்டியல் மூலம் அனுப்பி அவர் கையில் கொடுக்கச் செய்தேன். தொலைபேசி, அலைபேசி வசதிகள் இல்லாத ஒருகாலகட்டத்தில் தொலைபேசி பூத்திற்குச் சென்றே தகவல்களை பரிமாறமுடியும்.. மாறக,அப்பா நோய் முற்றி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருப்பது தெரியவந்தது. கலங்கிப் போனேன்.பணம் கைக்கு வந்ததும் முகத்தில் பிரகாசம் தெரிந்ததாகச் சொன்னார்கள்.அவர் பட்ட கசப்பான அனுபவங்களும் தெரிய வந்தது.சுகமாகி வீட்டிற்கு வந்துவிடுவார் என்று தைரியம் சொன்னவர்கள் மறுநாள் அவரின் மறைவு பற்றிய செய்தியே வந்து தூக்கத்தைக் கலைத்தது.ஆடிப்போனேன். அம்மாவும் தனித்துவிடப்பட்டதாகவும் உணர்ந்தேன்...

இப்படித்தான் அடிக்கடி நினைவுகள் எழும்.பிறகு அறுந்து போகும்.. முன்பெல் லாம் மனச்சங்கடங்கள் ஏற்படுகையில் அல்லது சூழ்நிலைகளை சமாளிக்கவேண்டு மெனில் ஒவ்வொரு வாசிகசாலைகளையும் நாடிப்போய் பார்த்த பத்திரிகைகளை மீள வும் பார்ப்பது போல பாவனை செய்வது...காணும் நண்பர்களுடன் கதைப்பது...இருண்டதும் வீடுவந்துவிட எல்லாம் சரியாகிவிடும். அங்கும் பலபேர் வந்து பத்திரிகை பார்ப்பதும், அருகில் இருக்கும் அரைச் சுவரில் நித்திரை கொள்வதும் என்னைப் போலத்தான் இவர்களும் சூழ்நிலையைச் சமாளிக்க வந்தவர்களா?அப்பாவும் மத்தியானம் சாப்பிட்டதும் பேப்பரையும் எடுத்துக்கொண்டு வளவுக் கோயிலடியை நோக்கிப் போவார்.அங்கு துவாயை விரித்துப்போட்டுப் படுத்துக்கொள்வதுண்டு.

இங்கு நாம் எங்கு போவது?

புத்தகங்களுக்கிடையே இருந்து இவள் கூப்பிட்டாள்.

“ம்”

“இதென்ன கடிதம்..?அண்டைக்கு அந்த மனுஷியிடம் வாங்கி வந்து வாசியுங்கோ எண்டு தந்தனான்.. அப்ப கடிதம் இருந்ததாகத் தெரியவில்லையே?”

ஒன்றும் புரியவில்லை.

தடுமாறினேன்.“என்ன கடிதம்?”

சொன்னாள்.

நிச்சயமாக எனக்குத்தெரியவில்லை.“இவளோட வாதித்து ஒண்டும் ஆகிவிடப்போவதில்லை.சும்மா ஒண்டுமில்லாததை பூதாகாரமாக்கப்போகிறாளோ?” “சத்தியமா எனக்குத்தெரியாது...இத்தனை வருசமா ஒரு தப்பு ஏதும் செய்தனானோ?அவையின் வீட்டில ஏதோ நடந்திருக்கும்..அது கைமாறி இந்தப் புத்தகத்துக்குள்ள வந்திருக்கும்..பேசாமல் உதை தூக்கிவிட்டெறிஞ்சுபோட்டு பாக்கிற அலுவலைப்பார்” கோபமாகப் பேசவேண்டும்போலிருந்தது..இப்ப பேசினால் எல்லாம் பிரச்சினையாகிவிடும்..

தொட்டதுக்கெல்லாம் புறுபுறுப்பாள்தான். இப்போது அதிகமாக உணரப்படுகின்றதோ? ஒவ்வொரு மனிதனுக்குள்ளேயிருக்கும் தாழ்வு மனப்பானமை சமயங்களில் மேலெழுந்துவருவதை யாராலும் தடுத்துவிடமுடியாது.ஆண்களுக்கு அதிகமாக உள்ளதுவோ?இவள் முந்தியும் கத்துறவள்தான்..அம்மா மாதிரி அடங்கிப்போகிற தலைமுறையும் இவள் இல்லை.அப்பா எப்படியெல்லாம் பிரச்சினைகளை சந்தித்திருப்பாரோ?என்ன செய்வது?

“ஒண்டும் செய்யாதை..முதலில கத்துறத விடு... கடிதத்தை புத்தகத்திலிருந்து எடுத்துவிடு..புத்தகம் திருப்பிக் கொடுக்கேக்க கேட்டால் கடிதத்தைக் கொடுக்கலாம்..இல்லாட்டி விட்டுவிடு. சின்னப் பிரச்சினை..இவ்வளவு காலமும் நம்பினனீர் தானே... அப்படியே இருந்துவிடுமன்..எனி எனக்காக ஆரிட்டையும் புத்தகங்களை இரவல் வாங்கிவராதையும்.”

சொல்லியபடி,வேலைக்குப் போனால்தான் எனக்கும் ஆறுதலாக இருக்கும் என வேலைக்காக எனது சிவியைத் தேடத்தொடங்கினேன்.அவள் சாதாரணமாகக்கூட கேட்டிருக்கலாம்.நானும் பிழையாக கற்பனை பண்ணியுமிருக்கலாம். நண்பனொருவனுக்கும் இப்படி நடந்திருக்கிறது... அவனின் நண்பர்களின் காதல் கடிதங்கள் மாறி புத்தகங்களுக்குள் வைத்துக்கொள்ள அப் புத்தகத்தை இரவலாக வாங்கிய நண்பனின் வீட்டிலும் பூகம்பமாயிற்று.இப்படியும் நடந்திருக்கலாம் தானே...இவளும் சந்தேகப்படாமல் சாதாரணமாகக் கேட்டிருக்க,நானும் அவள் சந்தேகிக்கிறாள் என்று நினைத்துத் தடுமாறியுமிருக்கலாம்.

அவள் பேசிக்கொண்டிருந்தது காதில் விழவேயில்லை.

# ஓர் இந்திய கலைத் தூதர்

**மாலி**

யாழ்ப்பாணத்தில், 1974 ஜனவரியில் நடைபெற்ற நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டு கலை நிகழ்ச்சிகள் மூன்று அரங்கங்களில் நடைபெற்றன. வீரசிங்கம் மண்டபத்திலும், மாநகர சபை திறந்தவெளி அரங்கிலும் சுண்டிக்குழி மகளிர் கல்லூரி மண்டபத்திலும் பல்வேறு கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றபோது, நடன நிகழ்ச்சிகளின் விமர்சனத்துக்கு 'ஈழநாடு' என்னை பணித்திருந்தது. அந்த பத்து நாள்களும் இந்த மூன்று அரங்குகளிலும் நடந்த நிகழ்ச்சிகளைக் கவனிப்பது எளிதாக இருக்கவில்லை.


சுண்டிக்குழி மகளிர் கல்லூரி மண்டபத்தில் ஒரு நடன நிகழ்ச்சி. அதற்கு முன்னதாக, ஜோன் மார் என்ற வெள்ளைக்காரரர் ஒருவரின் கர்நாடக இசைக் கச்சேரி அங்கு நடைபெற்றது. அதைப் பார்க்கவேண்டும் என்று ஆவலாக இருந்தது. எனினும், முன்னதாக இன்னோர் அரங்குக்கு சென்றுவிட்டு அங்கு சென்றபோது, கச்சேரி முடிவாகிக்கொண்டிருந்தது. அது, மனதில் ஒரு மாதிரியாகவே இருந்துகொண்டிருந்தது.

பின்னர், லண்டனில் டாக்டர் ஜோன் மாருடன் நாற்பது ஆண்டுகள் ஒரு கலா பூர்வ அந்நியோன்யத்தைகொண்டிருந்தாலும், அவரின் கச்சேரியைக் கேட்டதில்லை.

இந்திய அரசின் 'பத்மஸ்ரீ' விருது பெற்ற டாக்டர் ஜோன் மார், இந்தியவியலிலும், இந்திய இசை, நடனத்திலும் தனக்கொரு மேதாவிலாசத்துடன் விளங்கிய ஒரு வெள்ளை முகம் - இந்திய கலைத் தூதரான ஒரு வெள்ளையர். அவரும், மனைவி வென்டி மாரும் எழிலான இந்திய தம்பதிகளாக - தமிழ் தம்பதிகளாக தெரிவார்கள். இவர்களின் மூத்த மகள் நீலாயதாக்ஷி. மற்றையவர் சரஸ்வதி.

சிதம்பரம், அண்ணாமலை பல்கலைக் கழகத்தில் தமிழையும் கர்நாடக இசையையும் கற்ற ஜோன் மார், இவ்விருதுறை அறிஞராக - கல்விமானாக மிளிர்ந்தார்.

பெரிய புராணம், சைவ நாயன்மார்கள், புறநானூறு, பதிற்று பத்து தொடர்பான நூல்களையும், 'பேச்சுவழக்குத் தமிழுக்கு ஓர் அறிமுகம்' நூலையும் ஆங்கிலத்தில் எழுதியிருக்கிறார். இந்திய மத்திய அரசின் மத்திய செந்தமிழ் நிறுவன 'குறள் பீடம்' விருதும் 2011இல் இவருக்கு கிடைத்தது. லண்டன் பல்கலைக்கழத்து கீழைத்தேய-ஆபிரிக்க கற்கைகள் கல்லூரியின் தமிழ் துறையை அலங்கரித்தவர். யாழ்ப்பாண தமிழாராய்ச்சி மாநாட்டில்



டாக்டர் ஜோன் மாருடன் பாரதிய வித்திய பவனின் டாக்டர் நந்தகுமார

ஆய்வுக் கட்டுரை ஒன்றையும் சமர்ப்பித்திருந்தார்.

லண்டனிலுள்ள இந்திய தூதரகம் 1982இல் பாரதி நூற்றாண்டை வெகு சிறப்பாக ஏற்பாடுசெய்து கொண்டாடியது. அந்த நிகழ்ச்சிகளில் ஒன்றாக, லண்டன் பல்கலைக் கழகத்து லோகன் மண்டபத்தில் டாக்டர் பத்மா சுப்ரமண்யத்தின் நடன நிகழ்ச்சி நடைபெற்றது. லண்டனிலிருந்து வெளியாகிய 'தமிழ் ரைம்ஸ்' ஆங்கில சஞ்சிகையில் அந் நடனம்பற்றி எழுத எனக்கு ஆவலாக இருந்தது. நான் வெளிப்படுத்த நினைப்பது ஓரிடத்தில் ஆங்கிலத்தில் சரியாக வெளிப்படவில்லை என்று நான் உணர்ந்தேன். ஆங்கில மொழிபெயர்ப்பு அல்ல, அதில் சரியான எண்ண வெளிப்பாடு எனக்கு தேவையாக இருந்தது.

டாக்டர் ஜோன் மாரை அணுகி, அவரிடம் காண்பித்தேன். அதைப் பார்த்தவர், 'இந்த இடத்தில் நீங்கள் என்ன சொல்ல நினைக்கிறீர்கள் என்பதை எனக்கு தமிழில் சொல்லுங்கள்' என்றார். அச்சொட்டான கலைப் பெறுமானத்துடன் ஆங்கிலத்தில் அவர் அதைச் சரிப்படுத்தினார்.

மேலைநாட்டு இந்திய கலை மேம்பாட்டுக்கு பெருந்துணையாகிய லண்டன் பாரதிய வித்திய பவனின் ஸ்தாபக அறங்காவலர் ஒருவர் டாக்டர் ஜோன் மார். சமஸ்கிருத பேரறிஞரான மத்தூர் கிருஷ்ணமூர்த்தியுடன் டாக்டர் ஜோன் மார், பாரதிய வித்திய பவனின் இந்த பெருமையின் பங்குதாரரர். மிக நீண்ட காலம் நம்முடைய சிவசக்தி சிவநேசன் கர்நாடக இசையை பாரதிய வித்திய பவனில் கற்பித்தபோது, டாக்டர் ஜோன் மார் அங்கு அவர்களுக்கு கர்நாடக இசையின் கோட்பாடுகளைக் கற்பித்தார்.

தேம்ஸ் நதியின் தென் கரையில் லண்டனில் மூன்று கலை அரங்குகள் இருக்கின்றன. இவை மூன்றும் இணைந்து, 'தென்கோடிக் கரை' - (South Bank) என்று அழைக்கப்படும். உலக கீர்த்திபெற்ற அரங்கங்கள். இங்கு நிகழ்ச்சியளிப்பது, உலகின் உன்னத கலைஞர்கள் எல்லோருக்குமே ஓர் உன்னதம்.

லண்டன் பாரதிய வித்திய பவனும் இந்திய இசை, நடனக் கலைஞர்களுக்கு அப்படியானதுதான். வட இந்திய கலைஞர்களானாலுஞ்சரி, தென்னிந்திய கலைஞர்களானாலும்சரி பாரதிய வித்திய பவனில் அவர்களுடைய இசை, நடன நிகழ்ச்சி முடிவுறுகின்றபோது, ஜோன் மார் அந்த நிகழ்ச்சியின் ரஸானுபவத்தை ஒரு சொட்டாக அங்கு தருவார். அப்போது அந்த நிகழ்வு, 'பாலொடு தேன் கலந்ததுபோல' தெரியும்.



வென்டி மார், டாக்டர் ஜோன் மார்

அந்த ஆற்றுகைக் கலை நம்மை அதில் திளைக்கவைத்தபோது, ஜோன் மார் அந்த ஆற்றுகைக் கலைஞர்களை அப்போது திளைக்கவைப்பார். அந்த நிகழ்ச்சியை, கலா நுணுக்கங்களுடனான மெச்சுதலுடன் கனகச்சிதமாக அவர் சாரப்படுத்துவது, ரசிகர்களோடு, கலைஞர்களையும் கூடவே ஈர்க்கும்.

முப்பதுகளிலான கர்நாடக இசையின் பொற்காலத்துக்கு பின்னரான காலப் பகுதியில் கர்நாடக இசையின் மதிப்பார்ந்த இசை அறிஞர்களில் ஒருவர் டாக்டர் ஜோன் மார்.

பிரிட்டிஷ் அரச மாளிகைகளில் ஒன்றான 'வின்ஸர் கோட்டை'க்கு அணித்தாய் அவரின் இல்லம், இயற்கையின் ரம்மியம் நிறைந்த ஒரு பெருந் தோப்பு. டாக்டர் பத்மா சுப்ரமண்யம், அவருடைய குழுவினர் சேர ஒரு நாள் முழுவதும், அச் சோலையில் டாக்டர் ஜோன் மார், வென்டி மார், பாரதிய வித்திய பவனின் டாக்டர் நந்தகுமார ஆகியோருமாக கழித்தமை, 'ஒரு வெளிக்கள கலை முகாம்'.

ஸ்கொட்டிஷ்காரரரான டாக்டர் ஜோர் மார், அவருடைய 95ஆவது வயதில் கடந்த 19ஆம் திகதி காலமானார். முன்னதாக, மனைவி வென்டி மார் கடந்த ஆண்டில் காலமாகியிருந்தார்.

---

**மு.நித்தியானந்தன்**

# 'மலையக அரசியல்: தலைவர்களும் தளபதிகளும்' - சி. வி. வேலுப்பிள்ளை


## ஒரு யுகத்தின் மீள் புனைவு

**லண்டனில் ஜூன் 11ஆம் திகதி விம்பம் அமைப்பின் ஏற்பாட்டில் நடைபெறவிருக்கும் மலையக இலக்கிய மாநாட்டில் வெளியிடப்படவிருக்கும் சி. வி. வேலுப்பிள்ளையின் 'மலையக அரசியல்: தலைவர்களும் தளபதிகளும்' என்ற நூல் பற்றிய கட்டுரை இது.**

க. கைலாசபதி தினகரனில் பிரதம ஆசிரியராக இருந்தபோதுதான் சி. வி. வேலுப்பிள்ளையின் மலையக அரசியல் தலைவர்கள், தளபதிகள் பற்றிய கட்டுரைத் தொடர் வெளியானது. 1958 செப்ரெம்பர் மாதத்திலிருந்து சி. வி. யின் மலையக அரசியல் கட்டுரைகள் 1959 ஏப்ரல் மாதம் வரை தினகரனில் தொடர்ந்து வெளியாகின. முதலில் இக்கட்டுரைத் தொடர் கேலிச்சித்திரம் என்று அறிமுகப்படுத்தப்பட்டு, அப்துல் அசீஸ், எஸ். தொண்டமான் ஆகியோர் பற்றிய கட்டுரைகள் கேலிச்சித்திரமாகவே ஓவியர் யூனுஸின் கேலிச்சித்திரத்துடன் வெளியாகின. அச்சித்திரங்கள் கேலிச்சித்திரங்களாக, political caricature/cartoon என்ற பாணியில் அமைந்திருந்தன. பின்னர் வெளியான அரசியல் தலைவர்கள், தளபதிகளின் கட்டுரைகள் அவர்களின் புகைப்படங்களுடன் வெளியாகின. கேலிச்சித்திரம் என்று அவை குறிக்கப்படாமல் வாழ்க்கைச்சித்திரம், பேனாச்சித்திரம் என்றே குறிக்கப்பட்டன.

'மலைநாட்டுத் தமிழ்மக்கள் தலைவர்கள்' என்ற தலைப்பில் முக்கிய பெரும் மலையக அரசியல் ஆளுமைகள் 13 பேரினதும், 'மலைநாட்டுத் தமிழ் மக்களின் உரிமைப்போர்த் தளபதிகள்' என்ற தலைப்பில் இரண்டாம் நிலைப்பட்ட - வளர்ந்துவரும் மலையக அரசியல் ஆளுமைகள் 13 பேரினதும் வாழ்க்கைச் சித்திரங்களை சி. வி. சிறப்பாக எழுதியிருந்தார்.

மலையகத்தின் அரசியல் தளத்தில் இயங்கிய 26 ஆளுமைகள் பற்றிய சி. வி. வேலுப் பிள்ளையின் பதிவு ஆறு தசாப்தங்கள் கழித்து இன்று நூல் வடிவம் பெறு வது ஈழத்து அரசியல் எழுத்திற்குக் கிடைத்திருக்கும் பெரும் பொக்கிஷமாகும். மலையகத்தின் அரும்பெரும் ஆவணப் பதிவாளராக சி. வி. ஈழத்து அரசியல் வரலாற்றில் நிலைபெறுகிறார். ஒவ்வோர் அரசியல் தலைவரையும் மிக நுட்பமாக அவதானித்து, அரிய தகவல்களுடன் அந்த அரசியல் ஆளுமைகளின் உள்ளார்ந்த சாரத்தை, அங்கதச் சுவையுடன் அபூர்வமான எழுத்தில் வடித்திருக்கிறார் சி. வி.




ஈழத்தில் நாம் காணும் அரசியல் தலைவர்கள் பற்றிய வரலாறு என்பது அத்தலைவர்களின் புகழ்ப்பரணி பாடுபவையாகவே அமைந்துள்ளன. ஒவ்வோர் அரசியல் தலைவரையும் பற்றி சி. வி. எழுதும்போது, அவரின் நினைவுக்கிடங்கில் குவிந்திருக்கும் கொள்ளைத் தகவல்க ள் அவரது நியாயமான பரிசீலனைக்குத் துணை நிற்கின் றன. கட்டுரையின் ஒவ்வொரு வசனத்திலும் புதிய - அரிய - வேறெங்கும் நாம் கேட்டிராத தகவல்கள் கட்டுரையின் செழுமைக்கு துணை சேர்க்கின்றன. ஒரு கவிஞனின் சாணைக்கல்லில் வார்க்கப்பட்ட அரசியல் சொல்லோவியங்களாக அவை மிளிர்கின்றன. ஓர் அரசியல் கட்டுரையை இத்துணை ரசனையோடு, அங்கதம் பளிச்சிட, ஆழ்ந்த பகுப்பாய்வுடன் எழுதவல்ல பிறிதோர் எழுத்தாளனை நாம் இங்கு கண்டதில்லை. இந்த அரசியல் கட்டுரைகள் மூலம் சி. வி. அரசியல் எழுத்தின் உன்னதத்தைத் தொட்டிருக்கி றார்.

மலைநாட்டுத் தொழிற்சங்க வரலாற்றின் முன்னோடி கே. நடேசய்யரைப் பற்றி சி. வி. எழுதும்போது, 'தொழிலாளர் எழுச்சியுற்று, உரிமையுடைய மக்களைப்போல் தன்மானத்தோடு நடக்க, ஐயரவர்கள் கற்பித்தார் என்பதனை ஒருபொழுதும் அலட்சியம் செய்யமுடியாது' என்று குறிப்பிடும் அதேவேளை, 'அவருக்கு நல்ல ஆலோசனை கூறுவோர் இருக்கவில்லை. ஆமாம் போடுபவர்கள் மட்டுமே இருந்தார்கள். அவருடைய ஸ்தாபனம் ஒரு திட்டவட்டமான கொள்கையுடையதல்ல. ஆனால், தான் மட்டும் தனியாய் நின்று நாடகத்தை நடத்தினார். அவருடைய சம்மேளனம், அவர் ஏறிச் சென்ற அந்த ரதம் 1947ஆம் ஆண்டில் நொறுங்கிச் சிதைந்தது' என்று துல்லியமான மதிப்பீட்டினை முன்வைக்கிறார்.

ஜனாப்.அப்துல் அசீஸ் பற்றி சி. வி. எழுதுகையில், 'அவர் இரண்டு லட்சம் மக்களின் தலைவர் ஆயினும் அவர் நெருக்கடியான தருணங்களில் இனித்தான் முக்கிய முடிவுகள் செய்யவேண்டியவராயிருக்கிறார். புதியவர்களைச் சுலபமாக வசீகரிப்பவர் ஆனால், அவர்களைத் தம்வசம் வைத்திருப்பதற்கு கஷ்டப்படு வார்' என்று எழுதுகிறார்.

எஸ். தொண்டமான் பற்றி எழுதுகையில், 'திரு. தொண்டமான் அரிசிச் சோறு அரைப்பங்குக்கும், தாழ்மையான தம்மைப்பற்றிய பத்திரிகைச் செய்திகள் என்னும் உணவை மூன்றரைப்பங்கும் உண்டு வாழ்கிறாரென்பது பொதுவான பேச்சாகும்' என்று சி. வி. எழுதுவதை வேறு யார் எழுத முடியும்?

(18ஆம் பக்கம் பார்க்க)

ஈழநாடு


# புலமைச் சிகரம் தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி


மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

1) C 2) E 3) F


24. மூன்று கால் மேசை ஒன்றைச் சுற்றி நாற்காலிகள் மூன்று உள்ளன. அங்கு காணப்படும் கால்களின் எண்ணிக்கை யாது?
1) 16 2) 15 3) 13

25. சத்தி, நிஷான், விஜய், அருண் ஆகிய நால்வரில் விஜயிலும் உயரம் குறைந்தோர் இருவர் மட்டுமே உள்ளனர். நிஷானிலும் உயரம் குறைந்தோர் ஒருவர் மட்டும் உள்ளார். சத்தி மாத்திரம் நிஷானிலும் உயரம் குறைந்தவர் ஆவார். நால்வரில் உயரம் கூடியவர் யார்?
1) விஜய் 2) நிஷான் 3) அருண்


26. ஒரு வரிசையில் கமலா முன்னாலிருந்து 7 ஆவதாகவும் விமலா பின்னாலிருந்து 4 ஆவதாகவும் உள்ளனர். அவர்கள் இருவருக்குமிடையில் இரண்டு பேர் உள்ளனர். அவ்வரிசையில் மொத்தம் எத்தனை பேர் உள்ளனர்?
1) 13 2) 14 3) 15

27. 
உருவில் உள்ள வடிவத்தைப் புள்ளிக்கோட்டின் வழியே வெட்டும்போது கிடைக்கும் முகத்தின் வடிவம்
1) சதுரம் 2) செவ்வகம் 3) அரியம்

28. மகனை விட அப்பா உயரம் கூடியவர் என்பது
1) எப்பொழுதும் உண்மையானது
2) சில சமயம் உண்மையானது
3) எப்பொழுதும் பொய்யானது

29.  இச் சிறிய முக்கோணத்தின் சுற்றளவு 9cm எனின்  இம்முக்கோணியின் சுற்றளவு யாது?
1) 12cm 2) 18cm 3) 36cm

30. படகு ஒன்றில் 30 பேர் பயணிக்கலாம் எனின் 100 பேர் பயணிப்பதற்கு எத்தனை படகுகள் தேவை?
1) 3 2) 2 3) 4


31. 

வெறுமையான கட்டத்துக்குப் பொருத்தமான எண் யாது?
1) 14 2) 10 3) 12

32. அட்டவணையை அடிப்படையாகக் கொண்டு விடையளிக்குக.


| பூக்கள் | பழங்கள் | D |
|---|---|---|
| A | மாம்பழம் | கத்தரி |
| மல்லிகை | அன்னாசி | வெண்டி |
| செவ்வந்தி | C | தக்காளி |

அட்டவணையில் ACD ஆகியவற்றுக்குப் பொருத்தமான விடைகள் முறையே
1) நித்திய கல்யாணி, பலாப்பழம், காய்கறிகள்
2) முருங்கை, காய்கறிகள், வெண்டி
3) கீரை, பருப்பு, சோயா

33. 


நித்திய கல்யாணிப் பூவைக் குறிக்கும் எழுத்து
1) அ 2) ஆ 3) இ

❖ 34, 35 ஆம் வினாக்களுக்கு தரப்பட்டுள்ள உருவைக் கொண்டு விடையளிக்குக.

34. 

பிள்ளை காலையில் தான் நிற்கும் இடத்திலிருந்து பாடசாலை நோக்கிச் செல்லும்போது எத்தனை தடவை தெற்கு பக்கமாகச் செல்ல வேண்டும்?
1) 2 தடவைகள் 2) 3 தடவைகள் 3) 4 தடவைகள்

35. இப் பிள்ளை காலையில் பாடசாலைக்குச் செல்லும்போது இவரது நிழல் எத்தனை தடவை முன்னால் விழுந்தது?
1) 6 தடவைகள் 2) 5 தடவைகள் 3) 4 தடவைகள்

36. 
இவ்வுருவில் $\frac{3}{8}$ நிறம் தீட்ட வேண்டும் எனின் மேலும் எத்தனை துண்டங்களுக்கு நிறம் தீட்ட வேண்டும்?
1) 2 2) 3 3) 4

## விடைகள்

| | | |
|---|---|---|
| 24. 2 | 28. 2 | 32. 1 |
| 25. 3 | 29. 2 | 33. 1 |
| 26. 1 | 30. 3 | 34. 2 |
| 27. 2 | 31. 1 | 35. 1 |

## கல்வி tv CHANNEL-1

**29.05.2022**
**ஞாயிற்றுக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | தமிழ் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | வரலாறு |
| 08.15 | தரம்-10 | தமிழ் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English வினாத்தாள் |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | விஞ்ஞானம் வினாத்தாள் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் வினாத்தாள் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | கணிதம் வினாத்தாள் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு வினாத்தாள் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | சைவசமயம் வினாத்தாள் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast வணிகப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் வினாத்தாள் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு வணிகப்பிரிவு |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் வினாத்தாள் மறு ஒளிபரப்பு அனைத்துப்பாடங்களும் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | விஞ்ஞானம் வினாத்தாள் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் வினாத்தாள் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | கணிதம் வினாத்தாள் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு வினாத்தாள் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | சைவசமயம் வினாத்தாள் |
| 04.30 | தரம்-10 | English |

## கல்வி tv CHANNEL - 2

**29.05.2022**
**ஞாயிற்றுக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | பாட்டு |
| 08.15 | தரம்-01 | English |
| 09.00 | தரம்-02 | அழகியல் |
| 09.45 | தரம்-03 | English |
| 10.30 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 11.15 | தரம்-04 | சைவசமயம் |
| 12.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 01.15 | தரம்-05 | English |
| 02.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | பாட்டு |
| 05.00 | தரம்-01 | English Cartoon |
| 05.15 | தரம்-02 | அழகியல் |
| 06.00 | தரம்-03 | English |
| 06.45 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 07.30 | தரம்-04 | சைவசமயம் |
| 08.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-05 | English |
| 09.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | English |
| 12.30 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 01.15 | தரம்-04 | சைவசமயம் |
| 02.00 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.45 | தரம்-05 | English |
| 03.30 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# பொருளாதார மாநாடு நடத்த ரணில் திட்டம்!

கொழும்பு, மே. 29

இலங்கையில் ஏற்பட்டுள்ள கடும் பொருளாதார நெருக்கடி நிலைமையை சமாளித்து, அரசியல், பொருளாதார ஸ்திரத் தன்மையை ஏற்படுத்துவதற்கான முயற்சியில் தீவிரமாக இறங்கியுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அதற்கான வழி முறைகள் பற்றியும் ஆராய்ந்து வருகின்றார்.

இதன்படி உலக நாடுகளின் ஒத்துழைப்பு மற்றும் முதலீடுகளை பெறும் நோக்கில் பொருளாதார மாநாடு ஒன்றை நடத்துவதற்கு பிரதமர் திட்டமிட்டுள்ளார்.

இடைக்கால வரவு - செலவுத் திட்டத்தை முன்வைப்பதற்கு முன்னர் இது தொடர்பான அதிகாரபூர்வ அறிவிப்பு வெளியாகும் என தெரியவருகின்றது.

இலங்கையில் பொருளாதார மறுசீரமைப்பு இடம்பெற்றால், உதவிகளை வழங்குவதற்கும், முதலீடுகளை செய்வதற்கும் தயார் என வெளிநாட்டு நிறுவனங்கள்கூட அறிவித்துள்ளன. எனவே, இடைக்கால வரவு-செலவுத் திட்டத்தின் பொருளாதார மறுசீரமைப்பு திட்டங்களும் முன்வைக்கப்படவுள்ளன.

அதேபோல நன்கொடையாளர் மாநாடு, சுற்றுலாத்துறை மாநாடு உள்ளிட்ட ஏற்பாடுகளும் இடம்பெறவுள்ளன என்று தெரியவருகின்றது.

(அ)

# ஆடைத் தொழிற்துறையின் வருமானம் 10.8 வீத வளர்ச்சி

கொழும்பு, மே. 29

ஆடைத் தொழிற்துறையில், இந்த ஆண்டில், 6 பில்லியன் டொலர் வருமானம் ஈட்டுவதற்கான இலக்கை எட்டக்கூடியதாக இருக்கும் என ஒன்றிணைந்த ஆடைத்தொழிற்துறை சங்கங்களின் சம்மேளனம் தெரிவித்துள்ளது.

பொருளாதார தளம்பல் நிலை காணப்படுகின்றபோதிலும், ஆடைத் தொழிற்துறை வலுவான நிலையில் உள்ளதாக அந்த சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜொஹான் லோரன்ஸ் தெரிவித்துள்ளார்.

ஆண்டின் முதல் காலாண்டில், ஆடைத் தொழிற்துறையின் வருமானம், 1.5 பில்லியன் டொலர் வரையில் அதிகரித்து, 10.8 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது.

எவ்வாறிருப்பினும், அந்த வளர்ச்சி வீதத்தில், மார்ச் மாதத்தில் வீழ்ச்சி ஏற்பட்டிருந்த போதிலும், ஏப்ரலில் 445.79 மில்லியன் டொலர் வருமானம் கிடைக்கப்பெற்றுள்ளதாக ஒன்றிணைந்த ஆடைத்தொழிற்துறை சங்கங்களின் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜொஹான் லோரன்ஸ் தெரிவித்தார். (அ)

# மலையக அரசியல்...

(16ஆம் பக்கத் தொடர்ச்சி)

'தெளிந்த சிந்தையும் அன்பு உள்ளமும் வாழ்க்கையிலுள்ள சகல நல்லவற்றையும் மேனமையானவற்றையும் பயபக்தியுடன் போற்றும் மரியாதை உணர்ச்சியும் படைத்த பண்பாட்டின் சிறந்த வாலிபத் தலைவரான திரு. தேவராஜ் சமுதாயத்துக்கு ஒரு பொக்கிஷம்' என்று சான்று தருகிறார் சி. வி.

சி. வி. தீட்டிய மலையகத் தலைவர்களின் சித்திரத்தில் வந்து சேர்ந்தவர்களில் இன்றும் எம்மிடையே வாழும் சீலராகத் தனித்துவம் பெறுகிறார் பி. தேவராஜ்.

மலையக அரசியலைத் தொழிற்சங்க அரசியலிலிருந்து பிரித்துப்பார்க்க முடியாது. மலையக சமுதாய உருவாக்கத்தில் தொழிற்சங்கங்களே அந்த மக்களின் காவல் அரணாகத் திகழ்ந்திருக்கிறது. அவர்களின் தொழிற்களத்திலே நின்று அந்த மக்களுடன் போராடியிருக்கிறது. தொழிற் சங்கங்களை அமைப்பதற்கான போராட்டத்திலே இரண்டு இளஞ்சிங்கங்கள் தூக்குக்கயிறை முத்தமிட்டுள்ளன. மலையக மக்களின் மீட்சிக்குக் குரல் கொடுத்த இப்பெருந்தகைகள் எல்லாரும் ஏதோ ஒருவகையில் தொழிலாளர்களோடும் தொழிற் சங்கங்களோடும்  அந்தரங்க சுத்தியோடு உழைத்திருக்கிறார்கள். எளிமையோடு அந்த மக்களுடன் வாழ்ந்திருக்கிறார்கள். சி.வி. வடித்திருக்கும் அந்தப் பெரியார்களின் வாழ்க்கை கனம் பண்ண வேண்டிய பெருமக்களின் வாழ்வாக நம் கண்முன்னே விரிகிறது.

காந்தி, அம்பேத்கார், ராஜாஜி, பண்டிதர் நேரு, பெரியார் ஈ.வே.ரா, ராஜேந்திர பிரசாத், பாலகங்காதர திலகர், பிபின் சந்திரபால், கமலாதேவி சட்டோபாத்யாய, டாக்டர். ருக்மணி இலட்சுமிபதி, ஹரீந்திரநாத் சட்டோபாத்யாய, முஹம்மது அலி ஜின்னா, கஸ்தூரிரங்க ஐயங்கார், கல்கி, நீதியரசர் சதாசிவ ஐயர், சி. எப். அன்றூஸ் போன்ற இந்திய சுதந்திரப் போராட்ட வீரர்களுடனும் பெரியார்களுடனும் உறவு பூண்டிருந்த

பேராளுமைகளைக் கொண்ட அரசியல் தலைமை மலையகத்தில் வேரூன்றியிருந்தது என்பதை சி. வி. யின் இந்த எழுத்துகள் இனங்காட்டுகின்றன.

சேர். பொன் அருணாசலம், தியாகராஜன் செட்டியார், சத்தியவாகீஸ்வர ஐயர், சேர். ஜேம்ஸ் பீரிஸ், லாரி முத்துகிருஷ்ணா, டாக்டர் சரவணமுத்து போன்ற பெருந்தகைகளுடனும் சேர்ந்து உழைத்த மலையக அரசியலின் முற்போக்குப் பாங்கினை இந்நூல் வலியுறுத்துகிறது. அந்த அரசியலின் பன்னிற மணிக்கலவை செழுமையானது. அந்த அரசியலில் ஆழ்ந்தவர்கள் நேர்மையானவர்களாக இருந்திருக்கிறார்கள். ஏழை எளிய மக்களின் சுபீட்சமே தங்கள் பணியின் இலக்காக வரித்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் கொண்டிருந்த தொடர்புப் பின்னல் ஆச்சரியமூட்டுகிறது. பெருமைப்படத்தக்க அரசியல் பாரம்பரியத்தை அவர்கள் மலையகத்திற்கு விட்டுச் சென்றிருக்கிறார்கள்.

அத்தகைய செழுமையான அரசியல் பாரம்பரியத்தை எழுத்திலே வடித்த மலையகத்தின் பெருங் கவிஞர் சி. வி. வேலுப்பிள்ளை அவர்களுக்கு மலையகம் நன்றிக்கடன்பட்டிருக்கிறது. இத்தகைய ஓர் அற்புதமான பதிவை அவரைப்போன்ற ஒருவரே சாதித்திருக்கமுடியும்.

ஒவ்வொரு கட்டுரையிலும் ஒவ்வொரு வசனத்திலும் பொருள் பொதிந்த கருத்துகளை, தகவல்களை, புதிய செய்திகளை அவர் வாரி இறைத்துச் செல்கிறார். இந்தக்கட்டுரைகள் 1958/1959 இல் எழுதப்பட்டு, இன்று 63 ஆண்டுகளுக்குப்பின் நூல் வடிவம் பெறுகிறது என்பது, நமது அரும்பெரும் இலக்கியப் பொக்கிஷங்களைப் பேணுவதில் நாம் காட்டும் அசிரத்தையைக் காட்டுகிறது. மலையக மக்களின் அரசியல் தலைவர்கள் குறித்த கட்டுரைத் தொடரை எழுத சி. வி. யை ஊக்குவித்து, தினகரனில் அதனைத் தொடராக வெளியிட்டு, ஒரு சமூகத்தின் பாரிய தேவையை நிறைவு செய்த பேராசிரியர் க. கைலாசபதிக்கு நாம் நன்றி கூறுதல் தகும்.

மலையகத்தின் சென்றொழிந்துபோன ஒரு பழைய யுகத்தை மீட்டெடுத்து புதிதாய்ப் புனையும் பெரும் பணியைத் தோளில் சுமக்கும் பலம் சி. வி. யிடமே இருந்தது. அவரது விரிந்த வாசிப்பும் பரந்த கவியுள்ளமும் தொழிலாளர் நேசமும் தொழிற்சங்க ஈடுபாடும் அரசியல் தெளிவும் எழுத்துவன்மையும் தராசுபோல் சீர் தூக்கிப்பார்க்கும் பாங்கும் இந்த நூலுக்கு பேரழகைச் சேர்த்திருக்கிறது

# மீனவருக்கு மானிய விலை எரிபொருள் இல்லையேல் பிரதமரின் வீடு முற்றுகை!

## எச்சரிக்கிறது ஐக்கிய மக்கள் சக்தி

கொழும்பு, மே. 29

**மானிய விலையில் எரிபொருள் வழங்கக் கோரி அமைச்சர்கள் மற்றும் பிரதமர் வீடுகளை விரைவில் முற்றுகையிட கடற்றொழிலாளர்கள் தயாராகி வருவதாக ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.**

கல்விப் பொதுத்தராதர சாதாரணப் தரப் பரீட்சை நிறைவடைந்ததன் பின்னர் இந்த போராட்டத்தை நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் திலீப் வெதஆராச்சி தெரிவித்தார்.

தனக்குச் சொந்தமான மூன்று படகுகள் தொழிலில் ஈடுபட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ள வெதஆராச்சி, கடற்றொழிலாளர் அமைப்புகளைச் சேர்ந்த சிலர் இந்தத் திட்டத்தைத் தமக்கு அறிவித்துள்ளதாக கூறினார்.

கடற்றொழிலாளர்கள் வீதிகளில் இறங்கினால் அவர்களைத் தடுப்பது மிகவும் கடினம் என்று அவர் எச்சரித்தார்.

டீசல் மூலம் இயங்கும் 63,000 பல நாள் மீன்பிடி படகுகள் மற்றும் 9,000 ஒற்றை நாள் மீன்பிடி படகுகள், எரிபொருள் விலை உயர்வுக்குப் பிறகு மீன்பிடி நடவடிக்கைகளை நிறுத்திவிட்டன. அத்துடன் மண்ணெண்ணெய் மூலம் இயக்கப்படும் சிறிய படகுகளும் நேற்று முதல் மீன்பிடித்தலை நிறுத்தியுள்ளன என தெரிவிக்கப்பட்டது.

(அ)

# வவுனியா கறுப்பு சந்தையில் சமையல் எரிவாயு 15,000 ரூபா

வவுனியா, மே. 29

வவுனியாவில்சமையல் எரிவாயு கறுப்பு சந்தைகளில் 15 ஆயிரம் ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டு வருவதாக பொது மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

வவுனியா மாவட்டத்துக்கு என அனுப்பப்படுகின்ற சமையல் எரிவாயுவை பதுக்கும் சில விற்பனை முக வர்கள் அதனை வேறு இடங்களில் களஞ்சியப் படுத்திவிட்டு ஓட்டோ சாரதிகள் சிலரின் துணையுடன் 15 ஆயிரம் ரூபாய்க்கு விற்பனை செய்து வருகின்றனர்.

12.5 கிலோ சமையல் எரிவாயுவே இவ்வாறு 15 ஆயிரம் ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகின்றது.

இதனால் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் சாதாரண மக்கள்

பலரும் சமையல் எரிவாயுவை பெற்றுக் கொள்ள முடியாத நிலையில் இருப்பதுடன், இது தொடர்பில் பாவனையாளர் அதிகார சபையினர்கூட கவனம் செலுத்தவில்லை எனவும் பொது மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

(அ)



## 9 வயது சிறுமி...

09 வயதான மொஹமட் அக்ரம் பாத்திமா அதீஷா எனும் சிறுமியே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

அட்டுலுகம பகுதியிலுள்ள பாடசாலையொன்றில் தரம் 04-இல் கல்வி கற்கும் மாணவி, நேற்று முன் தினம் முற்பகல் 10 மணியளவில் கோழி இறைச்சி வாங்குவதற்காக அருகிலுள்ள கடைக்கு சென்றுள்ளார். எனினும், அவர் வீடு திரும்பவில்லை.

இந்நிலையில், சிறுமியின் வீட்டுக்கு அருகிலுள்ள அட்டலுகம பள்ளிவாசலை அண்மித்து காணப்படும் சதுப்பு நிலத்திலிருந்து நேற்று மாலை சடலம் கண்டெடுக்கப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

சம்பவ இடத்துக்கு சென்ற பண்டாரகம பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி விசாரணைகளை முன்னெடுத்துள்ளதாகவும் அவர் கூறினார்.

இந்த சம்பவம் தொடர்பான விசாரணைகள் பிராந்திய குற்றத்தடுப்பு பிரிவு உள்ளிட்ட அதிகாரிகள் அடங்கிய 04 குழுக்களால் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

மொஹமட் அக்ரம் பாத்திமா அதீஷா தனது வீட்டை அண்மித்த கடைக்குச் சென்று தேவையான பொருட்களை கொள்வனவு செய்த பின்னர் மீண்டும் வீடு நோக்கி செல்கின்றமை சி.சி.ரி.வி. கமராவில் பதிவாகியிருந்ததாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

எனினும், சி.சி.ரி.வி. கமெரா செயற்படாத, சிறுமியின் வீட்டிலிருந்து 150 அல்லது 200 மீற்றர் தூரம் கொண்ட பகுதியில் வைத்து சிறுமிக்கு ஏதோவொரு அனர்த்தம் நடந்திருக்கலாமென அவர் கூறினார்.

இந்நிலையில், இந்த சம்பவம் தொடர்பிலான விசாரணைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

சிறுமியின் உறவினர் ஒருவர் தொடர்பிலும் சந்தேகம் நிலவுகின்றது. தாய், தந்தை உட்பட 20 பேரிடம் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளன. (அ)

## ரணில்...

பிரதமராக பதவியேற்று அதனைக் கெடுத்துவிட்டார். ஜனாதிபதி கோட்டாபயவைக் காப்பாற்றுவதற்காகவே பிரதமராக பதவியேற்றார் ரணில். இது முற்றுமுழுதாக ஜனநாயகத்துக்கு விரோதமான செயல். இதனைக் கூட்டமைப்பு ஒருபோதும் ஏற்காது. ஜனாதிபதி கோட்டாபயவும் பிரதமர் ரணிலும் பதவி விலக வேண்டும் என்பதே எமது நிலைப்பாடு.

சட்ட மறுசீரமைப்புக் குழுவுக்கு தலைமை வகிக்குமாறு பிரதமர் ரணில் தான் என்னிடம் கேட்டார். அதற்கு நான் சம்மதம் தெரிவித்தேன். ஆனால் இப்போது பார்த்தால் அந்தக் குழு அமைக்கப்படாது என்றே தோன்றுகின்றது.

பிரதமராக ரணில் இருந்தாலும் முடிவுகளை அவரால் எடுக்க முடியாது. பிரதிச் சபாநாயகர் நியமனத்தின்போது இது நன்றாக வெளிப்பட்டது. அங்கு பஸில் ராஜபக்ஷ என்பவர்தான் முடிவுகளை எடுக்கிறார். ரணில் பிரதமர் பதவியில் ஒரு பொம்மை போன்று இருக்கிறார்.

மக்கள் ஆணை ஒன்றையே நாட்டு மக்கள் எதிர்பார்க்கிறார்கள். அவ்வாறானால் தேர்தல் ஒன்றே நடத்தப்படவேண்டும். அதுதான் இந்த நெருக்கடிக்கு ஒரே ஒரு தீர்வு-என்றார். (அ)

## மின்சார...

குறிப்பிட்டார்.

9 வருடங்களாக மின்சாரக் கட்டணம் அதிகரிக்கப்படாத நிலையில் அரசு பெரியளவிலான பணத்தை மின்சாரத்துக்காக செலவிடுவதாக அவர் தெரிவித்தார்.

உத்தேச மின் கட்டண மாற்றங்களினால் பல நிறுவனங்களின் தற்போதைய மின்சார கட்டணத்தை மூன்று மடங்காக அதிகரிக்க முடியும் என்று அமைச்சர் கூறினார்.

பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவும் சில முன்மொழிவுகளை முன்வைத்துள்ளபோதிலும் இதுவரை எந்த நடவடிக்கைகளும் அங்கீகரிக்கப்படவில்லை என்று எரிசக்தி அமைச்சர் கூறினார்.

அமைச்சரவைக் கூட்டத்திலும் இது குறித்து விவாதிக்கப்பட்டதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

கணிசமான அளவு அதிக அலகு மின்சாரத்தை பயன்படுத்தும் ஹோட்டல்கள், தொழிற்சாலைகள் மற்றும் பெரிய வீடுகள் போன்ற நுகர்வோருக்கு மின் கட்டணங்கள் திருத்தப்பட வேண்டும் என்று தாம் கருதுவதாக அமைச்சர் தெரிவித்தார்.

கருணைக் காலம் வழங்கப்பட்டதன் பின்னர் அமைச்சரவை மற்றும் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் ஒப்புதலுடன் இந்தத் திருத்தத்தை நடத்த எதிர்பார்ப்பதாக அமைச்சர் கூறினார்.

குறைந்த வருமானம் பெறுவோர் மற்றும் குறைந்த மின்சார அலகுகளை பயன்படுத்தும் நுகர்வோரின் கட்டணத்தை உயர்த்தும் திட்டம் இல்லை என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

இதற்கிடையில், கட்டணங்கள் திருத்தப்பட்டால், சில ஹோட்டல்கள், தொழிற்சாலைகள் மற்றும் அதிக மின்சாரம் பயன்படுத்தும் வீடுகளுக்கு 300 - 400 சதவீத மின் கட்டணத்தை அதிகரிக்க முடியும் என்று அமைச்சர் சுட்டிக்காட்டினார். (அ)

## மாகாண...

சொல்லி, நிறைவேற்று ஜனாதிபதி முறையை அகற்றினால், 13ஆம் திருத்தம், தேர்தல் முறை ஆகியவையும் மாற வேண்டும் என இங்கே பலர் சொல்ல தொடங்கி உள்ளார்கள்.

தென்னிலங்கை சிவில் சமூகத்துக்கு நல்லாட்சி, சுயாதீனக் குழுக்கள், நீதிமன்ற சுதந்திரம், ஊடக சுதந்திரம், ஊழல் எதிர்ப்பு போன்ற பல்வேறு முன்னுரிமை பிரச்னைகள் தொடர்பாகத் தேசிய கோரிக்கைகள் உள்ளன. இவற்றை நாங்களும் கடுமையாக ஆதரிக்கின்றோம். அதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை.

ஆனால், எங்களது முன்னுரிமை பிரச்னைகள் வேறு.

முன்வைக்கப்பட்டுள்ள கோரிக்கைகள்

ஒரே நாட்டுக்குள் வடக்கு, கிழக்கில் தமிழ், முஸ்லிம் மக்களுக்கு அதிகார பகிர்வு, மலையகத்தில் அதிகார பகிர்வு, தோட்ட குடியிருப்புகளைத் தேசிய நிர்வாக வலையமைப்புக்குள் கொண்டுவரல், மொழி உரிமை, மத வழிபாட்டு உரிமை, அகழ்வாராய்ச்சி, வனம் மற்றும் வனஜீவராசிகள் திணைக்களங்கள், மகாவலி அதிகார சபை ஆகியவற்றின் மூலம் வடக்கு, கிழக்கில் காணி பிடிப்பு, பௌத்த மயமாக்கல், பயங்கரவாத தடுப்புச் சட்டம், அரசியல் கைதிகள், காணாமல்போனோர் என்று பல்வேறு பிரச்னைகள் உள்ளன.

தேசிய கோரிக்கைகளை ஆதரிக்கும் அதேவேளை எமது பிரச்னைகளையும் நாம் களத்துக்குக் கொண்டுவர வேண்டும். எமது பிரச்னைகளுக்கு நாம் முன்னுரிமை கொடுக்க வேண்டும்.

எனவே தான், ஜனாதிபதி முறைமையை முழுமையாக அகற்றுகிறீர்களோ, இல்லையோ, 13ஆம் திருத்தம், தேர்தல் முறை இவற்றில் கைவைக்க ஒருபோதும் இணங்கமாட்டோம். இருப்பதையும் இழக்க இணங்கமாட்டோம்.

பழைய பிரச்னையைத் தீர்க்கப் போய், புது பிரச்னைகளை உருவாக்காதீர்கள் என்று நான் பிரதமர்ரணில் விக்ரமசிங்க தலைமையில் நடைபெற்ற அனைத்து கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் உரக்கக் கூறினேன்.

இந்த நிலைப்பாட்டுடன் உடன்படும்படி, அனைத்து தமிழ், முஸ்லிம் கட்சிகளையும், அக்கட்சித் தலைவர்களையும், பாராளுமன்ற உறுப்பினர்களையும் தமிழ், முஸ்லிம் அரசியல் ஆய்வாளர்களும், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களும், முன்னாள் மாகாணசபை உறுப்பினர்களும், கட்சி உறுப்பினர்களும் வலியுறுத்த -என்றார். (அ)

# நெல்லியடியில் நகை திருட்டு; பெண் உட்பட இருவர் கைது!

யாழ்ப்பாணம், மே. 29

நெல்லியடியில் வீடொன்றை உடைத்து நகைகள் மற்றும் அலைபேசி உள்ளிட்ட பெறுமதியான பொருள்களைத் திருடிய குற்றச்சாட்டில் பெண் உள்ளிட்ட இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இரண்டு மாதங்களுக்கு முன்னர் நெல்லியடி நகரப் பகுதியில் உள்ள வீடொன்றை பட்டப்பகலில் உடைத்து நகைகள் மற்றும் அலைபேசி உள்ளிட்ட பெறுமதியான பொருள்கள் திருட்டுப் போயிருந்தன.

சம்பவம் தொடர்பில் நெல்லியடிப் பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில் காங்கேசன்துறை பிராந்தியத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழான மாவட்டக் குற்றத்தடுப்பு பொலி ஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

இந்த நிலையில் 28 வயதுடைய ஆண் ஒருவரும் 20 வயதுடைய பெண் ஒருவரும் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டனர்.

சந்தேக நபர்களிடமிருந்து ஐ போன் ஒன்றும் ஐ பாட் ஒன்றும் 6 கிராம் எடையுடைய தோடுகளும் மற்றும் 35 ஆயிரம் ரூபாய் பணமும் கைப்பற்றப்பட்டன.

# ரயில் மோதி 7 வயது சிறுமி உயிரிழப்பு!

கொழும்பு, மே. 29

ரயில் மோதி 7 வயது சிறுமி ஒருவர் உயிரிழந்துள்ளார். உயிரிழந்தவர் தியகம பிரதேசத்தை சேர்ந்த சிறுமி என அடையாளம் காணப்பட்டுள்ளார். கொஸ்கொட தியகம ரயில் நிலையத்திற்கு அருகில் உள்ள புகையிரத கடவையில் சிறுமி விபத்துக்குள்ளாகியுள்ளார்.

## காலிமுகத்திடல்...

பட்டது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலக வேண்டும் என வலியுறுத்தி முன்னெடுக்கப்பட்ட போராட்டம் நேற்று 50 ஆவது நாளாகவும் தொடர்ந்தது.

இதனை முன்னிட்டு கட்சி சார்பற்ற மக்கள், சிவில் சமூக பிரதிநிதிகள், கலைஞர்கள் மற்றும் வல்லுநர்கள் உள்ளிட்ட குழுவினர் போராட்டத்துக்கு வலுசேர்க்கும் வகையில் நேற்று பேரணியொன்றை முன்னெடுத்திருந்தனர்.

இதன்போதே அவர்களை கலைப்பதற்காக பொலிஸார் நீர்த்தாரை மற்றும் கண்ணீர்ப்புகை பிரயோகம் மேற்கொண்டனர்.

ஜனாதிபதி உடனடியாக இராஜினாமா செய்ய வேண்டும் என கோரி தொடர்ச்சியாக இந்த போராட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

பல்வேறு தரப்பினரின் பங்குபற்றுதலுடன், கொள்ளுப்பிட்டி சந்தியிலிருந்து கோட்டா கோ கம போராட்டக் களம் நோக்கிய பேரணி நேற்று முன்னெடுக்கப்பட்டது.

ஜனாதிபதி மாளிகை உள்ளிட்ட அனைத்து வீதிகளிலும் பொலிஸ் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது. (அ)

## 11 பரல்களில்...

கைப்பற்றப்பட்டன என்று சுன்னாகம் பொலிஸார் தெரிவித்தனர்.

சுன்னாகம் மயிலங்காடு - குப்பிளான் பகுதியில் உள்ள வீடொன்றோடு இணைந்த கடை ஒன்றிலிருந்தே நேற்று மாலை இவ்வாறு எரிபொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

பெற்றோல் ஒரு லீற்றர் 500 ரூபாய்க்கு விற்பனை செய்தபோதே சந்தேக நபர் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் கூறினர்.

சுன்னாகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தலைமையிலான குழுவினரே இந்த கைது நடவடிக்கையை முன்னெடுத்தனர்.

மண்ணெண்ணெய் சுமார் ஆயிரத்து 670 லீற்றர், பெற்றோல் சுமார் 310 லீற்றர் டீசல் சுமார் 200 லீற்றர் கைப்பற்றப்பட்டுள்ளன.

49 மற்றும் 40 வயதுடைய இருவர் கைது செய்யப்பட்டனர். அவர்கள் நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளனர். (அ)

## மின்வெட்டு...

அறிவிப்பை வெளியிட்டார்.

விடுமுறை நாளான இன்று அரச திணைக்களங்கள் உட்பட்ட அலுவலகங்களின் செயற்பாடு இடம்பெறாது என்பதால் மின் பாவனை குறைவாக காணப்படும். இதனால் குறித்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டிருக்கலாம் என்று கருதப்படுகின்றது. (அ)

## ரணிலுடன்...

போதே அவர் இதனைக் கூறினார் என்று வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

“பொருளாதார நெருக்கடியில் இருந்து என்னால் மாத்திரம் இலங்கையைக் காப்பாற்ற முடியாது. பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காணும் திறன் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் உண்டு. அதனால்தான் அவரைப் புதிய பிரதமராக நியமித்துள்ளதுடன் நிதி, பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சுப் பொறுப்புக்களையும் அவரிடம் ஒப்படைத்துள்ளேன்.

அதேவேளை, திறமைமிக்கவர்களை அமைச்சரவைக்கு உள்வாங்கி வருகின்றேன். அடுத்த வாரத்துக்குள் அமைச்சரவை நியமனம் முழுமை பெறும்.

அமைச்சரவை நியமனம் முழுமை பெற்றவுடன் ஜனாதிபதி பதவியிலிருந்து நான் விலகுவேன் என்று சில ஊடகச் செய்திகளைப் பார்த்தேன். எனினும், நான் ஒருபோதும் பதவி விலகமாட்டேன்.

ஜனாதிபதி-பிரதமர்-அமைச்சரவை ஓரணியில் செயற்பட்டால்தான் நாட்டுப் பிரச்னைகளுக்கு விரைந்து தீர்வுகாண முடியும்.

இந்தப் புதிய அரசு சவால்களை எதிர்கொண்டு வெற்றிநடை போடும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. இதற்கு அனைவரினதும் ஒத்துழைப்பு மிகவும் அவசியம்.

எதிரணியினரை நான் பகைக்கவில்லை. அவர்களையும் அரவணைத்துக்கொண்டு நாட்டுக்காக நாம் அனைவரும் பணியாற்ற வேண்டும்” என ஜனாதிபதி மேலும் கூறினார் என்றார் அமைச்சர் பீரிஸ். (அ)

## கோட்டாபய...

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆதரவு ரணிலுக்கு இருப்பதை இந்த அறிஞர்கள் உணர வேண்டும். இலங்கை நிலை இன்னும் மோச மடைவதைத் தடுக்கவே இவர் முன்னிறுத்தப்படுகிறார். மக்களின் ‘கோ-கோட்டா’ புரட்சியால் ஆடிப்போயிருக்கும் கோட்டாபய, தப்பியோடிய மஹிந்த இவர்களால் ராஜபக்ஷ குடும்பம் செல்வாக்கிழந்துவிட்டது வெளிப்படை. அண்ணனைப்போல கோட்டாபயவையும் ஓடவைப்பதற்கு முன், ஒரு மாற்று அரசியல் ஏற்பாடு செய்யப்படும்வரை இந்த உலக நாடுகள் காத்திருக்கும். இலங்கைக்கு அவசர உதவிகளை வழங்கவே அவர்கள் காத்திருக்கின்றனர். இப்போது, ஈழத் தமிழர்கள் இந்த அரசியல் மாற்றங்களில் பங்கேற்கத் தவறினால், நிலையற்ற அரசின் அதிபராக கோட்டாபய தொடர்வதை அவர்கள் விரும்புகிறார்கள் என்று தான் தோன்றும். தயவு செய்து சிந்திப்பீர்.

மீண்டும் சந்திப்போம். வணக்கம்.

ஈழநாடு
Eelanadu

# எமது மீனவருடன் பேச்சு நடத்தியே கச்சதீவு விடயம் குறித்து தீர்மானம்

## மாவை சேனாதிராசா கூறுகிறார்



கொழும்பு, மே. 29

கடற்தொழிலாளர்களின் கருத்துக்களை அறிந்து கொண்ட பின்னரே கச்சதீவு விடயம் பற்றி தமிழரசுக் கட்சியின் நிலைப்பாடு அறிவிக்கப்படும் எனக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா தெரிவித்துள்ளார்.

தமிழகத்திற்கு விஜயம் மேற்கொண்ட இந்திய பிரதமர் மோடியிடம் தமிழக முதலமைச்சர் கச்சதீவை மீட்பதற்குரிய பொருத்தமான நேரம் இதுவென கோரிக்கை விடுத்திருந்தார்.

எனவே இது தொடர்பில் தமிழரசு கட்சியின் நிலைப்பாடு என்ன என வினவியபோதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இது இரண்டு நாடுகளின் உடன்படிக்கை. இந்த நிலையில் கச்சதீவு எங்களுடைய கடற்தொழிலாளர்களின் நலன்களுக்குச் சாதகமாக இருக்குமானால் எங்களுடைய கடற்தொழிலாளர்களின் நலன்களை ஒட்டி இந்திய அரசுடன் பேச வேண்டும்.

அதற்கு முன்னதாக கச்சதீவை இந்தியா பொறுப்பேற்க வேண்டும் என்ற தமிழக முதலமைச்சரின் கருத்து தொடர்பில் முதலில் எமது கடற்தொழிலாளர்களின் கருத்துகளை அறியவேண்டும்.

அவர்களின் கருத்துக்களை ஒட்டியே எங்கள் முடிவுகள் அமையும். அதற்கு முன்னதாக எழுந்தமானமாக கருத் துக்களைக் கூறமுடியாது.

அத்தோடு இலங்கை - இந்திய கடற்தொழிலாளர்களின் இழுவைப் படகு பிரச்னை தீர்க்கப்படாதுள்ளது.

எனவே அது தொடர்பில் இந்திய அரசுடன் பேசும்போது கச்சதீவு விடயம் பற்றியும் பேசவேண்டும். இதுவொரு இராஜதந்திர ரீதியான நடவடிக்கை - என்றார். (அ)

# இந்திய நிதி அமைச்சருடன் மிலிந்த மொரகொட சந்திப்பு



கொழும்பு, மே. 29

நாட்டில் தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடியை தீர்க்க, இந்தியாவின் ஒத்துழைப்பை மேலும் அதிகரிக்குமாறு இந்திய அரசிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமனை நேற்று முன் தினம் சந்தித்த, இந்தியாவுக்கான இலங்கை தூதுவர் மிலிந்த மொரகொட இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளதாக இந்திய ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

சர்வதேச நாணய நிதியத்தின் கடன் வேலைத்திட்டம் இறுதி செய்யப்படும் வரையில், இலங்கை எதிர்நோக்கும் நிதி நெருக்கடியை சமாளிக்க உதவுமாறு தூதுவர் இந்திய நிதி அமைச்சரிடம் கோரியுள்ளார்.

அத்தியாவசிய வர்த்தகப் பொருட்கள் மற்றும் எரிபொருள் உட்பட கொடுப்பனவு துறையில் உள்ள பற்றாக்குறையை நிவர்த்திப்பதற்கு, இந்தியாவினால் நடைமுறைப்படுத்தப்படும் கடன் திட்டத்தை அதிகரித்தல் மற்றும் மறுசீரமைத்தல் என்பன தொடர்பில் இதன்போது அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. (அ)

# கஞ்சா கடத்திச் சென்ற கணவன் - மனைவி கைது

முல்லைத்தீவு, மே. 29

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட, முத்துஜயன் கட்டு பகுதியில், கஞ்சா கடத்திச் சென்ற கணவன் மனைவி இருவரையும், ஒட்டு சுட்டான் பொலிஸார் நேற்று முன் தினம் மாலை கைது செய்துள்ளனர்.

ஒட்டுசுட்டான் தொட்டியடிப் பகுதியில், வீதி சோதனை நடவடிக்கையை மேற்கொண்ட பொலிஸார், மோட்டார் சைக்கிளில், சந்தேகமான முறையில் சென்ற கணவன் மனைவி இருவரையும் சோதனை செய்தபோது, ஒரு கிலோ 360 கிராம் கேரளா கஞ்சாவை, கடத்தி செல்ல முற்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

இதன் போது, 40 வயதுடைய பெண் ணும் அவரது கணவரான 49 வயதுடைய ஆணும் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்ட இருவரும், முத்துஜயன்கட்டு பகுதியை சேர்ந்தவர்கள். (அ)

# தண்ணீர் கட்டணம் செலுத்த தவறிய 85 அரசியல்வாதிகள்!

கொழும்பு, மே. 29

நாட்டில் 85 அரசியல்வாதிகள் தமது வீடுகளுக்கு பெற்றுக்கொண்ட தண்ணீருக்காக நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்கு கிட்டத்தட்ட 20 மில்லியன் ரூபாவை செலுத்தத் தவறியுள்ளதாக சிங்கள இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக நேற்று சனிக் கிழமை வெளியான சிங்கள இணை யத்தளத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

தண்ணீர்க் கட்டணத்தைச் செலுத்தத் தவறிய அமைச்சர்கள் மற்றும் பாராளு மன்ற உறுப்பினர்களில் தற்போதைய மற்றும் முன்னாள் அமைச்சர்கள் அடங்கிய குழுவும் உள்ளதாகவும், தண்ணீர் கட்டணத்தைச் செலுத்தாத அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் உயிரிழந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

தற்போதைய அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களின் செலுத் தாத தண்ணீர் கட்டணம் 7 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமானதாகவும், உயிரி ழந்த அரசியல்வாதிகளின் செலுத்தாத தண்ணீர் கட்டணம் 3 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமாக உள்ளதாகவும் நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை தெரிவித்துள்ளது.

இவர்களில் கிட்டத்தட்ட 50 அரசி யல்வாதிகளின் செலுத்தாத தண்ணீர் கட்டணம் 6 தொடக்கம் 10 லட்சம் ரூபா வரை உள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

இந்த அரசியல்வாதிகள் பல வருடங்களாக தண்ணீர் கட்டணத்தைச் செலுத்த தவறி வருவதாகவும், இது தொடர்பாக பல நினைவூட்டல்கள் வழங்கப்பட்டு வருவதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# மண்ணெண்ணெய் விநியோகம் அரசினால் நிறுத்தப்படவில்லை



கொழும்பு, மே. 29

நாடு முழுவதும் பெற் றோல் விநியோகம் இடம்பெற்றாலும், டீசல் மற்றும் மண்ணெண்ணெய் விநியோகம் தற்போது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக ஊடகங்களில் வெளியான செய்தியை மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர நிராகரித்துள்ளார்.

எந்தவொரு சந்தர்ப்பத்திலும் டீசல் மற்றும் மண்ணெண்ணெய் விநியோகத்தை நிறுத்தி வைக்கவில்லை என பெற்றோலியக் கூட்டுத்தாபனத் தலைவரும் தனக்கு அறிவித்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் வைத்தே எரிசக்தி அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து வெளியிட்ட அவர்,

எரிபொருள் நிரப்பு நிலையங்களில் கடமையாற்றும் ஊழியர்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில், மேலதிகமாக பொலிஸாரை கடமையில் ஈடுபடுத்த நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பல எரிபொருள் நிலைய உரிமையாளர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

தற்போது பல எரிபொருள் நிரப்பு நிலையங்களில் ஏற்படுகின்ற மோதல் நிலைமையை தவிர்ப்பதற்காக அவர்கள் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

மேலும், அனுராதபுரத்தில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தின் உரிமையாளரின் வீட்டின் மீது சிலர் தாக்குதல் மேற்கொண்டுள்ளனர். அவரது வீட்டை தாக்குவதால் எரிபொருள் கிடைக்கும் என்று எதிர்பார்ப்பது முட்டாள்தனமாக செயற்பாடாகும்.

இதேவேளை, மின்வெட்டு இன்றி மின்சாரத்தை தொடர்ந்து வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு முயற்சித்து வருகிறோம் - என்றார். (அ)

# ரயில்களில் பெட்டிகளை அதிகரிக்க நடவடிக்கை

கொழும்பு, மே. 29

பேருந்து கட்டண அதிகரிப்பை அடுத்து, ரயிலில் பயணிக்கும் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதால், ரயில் பெட்டிகளை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக, தொடருந்து திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதனால், மேலதிக ரயில் சேவை மற்றும் ரயில் பெட்டிகளின் எண்ணிக்கையை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படுவதாக, திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, பேருந்து கட்டண அதிகரிப்பினால், ரயில் பயணிகளின் எண்ணிக்கை நாளாந்தம் அதிகரித்து வருவதை கருத்திற்கொண்டு, இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட உள்ளதாக, ரயில்வே பொது முகாமையாளர் தம்மிக்க ஜயசுந்தர குறிப்பிட்டார்.

இதேவேளை, எரிபொருள் விலை ஏற்றத்தால், ரயில் திணைக்களத்திற்கு, நாளாந்தம் 15 மில்லியன் ரூபா நட்டம் ஏற்படுவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நிலையில், அத்தியாவசிய ஊழியர்களை, ஒப்பந்த அடிப்படையில் இணைத்துக் கொள்வதற்கும், பொது நிர்வாக சேவை ஆணைக்குழுவின் அனுமதி பெறப்பட்டுள்ளதாக, ரயில்வே பொது முகாமையாளர் தம்மிக்க ஜயசுந்தர கூறினார். (அ)

# சட்டவிரோதமாக, நாட்டில் இருந்து வெளியேற முற்பட்ட 45 பேர் கைது

கொழும்பு, மே. 29

சட்டவிரோதமாக, நாட்டில் இருந்து வெளியேற முற்பட்ட 45 பேர், கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடற்படையினரால், தெற்கு மற்றும் மேற்கு கடற் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது, சந்தேகத்திற்கிடமான முறையில் பயணித்துக் கொண்டிருந்த இரு மீன் படகுகள் சோதனைக்குட்படுத்தப்பட்டபோது, குறித்த 45 பேரும் கைது செய்யப்பட்டுள்ளதாக, கடற்படை ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

தெற்கு கடற்பரப்பில் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள, கஜபாகு கப்பலால், 26 நபர்களுடன் பயணித்துக் கொண்டிருந்த நீண்ட நாள் மீன் பிடிப்படகு ஒன்றும், மேலும் 19 பேருடன் பயணித்துக் கொண்டிருந்த பிறிதொரு மீன் பிடிப்படகு ஒன்றும், இவ்வாறு சுற்றிவளைக்கப்பட்டது.

குறித்த இரு படகுகள் ஊடாகவும், சட்டவிரோதமாக, நாட்டில் இருந்து வெளியேற முற்பட்டவர்கள், கற்பிட்டி, சிலாபம், புத்தளம், நீர்கொழும்பு மற்றும் கிளிநொச்சி ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் ஆவர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட நபர்களுடன், அவர்கள் பயணித்த படகுகளும், அடுத்த கட்ட சட்ட நடவடிக்கைகளுக்காக, உரிய தரப்பினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக, கடற்படை ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 29.05.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்
6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை (நேரலை)
10.30 மணி : அறிந்தும் அறியாமலும்
11.00 மணி : BEAT BOX
11.30 மணி : தடை அதை உடை-தற்காப்புக்கலை
**பகல்**
12.00 மணி : வீக் என்ட் கொண்டாட்டம் (நேரலை)
1.00 மணி : மழலைகள் நேரம்-சிறுவர் நிகழ்ச்சி



1.30 மணி : வீக் என்ட் மூவி-செல்லமே
04.30 மணி : உதவும் கரங்கள்
5.00 மணி : COFFE WITH பிரமுகர்
6.00 மணி : கலக்கல் ஸ்ரார்-
திறமையாளர்களுக்கான களம்
**இரவு**
07.00 மணி : SPOTLIGHT-M.A- சுமந்திரன் -



நாடாளுமன்ற உறுப்பினர்
08.00 மணி : இரவுச் செய்திகள்



09.00 மணி : டான் பட்டிமன்றம்
10.00 மணி: -நேர்கொண்ட பார்வை - கொழும்பு
மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் -



## DAN COMEDY HD

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு
**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன்
கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா
**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)
**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஒய்வெடு நிலவே
**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு)
நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு)
வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம்
(கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்
**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம்
மாதிரி வினாத்தாள்
**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம்
மாதிரி வினாத்தாள்

## ஓம் ரிவி

**காலை**
05.00 மணி : சிவாய மந்திரம்
06.00 மணி : சுப்ரபாதம்
06.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.20 மணி : திருமுறையும் பொருளும்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பஜனை
10.30 மணி : தமிழககோவில் திருவிழா
11.00 மணி : பக்திமலர்
**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
06.00 மணி : கந்தசஷ்டி கவசம்
**இரவு**
07.00 மணி : செய்திகள்
07.30 மணி : அருளுரை
08.00 மணி : திருவிழா-01

## CHANNEL HOLY MARY

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : இயேசுவின் போதனைகள்
(மறுஒளிபரப்பு)
8.00 மணி : ஜெபமாலை
09.30 மணி : மன்றாடு
10.00 மணி: விவிலியம் அறிவோம்
(திருகோணமலை)
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
04.00 மணி: மறைக்கல்வி(மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை
(மறு ஒலிபரப்பு)
7.00 மணி : ஞானவழி
7.30 மணி : படம்

## Pirai Television

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்
**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஜ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்
**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு